Registered as a Newspaper

# உதயன் சஞ்சீவி

சுடர் : 37 | கதிர் : 331 | ஞாயிற்றுக்கிழமை 23 ஒக்ரோபர் 2022 | ஐப்பசி 06 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16+08 | விலை: 60/=

# கொள்ளை, திருட்டுச் சம்பவங்கள் இரண்டு மடங்காக அதிகரிப்பு

## யாழ்ப்பாணம் மற்றும் தெல்லிப்பழை பொலிஸில் அதிகளவு முறைப்பாடுகள்

| | கொள்ளை | திருட்டு |
|---|---|---|
| 2021 | 87 | 308 |
| 2022 (செப்.) | 87 | 525 |

யாழ்., ஒக்ரோபர் 23

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது, இந்த ஆண்டு அதிகளவான வழிப்பறி, கொள்ளை, திருட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன எனப் பொலிஸ் நிலையப் பதிவுகளிலிருந்து தெரிய வந்துள்ளது. 15

## சிறுமியின் சங்கிலியை அறுத்த சிப்பாய் பிடிப்பு!

'முறையான கவனிப்பின்' பின்னர் பொலிஸில் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 23

15 வயதுச் சிறுமியின் சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பிக்க முயன்ற சிப்பாய், பொதுமக்களால் மடக்கிப்பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். இந்தச் சம்பவம் பலாலி - வள்ளுவர்புரத்தில் நேற்று மதியம் நடைபெற்றது. 15

## தீபாவளியன்று மின்வெட்டு இல்லை

கொழும்பு, ஒக். 23

நாளை திங்கட்கிழமை தீபாவளியன்று மின்வெட்டு நடை 15

## போதைக்கு அடிமையானவர் திருட்டுக் குற்றச்சாட்டில் கைது

யாழ்ப்பாணம், ஒக். 23

கடந்த ஆண்டு வீடுடைத்து பத்து இலட்சம் ரூபா பெறுமதியான நகைகள் மற்றும் அலைபேசி என்பவற்றை திருடிய குற்றச்சாட்டில் சித்தங்கேணிப் பகுதியைச் சேர்ந்த 29 வயது இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் உயிர்கொல்லி ஹெரோய்ன் 15

# போதைப்பாவனை ஆண்மையைப் பாதிக்கும்

## மருத்துவ கலாநிதி பா.பாலகோபி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 23

உயிர்கொல்லி போதைப்பொருள் பாவனையால் ஆண்கள், ஆண்மைத்தன்மையை காலப்போக்கில் இழந்துவிடுவார்கள். கடந்த காலங்களில் 10 இல் ஒரு குடும்பத்தினருக்குத்தான் 15

அன்பான வாடிக்கையாளருக்கு
மகிழ்ச்சியான செய்தி

கொழும்பு விலையில் யாழ். நகரில்

உங்களுக்குத் தேவையான அனைத்து வகையான பொருட்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

சில வருட காலமாக இயங்கி வரும் எமது ஸ்தாபனத்தில் விசேட விலைக் கழிவில் பெற்றுக்கொள்ளலாம்.

மொத்தக் கொள்வனவிற்கு 10% கழிவு



- பான்ஸிப் பொருட்கள்
- சில்வர் பொருட்கள்
- பை (Bag) வகைகள்
- கிளாஸ் வகைகள்
- மாபிள் வகைகள்
- பாதணி வகைகள்
- அன்பளிப்புப் பொருட்கள்
- விளையாட்டுப் பொருட்கள்
- தையல் உபகரணங்கள்
- கவரிங் பொருட்கள்
- பிளாஸ்ரிக் பொருட்கள்
- முகக் கவசங்கள் (Mask)
- மணிக்கூடுகள்
- குடை, மழைக்கவசங்கள்
- பாடசாலை பொருட்கள்
- அழகுசாதனப் பொருட்கள்

சரவணபவன் பான்ஸி ஹவுஸ்
26/1, ஜும்மா பள்ளிவாசல் லேன்
(செம்மா தெரு ஒழுங்கை) யாழ்ப்பாணம்.
உரிமையாளர்:- தே.கலைத்தாசன் (கரன்)
021 315 5900, 077 468 3354



உங்கள் தங்கத்திற்கு பணத்துடன் பரிசு மழை

உங்கள் நம்பிக்கையை வென்ற சிங்கர் ஃபினான்ஸிடமிருந்து
உங்கள் தேவைகளுக்கு தங்கப் பவுணுக்கான அதிகூடிய முற்பணத்துடன் பெறுமதியான பரிசு மழை

செப்டெம்பர் 26 ஆம் திகதி முதல் உங்கள் கிளிநொச்சி நகரில் எங்கள் சேவை ஆரம்பம்!



ரூ. 250,000 இற்கு அதிகமான முதல் 5 தங்கக் கடன்களுக்கு
ரூ. 100,000 இற்கு அதிகமான முதல் 25 தங்கக் கடன்களுக்கு
ரூ. 75,000 இற்கு அதிகமான முதல் 10 தங்கக் கடன்களுக்கு
ரூ. 50,000 இற்கு அதிகமான முதல் 10 தங்கக் கடன்களுக்கு

SINGER FINANCE

A - 9 வீதி, கிளிநொச்சி
076 098 7155, 076 098 7156



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகாதாரத்துறையினர் திடீர் பாய்ச்சல்

# போதைமருந்து விநியோகிக்கும் 2 மருத்துவர்கள் அடையாளம்

யாழ்ப்பாணம், ஒக். 23

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உயிர் கொல்லி போதைமருந்துப் பாவனை அதிகரித்துள்ள நிலையில், மருந்து விற்பனை நிலையங்கள் மீது உணவு மற்றும் மருந்து பரிசோதகர்கள் திடீர் சோதனை நடத்தியுள்ளனர். இதன்போது பிரதான மருந்தகங்களிலிருந்து அதிகளவான உயிர்கொல்லி போதை மாத்திரைகளை இரண்டு மருத்துவர்கள் கொள்வனவு செய்துள்ளமை தெரியவந்துள்ளது.

யாழ்ப்பாணம், வலிகாமம் பகுதியிலுள்ள தனியார் மருத்துவமனை ஒன்றின் மருத்துவர் அதிகளவு உயிர்கொல்லி போதை மாத்திரைகளைக் கொள்வனவு செய்துள்ளார். அவரது மருந்தகம், சுகாதார மருத்துவ அதிகாரியால் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளது. அரச மருத்துவமனைகளில் பணிபுரியாது தனியே தனது மருத்துவமனையில் பணிபுரியும் அந்த மருத்துவரின் மருந்தகத்தில் அதிகளவான உயிர்கொல்லி போதை மாத்திரைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அதேவேளை, இந்த மருத்துவமனையிலிருந்து உயிர்கொல்லி போதை மாத்திரைகள் யாருக்கு விநியோகிக்கப்பட்டன அல்லது மருத்துவத் தேவைக்காக யாருக்கு வழங்கப்பட்டன என்ற விவரங்கள் எதுவும் பதிவேட்டில் காணப்படவில்லை.

மேலும் யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல மொத்த மருந்து விற்பனை நிலையத்திலிருந்து வவுனியாவைச் சேர்ந்த மருத்துவர் மாதாந்தம் 400 பெட்டி உயிர்கொல்லி போதைமாத்திரை கொள்வனவு செய்துள்ளார். அவர் வவுனியாவிலுள்ள அரச மருத்துவமனை ஒன்றிலும் பணியாற்றுகின்றார். இவ்வளவு பெருந்தொகை உயிர்கொல்லி போதை மாத்திரை மருத்துவத்துக்காக தேவைப்பட்டிருக்காது என்று மருத்துவ நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.


இதேவேளை - இவர்களுக்கு எதிரான சட்டநடவடிக்கை எடுக்கும் அதிகாரம் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு மாத்திரமே காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ஔ-5)

## போராட்டக்காரர்கள் கோரிய புதிய அரசமைப்பும் நிறைவேறும்

### ஜனாதிபதி ரணில் உறுதியளிப்பு

கொழும்பு, ஒக். 23

அரசியல், பொருளாதார நெருக்கடிகளுக்குத் தீர்வு காணும் செயற்றிட்டங்களுக்கு 22ஆம் திருத்தச் சட்டம் உறுதுணையாக இருக்கும். எனினும், இது தற்காலிக ஏற்பாடே. போராட்டக்காரர்கள் உட்பட அனைவரும் விரும்பும் புதிய அரசமைப்பையும் நாம் நிறைவேற்றியே ஆக வேண்டும். அதற்கான பணிகள் விரைந்து முன்னெடுக்கப்படும் - இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது:-

20 ஆவது திருத்தச் சட்டம்தான் நாட்டை இருண்ட யுகத்துக்குள் தள்ளியது. இதனால் சர்வதேசத்திடம் இலங்கை கையேந்த வேண்டிய நிலையும் ஏற்பட்டது. நாடு மீண்டெழ அரசமைப்பில் அவசரமாகத் திருத்தத்தை மேற்கொள்ளவேண்டி இருந்தது.

இந்தநிலையில், 22 ஆவது திருத்தச் சட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

அரசமைப்பின் 22 ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்த அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். குறிப்பாக ஐக்கிய மக்கள் கூட்டணியினர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதேவேளை, இந்தத் திருத்தச் சட்டம் நிறைவேற முழு மூச்சாகப் பாடுபட்ட நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தனிச் சிறப்புக்குரியவர் - என்றார். (அ-ஔ-22)

## சுற்றுலாவுக்குப் பாதுகாப்புள்ள நாடுகளில் இலங்கைக்கு இடம்

கொழும்பு, ஒக். 23

பிரபல இணையத்தளமொன்று உலகில் சுற்றுலாத்துறைக்குப் பாதுகாப்பான நாடுகளைப் பட்டியலிட்டுள்ளது. இதில் இலங்கைக்கும் இடம் கிடைத்துள்ளது. முதல் 12 நாடுகளில் இலங்கையை உள்ளடக்கியுள்ள அந்த இணையத்தளம், 'சுற்றுலாவுக்கான கலாசாரம் இலங்கையில் தாராளமாகவே நிலவுகின்றது' என்று குறிப்பிட்டுள்ளது.

கொரோனாப் பெருந்தொற்றாலும், அதன்பின்னர் ஏற்பட்ட அரசியல் கலவரங்களாலும் இலங்கையின் பொருளாதாரம் பெரும் வீழ்ச்சியைச் சந்தித்தது. பொருளாதாரப் பின்னடைவில் இருந்து இலங்கையை மீட்க வேண்டுமாயின் சுற்றுலாத்துறையை மேற்படுத்தவேண்டும் என்பதுதான் இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாடாகவும் உள்ளது. இதற்காக இலங்கை அரசாங்கம் பல்வேறுபட்ட முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. இந்தப் பின்னணியில் இலங்கைக்குக் கிடைத்துள்ள இந்த அங்கீகாரம் ஒரு திருப்புமுனை என்று கருதப்படுகின்றது.

இலங்கையின் பெரும்பான்மையான கலாசாரம் பௌத்தமாக இருக்கும் நிலையில், அவர்களின் பழக்கவழக்கங்கள் அமைதியாகவும் வரவேற்கத்தக்கதாகவும் இருப்பதால், பயணம் செய்வதற்கு இலங்கை மிகவும் பாதுகாப்பான இடமாக அமைகிறது என்று அந்த இணையத்தளம் குறிப்பிட்டுள்ளது. (ம)

## சதொசவில் மட்டுப்பாடு தளர்வு

லங்கா சதொசவில் பொருள்களைக் கொள்வனவு செய்யும் போது, சிவப்பு சீனி தவிர்ந்த ஏனைய அனைத்துப் பொருள்களுக்கும் விதிக்கப்பட்டிருந்த மட்டுப்பாடு நீக்கப்பட்டுள்ளது.

சிவப்பு சீனிக்காக விதிக்கப்பட்டுள்ள மட்டுப்பாட்டை அடுத்த வாரத்தில் தளர்த்த நடவடிக்கை எடுக்கப்படுமென சதொச நிறுவனம் தெரிவித்துள்ளது. (அ-ஔ-இ)

## இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** நீண்டநாள் முயற்சி ஒன்று வெற்றியாகும். பிள்ளைகளால் நன்மை உண்டாகும். பணியிடத்தில் உங்கள் ஆலோசனையை ஏற்பார்கள். உறவினரால் உதவி உண்டாகும்.

**இடபம்:** பகைவர் தொல்லை அகலும். வியாபாரத்தில் இருந்த பிரச்சினையை சரி செய்வீர்கள். உங்கள் அணுகுமுறையால் ஆதாயம் அதிகரிக்கும்.

**மிதுனம்:** தடைகளை சரி செய்து வெற்றி அடைவீர்கள் உங்கள் செயல்களில் லாபம் உண்டாகும். தொழிலில் சில நுணுக்கங்களைக் கற்றுக் கொள்வீர்கள்.

**கடகம்:** உங்கள் வார்த்தைகளுக்கு மதிப்பு அதிகரிக்கும். எதிர்பார்ப்பு நிறைவேறும். எதிர்பார்த்த வருமானம் வரும். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும்.

**சிம்மம்:** குழப்பத்துக்கு இடமளிக்காதீர். திட்டமிட்ட செயல்கள் வெற்றியாகும். வேலைப்பளு அதிகரிக்கும். பணிகளில் கூடுதல் கவனம் தேவைப்படும். நிதிநிலை உயரும்.

**கன்னி:** பணத் தட்டுப்பாட்டின் காரணமாக முயற்சி இழுபறியாகும். சிந்தித்து செயற்பட வேண்டிய நாள். தொழிலில் எதிர்பார்த்த லாபம் காண முடியாமல் போகும்.

**துலாம்:** எதிர்பார்ப்பு பூர்த்தியாகும். இழுபறியாக இருந்த முயற்சி நிறைவேறும். பணியாளர்களுக்கு புதிய பொறுப்பு வந்து சேரும். செல்வாக்கு உயரும். ஆதாயம் உண்டாகும்.

**விருச்சிகம்:** நீண்ட நாள் எண்ணம் நிறைவேறும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். தொழிலை விரிவு செய்வீர்கள். பணியாளர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும்.

**தனுசு:** திட்டமிட்டு செயற்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள். வெளி வட்டாரத்தில் மதிப்பு உயரும். பூர்வீக சொத்தில் ஏற்பட்ட பிரச்சினை விலகும். வழக்கு உங்களுக்கு சாதகமாகும்.

**மகரம்:** செயல்களில் நெருக்கடி உண்டாகும். உதவி புரிவதாக சொன்னவர்களை சந்திக்க முடியாமல் போகும். சந்திராஷ்டமம் இருப்பதால் முயற்சி இழுபறியாகும்.

**கும்பம்:** உங்கள் செயல்களில் லாபம் உண்டாகும். நினைத்ததை சாதித்து மகிழ்வீர்கள். தம்பதிகளுக்குள் ஒற்றுமை அதிகரிக்கும். உங்கள் திறமையால் எண்ணியதை அடைவீர்கள்.

**மீனம்:** பணியில் ஏற்பட்ட பிரச்சினை விலகும். உங்களுக்கு எதிராக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர். நெருக்கடி விலகும். எதிர்பார்த்த நன்மைகளை அடைவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தின் மாணவ முதல்வர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை வித்தியாலயத்தின் பிரதான மண்டபத்தில் வித்தியாலய உபஅதிபர் தலைமையில் இடம்பெற்றது. மாணவ தலைவர்களுக்கான சின்னங்களை வித்தியாலய அதிபர் அணிவித்தார். (ச–27)

# அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் ஐ.எம்.எப். கடன் கிடைக்கும்

கொழும்பு, ஒக். 23

அடுத்த ஆண்டின் முற்பகுதியில் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து முதலாவது கடன் தவணையை பெற்றுக்கொள்ள முடியுமென வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

தமது குழு வொஷிங்டனுக்கு சென்றபோது சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து சகல கடன் வழங்குநர்களையும் அழைத்து கலந்துரையாடியதாக கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் தெரிவித்துள்ளார். (அ–ஓ–இ)

அமெரிக்க லொத்தர் இலவச விசா
ஏமாற்றங்களை தவிர்க்க உடனே பதியுங்கள்
Passport அவசியமில்லை
18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
இந்த வருடம் A/L எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்
வெளிநாட்டு உதவி இல்லாதவர்களுக்கும் வெளிநாடு செல்ல காசு இல்லாதவர்களுக்குமான ஒரே ஒரு அரிய சந்தர்ப்பம்
V2 Travels
இதுவரை எமக்கூடாக விண்ணப்பித்த நூற்றுக்கணக்கானோர் அமெரிக்காவில் குடும்பத்துடன் வசிக்கின்றார்கள்
0768226244

குடும்பமாக அமெரிக்காவில் குடியேற
இதோ அரிய வாய்ப்பு!
அமெரிக்க லொத்தர் விசா
18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் விண்ணப்பிக்கலாம்
பாஸ்போர்ட் அவசியமில்லை
075 330 5500
US DV LOTTERY 2022 - 2023
உடனே பதிவு செய்யுங்கள்
விரைவாகவும் - பாதுகாப்பாகவும்
உங்கள் உறவுகளுக்கு பொதிகளை அனுப்ப
021 221 5656 – 076 122 1566 – 070 330 5500

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் ஓட்டுமடத்தில் 15 பரப்புக் காணி விற்பனைக்கு**

- ✓ஓட்டுமடம் சந்தியிலிருந்து அராலி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன்(காரைநகர் செல்லும் பிரதான காபெட் வீதி)
- ✓யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்டது.
- ✓2 பரப்பாகவும், 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- ✓யாழ். பஸ்நிலையத்திலிருந்து 1 1/2 KM தூரம்
- ✓பார்வையிடும் நேரம்: காலை 06.00 - மாலை 6.00

தொடர்பு: 077 911 6983
076 755 8606

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணிலைக் கட்டுப்படுத்தின் அரசாங்கமே அழிந்துவிடும்

## மஹிந்தானந்த எச்சரிக்கை



**கொழும்பு, ஒக். 23**

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பொதுஜன பெரமுன கூறுவதைச் செய்யும் நபர் அல்லர். ரணில் விக்கிரமசிங்கவை பொதுஜன பெரமுன கட்டுப் படுத்த முயற்சித்தால், அது அரசாங்கத்தின் அழிவாக அமைந்து விடும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது: நெருக்கடியில் இருந்து மீளவே நாங்கள் ரணில் விக்ரமசிங்கவை ஜனாதிபதியாகத் தெரிவு செய்தோம். இரண்டு வருடங்களுக்கு அவர் பணியாற்ற தேவையான ஒத்துழைப்பை வழங்குவோம் என்ற இணக்கப்பாட்டின் அடிப்படையில் அவரை ஜனாதிபதியாக தெரிவு செய்தோம்.

மறுபுறம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாங்கள் கூறுவதை கேட்கமாட்டார். எனினும் எங்களின் ஒத்துழைப்புடன் வேலை செய்கிறார். அவர் அனுபவமுள்ள அரசியல்வாதி.

நாங்கள் அவரை கட்டுப்படுத்தும் அளவுக்கு அவர் முட்டாள் அல்லர். நாங்கள் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவுசெய்து, அவரைக் கட்டுப்படுத்த முயற்சித்தால், அதுதான் அரசாங்கத்தின் அழிவாக இருக்கும் - என்றார். (ம)

# சமத்துவம் இல்லாவிடின் மகத்துவம் நிலைக்காது

## '22' தொடர்பில் சிறிநேசன் தெரிவிப்பு



கொழும்பு, ஒக். 23

சமத்துவம், சமவுரிமை இல்லாத நாட்டில் மகத்துவம் விளையாது என்பதே 74 ஆண்டுகள் நாம் பெற்ற படிப்பினையாகும் இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, புதிய அரசமைப்பு மூலம் தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை வழங்கினால் சரித்திரத்தில் நிலைப்பார். இந்த நாட்டையும் மக்களையும் வளப்படுத்த ஒரேவழி பல்லின மக்களையும் நல்லிணக்கச் செயற்பாடுகள் மூலம் ஐக்கியப்படுத்த வேண்டும். அதனைச் செய்வதாயின் இன, மத சார்பற்ற அரசமைப்பும், ஆட்சி முறையும் இந்த நாட்டில் மலர வேண்டும். மூவின மக்களும் ஒன்றிணைந்து வாழவேண்டுமாயின் தேசிய இனப் பிரச்சினை நியாயமாகவும் நிலையாகவும் தீர்க்கப்பட வேண்டும் - என்றார். (ம-22)

# கடற்பரப்புகளில் இடியுடன் மழை

யாழ்ப்பாணம், ஒக். 23

வடக்கு அந்தமான் கடல், தெற்கு அந்தமான் கடல் மற்றும் தென்கிழக்கு வங்காள விரிகுடாவை ஒட்டிய பகுதிகளில் குறைந்த காற்றமுத்த தாழ்வுப் பகுதி நேற்று உருவாகி அதே பிராந்தியத்தில் நிலைகொண்டுள்ளது என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. இதன் காரணமாக, பலத்த காற்று மற்றும் கடல் சீற்றத்துடன் காணப்படும் என்று செம்மஞ்சள் எச்சரிக்கையும் விடுக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள அறிவிப்பில்;

இந்தக் காற்றமுத்தத் தாழ்வுப் பகுதி மேற்குவடமேற்கு நோக்கி நகர்ந்து, ஒக்ரோபர் 23ஆம் திகதி (இன்று) ஆழ்ந்த காற்றமுத்த தாழ்வு மண்டலமாகவும், பின்னர் ஒக்ரோபர் 24ஆம் திகதி (நாளை) சூறாவளியாகவும் வலுப்பெற வாய்ப்புள்ளது. அதன்பிறகு, படிப்படியாக வடக்கு, வடகிழக்கு திசையில் நகர்ந்து, ஒக்ரோபர் 25 ஆம் திகதி மேற்குவங்கம் மற்றும் பங்காளதேஷ் கடற்கரைக்கு அருகே சென்றடையும் என எதிர்பார்க்கப்படுகிறது

இதன்போது, காற்றின் வேகம் மணிக்கு 40-50 கி.மீ ஆக இருக்கும் அதேவேளை, வடக்கு மற்றும் கிழக்குத் திசைகளுக்கு இடைப்பட்ட கடல் பகுதிகளில் மணிக்கு 60-70 கி.மீ வரை அதிகரிக்கலாம். கடற்பரப்புகளுக்கு மேல் பலத்த மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும். கடல் மிகவும் கொந்தளிப்பாக இருக்கும் - என்றுள்ளது. (ம)

## இறக்குமதித்தடை

# தவித்த முயலடித்தால் உச்சபட்ச நடடிக்கை!

## கைத்தொழில் அமைச்சர் எச்சரிக்கை



கொழும்பு, ஒக். 23

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக இறக்குமதிப் பொருள்கள் சிலவற்றுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனை சந்தர்ப்பமாக பயன்படுத்தி நுகர்வோரிடமிருந்து அநீதியான முறையில் பணமீட்டும் வர்த்தகர்கள் மீது கடும் சட்ட நடவடிக்கை பிரயோகிக்கப்படும் - இவ்வாறு பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.

மாபிள்கள் உட்பட குளியலறை சாதனப் பொருள்கள்சார் தொழிற்றுறையினருடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலையில், உள்நாட்டு கைத்தொழிற்துறையை பாதுகாப்பதற்காக சகல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும். இறக்குமதி நிறுத்தப்பட்ட சந்தர்ப்பத்தை தவறாக பயன்படுத்தவேண்டாம். நுகர்வோரிடமிருந்து அநீதியான முறையில் பணத்தை ஈட்டுவதற்கு வர்த்தகர்கள் முனைவார்களாயின் அவர்களுக்கெதிராக உச்சபட்ச நடவடிக்கை பிரயோகிக்கப்படும். வரியை தளர்த்தவேண்டும் என்பதே எமது தனிப்பட்ட நிலைப்பாடாகும் - என்றார். (ச-இ)

# நட்சத்திர விடுதிகளில் உணவைத் தவிர்க்குக

## அரச நிறுவனங்களுக்கு அறிவுறுத்து



கொழும்பு, ஒக். 23

அரச நிறுவன தலைவர்களால் மேற்கொள்ளப்படும் கூட்டங்கள் மற்றும் விழாக்களில் நட்சத்திர ஹோட்டல் உணவுகளைத் தவிர்க்குமாறு அரசாங்கம் அறிவுறுத்தியுள்ளது.

நிர்வாக கூட்டங்களின் போது நீண்ட காலமாக நட்சத்திர ஹோட்டல்களின் உணவுகளை சாப்பிடுவது வழக்கமானதொன்றாக கடைப்பிடிக்கப்படுகிறது. ஆயினும் நாடு தற்போது எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமையை கருத்திற் கொண்டு இவ்வாறான ஆடம்பர செலவுகளை மேற்கொள்வது ஏற்புடையதல்ல.

அரச நிறுவனங்களின் செலவுகளை இயன்றவரை மட்டுப்படுத்தும் நோக்கிலேயே இவ்வாறு அறிவுறுத்தப்படுகிறது என அரசாங்கத்தின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ச-இ)

# '22' நிறைவேற்றத்தை அடுத்து ராஜபக்சக்களிடையே மோதல்!

## கொழும்பு அரசியலில் பரபரப்பு

கொழும்பு, ஒக். 23

22 ஆவது அரசமைப்புத் திருத்தம் நிறைவேறியதை அடுத்து ராஜபக்ச குடும்பத்துக்குள் கருத்து மோதல்கள் ஏற்பட்டுள்ளன என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது.

22 ஆவது திருத்தத்தை எதிர்ப்பதை ராஜபக்சக்களில் பலரின் நோக்கமாக இருந்தது. எனினும், 22 ஆவது திருத்தத்துக்கு ஆதரவு வழங்கவேண்டும் என்று அந்தக் குடும்பத்தின் மூத்த உறுப்பினர் சமல் ராஜபக்ச, பொதுஜன பெரமுனவின் பல உறுப்பினர்களுக்கு முன்பாக தனது கருத்தை வெளிப்படுத்தியமையே இந்த மோதலுக்குக் காரணமாகும். மேலும் பஸில் ராஜபக்சவுக்கு எதிராக சமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார் என்றும் தெரியவருகின்றது.

அதேவேளை, அண்மைய நாள்களில் நாமல் ராஜபக்சவால் அழைப்பு விடுக்கப்பட்ட எந்தவொரு கலந்துரையாடலிலும் சமல் ராஜபக்ச அல்லது ஷசீந்திர ராஜபக்ச பங்கேற்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. இது தவிர நாமல் ராஜபக்ச மற்றும் ஷசீந்திர ராஜபக்ச இருவரும் தமக்கு நெருக்கமான பொதுஜன பெரமுன குழுவுடன் தனித்தனியாக செயற்பட்டு வருகின்றனர் எனத் தெரியவந்துள்ளது.

இந்தச் சிக்கல்களில் மஹிந்த ராஜபக்சமௌனமானகொள்கையைக் கடைப்பிடித்து வருகிறார் எனவும் முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச சமல் ராஜபக்சவுடன் இணைந்து செயற்படுகிறார் எனவும் தகவல் வெளியாகியுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## படிப்பினைகள் பலவிதம்

புதியதொரு பிரதமரின் தேவைப்பாடு பிரிட்டனில் தற்போது உணரப்பட்டிருக்கின்றது. முன்னாள் பிரதமர் போரிஸ் ஜோன்சன் அந்தப் பதவியில் இருந்து விலகியதை அடுத்து புதிய் பிரதமராகப் பொறுப்பேற்ற லிஸ் ட்ரஸ், வெறும் 45 நாள்களில் தனது பதவியில் இருந்து விலகியிருக்கின்றார். லிஸ் ட்ரஸ் பிரதமராகப் பொறுப்பேற்றதும் 'இலங்கையில் கோத்தாபய செய்ததைப்போன்று' பொருளாதாரத்தைச் சீர்படுத்துகிறேன் – பலப்படுத்துகிறேன் என்று சில திட்டங்களைக் கொண்டுவந்தார். செல்வந்தர்களுக்கான வரிக்குறைப்பு மற்றும் வரி விலக்கு என்பனவற்றை அவர் நிபுணர்களின் எச்சரிக்கையை மீறி நடைமுறைப்படுத்தினார். இருந்ததையும் இழந்த கதையாக பிரிட்டனின் பொருளாதாரம் மேலும் மோசமடைந்தது. இதையடுத்தே தனது வினைத்திறனற்ற நிலையை பகிரங்கமாக ஏற்றுக்கொண்டு நாற்பத்தைந்தே நாள்களில் பதவிக்கு விடைகொடுத்திருக்கின்றார் ட்ரஸ்.

ட்ரஸ் நடைமுறைப்படுத்திய திட்டங்கள், கொண்டிருந்த கொள்கைகள் எல்லாம் வேறுகதை. அது அவர்களின் நாடு சார்ந்தது. இங்கு கவனிக்கப்பட வேண்டிய விடயம் என்னவெனில், இந்த ஆட்சி மாற்றத்தின் பின்னணியில் பிரிட்டனில் எந்தக் கலவரங்களும் வெடிக்கவில்லை. ஆங்காங்கு இடம்பெற்ற சிறிதளவான ஜனநாயகப் போராட்டங்களும், ஊடகங்களின் விமர்சனங்களும், எதிர்க்கட்சிகளின் நேர்மையான சுட்டிக்காட்டல்களும், எல்லாவற்றுக்கும் மேல் ஒருவிதமான தன்னுணர்வும்தான் லிஸ் ட்ரஸின் பின்னால், அவர் பதவி விலகியமைக்கான காரணங்களாக இருக்கின்றன. பிரிட்டனுக்கும் மேற்கத்தேய நாடுகளுக்கும் இந்தக் கலாசாரம் மிகைப்பழக்கமான ஒன்று. திட்டங்கள் தோல்வியுற்று ஆட்சி பலவீனமாகின்றபோது அவர்கள் தாங்களாகவே விலகிவிடுவார்கள். கதிரைகளைச் சூடேற்றிக் கொண்டிருப்பதில் அவர்களுக்கு இம்மியும் உடன்பாடில்லை. லிஸ் ட்ரஸ் என்பவர் அந்த உச்சபட்ச ஜனநாயகக் கோட்பாட்டின் வழிவந்த ஒருவரே.

ஜூலை 9ஆம் திகதி கோத்தாபய அரசாங்கத்துக்கு எதிராக இலங்கையெங்கும் தீவிரமான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இதையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்களுக்குப் பயந்தொடுங்கிய அப்போதைய 'சர்வ அதிகாரங்களையும்' கொண்ட ஜனாதிபதி பிறிதொரு நாட்டில் தஞ்சமாகி அங்கிருந்தபடி தனது பதவி விலகலை அறிவித்தார். ஜூலை 9ஆம் திகதிக்கு முன்னர் கோத்தாபயவின் வினைத்திறனற்ற ஆட்சியைச் சுட்டிக்காட்டி எழுதாத ஊடகங்கள் இலங்கையில் இல்லை: விமர்சிக்காத எதிர்க்கட்சிகள் இல்லவேயில்லை. இத்தனைக்கும் '69 லட்சம் மக்களின் ஆணையுடன் ஆட்சிக்கு வந்தோம்' என்ற புராணத்தைத்தான் பெரமுன மீண்டும் மீண்டும் துதிபாடியதே தவிர, தமது ஆட்சிக்கு மக்கள் மத்தியில் உள்ள அபிப்பிராயத்தை நாடிபிடித்தும் பார்க்கவில்லை. குறைந்தபட்சம் தம்மைச் சுயபரிசோதனைக்கும் உட்படுத்தவில்லை. அந்த வகையில் மக்களின் பேரெழுச்சிக்கு அடிகோலியது இந்த மெத்தனப்போக்கே.


கோத்தாபய அரசாங்கத்தில் மட்டுமல்ல ரணில் அரசாங்கத்திலும் இந்தப்போக்கு தாராளமாகவே இருக்கத்தான் செய்கின்றது. இலங்கையில் நிலையான அமைதியும் நீடித்த பொருளாதார வளர்ச்சியும் ஏற்படுத்தப்பட வேண்டும், இலங்கையின் பொருளாதாரத்தைச் சூறையாடிய ஊழல் பேர்வழிகள் வெளிப்படுத்தப்பட வேண்டும், அத்தியாவசியப் பொருள்கள் தங்குதடையின்றிக் கிடைக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்துத்தான் பல்லாயிரம் மக்கள் வீதிக்கு இறங்கினார்கள். ஆனால், எந்தக் கோரிக்கைகளை முன்வைத்து மக்கள் வீதிக்கு இறங்கினார்களோ அவை இன்னமும் முழுதாக நிறைவேற்றப்பட்டபாடில்லை. விலைக்குறைப்புகள், ஒதுக்கீட்டு எரிபொருள், புதிய அரசமைப்புத் திருத்தம் என்று கண்துடைப்புக்களை மேற்கொண்டு மக்களை ஆசுவாசப்படுத்தும் நடவடிக்கைகளை மட்டுமே ரணில் அரசாங்கம் முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றது.

மக்களின் கோரிக்கைகளை முன்னிறுத்தி, மக்களின் அபிலாஷைகளுக்கு ஏற்ற ஆட்சியை வழங்கும் பிரிட்டிஷார்கள் போன்று எமது ஆட்சியாளர்கள் செயற்பட்டால் மே 9 கலவரம் ஏன் ஏற்படப்போகின்றது? பொருளாதாரப் பேரழிவால் எதற்காக இலங்கை சிதிலமடையப்போகின்றது? இத்தனையும் நடைபெற்ற பின்னரும், 'கோத்தாபயவுக்கு எதிராக மிகச்சொற்பமான மக்களே போராடினார்கள்', 'மஹிந்தவை வீடுசெல்லுமாறு மக்கள் எவரும் கோரவில்லை' என்று ஒரு பூசணித் தோட்டத்தையே சோற்றில் மறைத்துக் கொண்டிருக்கும் 'அதி புத்திசாலிகளிடம்' லிஸ் ட்ரஸ் போன்று அதியுச்ச ஜனநாயகப் பண்புகளை எதிர்பார்ப்பதெல்லாம் அவர்களின் தவறு அல்லதான்.

### நாளொரு நல்வார்த்தை

"உங்கள் உடல் நல்னை எப்படிப் பாதுகாக்கிறீர்களோ அதேபோல நேர்மையையும் கடைப்பிடிக்க வேண்டும்"

- ஜவகர்லால் நேரு



# இரண்டரை வருடங்களில் மன்று கலைக்கப்படலாம்

## ஜனாதிபதிக்கு அதிகாரத்தை வழங்கியது 22 ஆம் திருத்தம்

**கொழும்பு, ஒக். 23**

**நாடாளுமன்றத்தை கலைப்பது தொடர்பில் ஜனாதிபதிக்கு இருந்த அதிகாரம் அரசமைப்பின் 22ஆவது திருத்தம் மூலம் எவ்வித மாற்றமும் இன்றித் தக்கவைக்கப்பட்டுள்ளது. இதன்படி 2023ஆம் ஆண்டு மார்ச் மாதத்துக்குப் பிறகு, தான் கருதும் வேளையில் ஜனாதிபதியால் நாடாளுமன்றத்தை கலைக்க முடியும்.**

பொதுத்தேர்தலின் பின்னர், நாடாளுமன்றம் கூடிய முதல் நாளில் இருந்து நான்கரை வருடங்களுக்குப் பிறகே ஜனாதிபதியால் நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியும் என்ற சரத்து அரசமைப்பின் 19 ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

இதன்காரணமாகவே ஆட்சிக்கவிழ்ப்பு சூழ்ச்சியின் போது, நாடாளுமன்றத்தை முன்கூட்டியே கலைப்பதற்கு அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எடுத்த முடிவு தவறு என உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

இந்த நான்கரை வருடங்கள் என்ற கால எல்லை 20 ஆவது திருத்தத்தின் ஊடாக இரண்டரை வருடமாக்கப்பட்டது. இந்நிலையில் அதனை நான்கரை வருடங்களாக்குவதற்கு பெரமுனவினர் கடும் பிரயத்தனங்களில் ஈடுபட்டனர். எனினும், அந்த கால எல்லை மாற்றப்படவில்லை.

**அமைச்சரவை எண்ணிக்கை**

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களின் எண்ணிக்கை 30 ஆகவும், பிரதி மற்றும் இராஜாங்க அமைச்சர்களின் எண்ணிக்கை 40 ஆகவும் இருக்க வேண்டும் என்ற ஏற்பாடு '19' இல் இருந்தது. '20' இலும் அந்த ஏற்பாடு தக்கவைக்கப்பட்டது. நிறைவேற்றப்பட்ட '22' ஆவது திருத்தத்திலும் அந்த ஏற்பாடு தொடர்கின்றது. ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சை மட்டும் வகிக்கமுடியும்.

**அரசமைப்புப் பேரவை**

அரச சேவையில், அரசியல் தலையீடுகளை தவிர்த்து, சுயாதீனத்தன்மையை உறுதிப்படுத்திக்கொள்ளும் பிரதான நோக்கில் உருவாக்கப்பட்ட அரசமைப்புப் பேரவை, '20' ஊடாக நீக்கப்பட்டது. அதற்குப் பதிலாக நாடாளுமன்ற பேரவை அமைக்கப்பட்டது.

எனினும், 22 ஊடாக அரசமைப்புப் பேரவை மீண்டும் அமைக்கப்படவுள்ளது. சிவில் பிரதிநிதிகள் இடம்பெறும். சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான உறுப்பினர்களை மேற்படி பேரவையே ஜனாதிபதிக்குப் பரிந்துரைக்கும்.

மத்திய வங்கி ஆளுநர் நியமனம்கூட அரசமைப்புப் பேரவையின் அனுமதியுடனேயே இடம்பெறவேண்டும். 19 ஆவது திருத்தத்தில் கூட இந்த ஏற்பாடு இருக்கவில்லை. நீதியரசர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு உட்பட '20' ஊடாக செய்யப்பட்ட நேர்த்தியான சில விடயங்கள் மாற்றப்படவில்லை. (ம-44)

**நாளை**

**24.10.2022**
திங்கட்கிழமை
ஐப்பசி 7

சுபநேரம் : 12.02 - 01.32
ராகுகாலம்: 07.32 - 09.02
தீபாவளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கைத்தொழில் முயற்சியாளர்களின் விற்பனைக்கூடம் சாவகச்சேரியில்

சாவகச்சேரி, ஒக். 23

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, தென்மராட்சிப் பிரதேச சிறு கைத்தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருள்கள் விற்பனைக் கூடம், சாவகச்சேரி பொதுச்சந்தை வளாகத்தில் பிரதேச உதவித்திட்டமிடல் பணிப்பாளரால் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

விற்பனைக் கூடத்தில் ஆடைகள், பாதணி வகைகள், தேங்காய் எண்ணெய், பனம்பொருள் உற்பத்திகள், ஊதுபத்தி மற்றும் பழமரக் கன்றுகள் உட்பட பல உற்பத்திப் பொருள்கள் விற்பனை செய்யப்படுகின்றன. (ஒ-14-9)

# போலி நாணயத்தாள்கள் மக்கள் அவதானம்

## பொலிஸார் எச்சரிக்கை!!

**கிளிநொச்சி, ஒக். 23**

**போலி நாணயத்தாள்கள் தற்போது பயன்பாட்டில் உள்ளதால் பொதுமக்கள் அவதானமாக இருக்குமாறு பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.**

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல பகுதிகளில் அண்மைக் காலமாக போலி நாணயத்தாள்களைப் பயன்படுத்தி பொருள்கள் கொள்வனவில் சில விஷமிகள் ஈடுபட்டு வருவதாகப் பொலிஸாருக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன.

தற்போது பண்டிகைக் காலம் ஆகையால் வர்த்தக நிலையங்களிலும் மற்றும் பொதுமக்கள் கூடும் இடங்களிலும் போலி நாணயத்தாள்களைப் பயன்படுத்தி பொருள் கொள்வனவு செய்ய முயற்சிப்பார்கள்.

எனவே மக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறும் அவ்வாறு சந்தேகப்படும் வகையில் எவராயினும் இனங்காணப்பட்டால் உடனடியாக அருகிலுள்ள பொலிஸ் நிலையத்துக்கோ அல்லது அவசர தொலைபேசி அழைப்பின் ஊடாகவோ பொலிஸாருக்குத் தகவல் வழங்குமாறு தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி.எம். சதுரங்க தெரிவித்துள்ளார். (ஒ-14,113)

## சாவ.முருகன் ஆலயத்தில் வேல், மோட்டர் திருட்டு

சாவகச்சேரி, ஒக். 23

சாவகச்சேரி வடக்கு மண்டுவில் இலஞ்சாரணியம் குமரகோட்டம் முருகன் ஆலய மூலஸ்தானத்தில் வைக்கப்பட்டிருந்த வேல் மற்றும் மின்மோட்டர் என்பன கடந்த செவ்வாய்க்கிழமை இரவு திருடப்பட்டுள்ளன.

அத்துடன் ஆலயத்துக்கு அருகிலுள்ள மண்டுவில் இலஞ்சாரணியம் அம்மன் கோயில் கதவையும் உடைக்க முற்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. முறைப்பாட்டுக்கமைய சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-14,9)

## சட்டவிரோத கல்,மணலகழ்வு ஊரெழுவில் இருவர் கைது!

யாழ்ப்பாணம், ஒக். 23

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உரும்பிராய் ஊரெழு மேற்கு பகுதியில் சட்டவிரோத கல் மற்றும் மணல் அகழ்வில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இருவரை கோப்பாய் பொலிஸார் கடந்த புதன்கிழமை கைதுசெய்துள்ளனர்.

சட்டவிரோதமான முறையில் மண் மற்றும் கல் அகழ்வு இடம்பெறுகின்றன என கோப்பாய் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலுக்கமைய இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

இதன்போது அகழ்வுக்குப் பயன்படுத்திய டிப்பர் மற்றும் ஜே.சி.பி. ரக வாகனங்களை பொலிஸார் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததுடன் 40, 45 வயதுடைய இருவரையும் கைதுசெய்துள்ளனர். சந்தேகநபர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்து நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். (ச-125)

## உழவியந்திர உரிமையாளர்கள் டீசல் பெறாது கட்டணம் அறவீடு

### தென்மராட்சி விவசாயிகள் ஆதங்கம்

சாவகச்சேரி, ஒக். 23

உழவு இயந்திர உரிமையாளர்கள் உழவு வேலைகளின் போது விவசாயிகளிடமிருந்து டீசலைப் பெறாது பரப்புக்கு 600 ரூபா வீதம் கட்டணத்தை அறவிடுகின்றனர்.

இதனால் கையிருப்பில் டீசல் தேங்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது என தென்மராட்சி விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

கமக்கார அமைப்புகளின் வேண்டுகோளின் பிரகாரம் கமநல சேவைகள் நிலையங்களின் ஏற்பாட்டில் பரப்புக்கு ஒரு லீற்றர் வீதம் விவசாயிகளுக்கு வயல் உழவுக்கென டீசல் விநியோகிக்கப் பட்டது.

இந்தநிலையில் விவசாயிகள் கொள்வனவு செய்த டீசலைப் பயன்படுத்த உழவு இயந்திர உரிமையாளர்கள் மறுப்புத் தெரிவித்து பரப்புக்கு 550 ரூபா தொடக்கம் 600 ரூபா வரை பெற்று உழவில் ஈடுபடுகின்றனர்.

இதனால் தாம் கொள்வனவு செய்த டீசல் கையிருப்பில் தேங்கியுள்ளன எனவும் தமக்கு இரு மடங்கு செலவு ஏற்பட்டுள்ளது எனவும் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். (ச-9)

## உளவள சிகிச்சைக்குட்பட்டவரால் சந்தையில் பல்வேறு சிரமங்கள்

யாழ்ப்பாணம், ஒக். 23

வலி.தென்மேற்கு பிரதேசசபைக் குட்பட்ட பண்டத்தரிப்பு சந்தையில் உளவளசிகிச்சைக்குட்பட்ட ஒருவரின் நடவடிக்கைகளால் அந்தப்பகுதி மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இது தொடர்பில் முறைப்பாடுகள் கிடைத்தும் பிரதேசசபையால் எந்த விதநடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று வலி.தென்மேற்கு பிரதேசசபை உறுப்பினர் ஜோன் ஜிப்பிரிக்கோ தெரிவித்துள்ளார்.

வலி.தென்மேற்கு பிரதேசசபையின் மாதாந்த அமர்வு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை காலை சபையின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது கருத்துத் தெரிவித்த உறுப்பினர் மேலும் தெரிவிக்கையில்;

பண்டத்தரிப்பு பொதுச்சந்தையில் உளவளசிகிச்சைக்குட்பட்ட ஒருவர் அலைந்து திரிவதோடு, அவரின் மலசல கழிவுகளால் சந்தை நடவடிக்கைகளை சுத்தமான முறையில் முன்னெடுப்பது பெரும் சவாலாகக் காணப்படுகின்றது. அத்துடன் அந்த நபர் பெரும்பாலான நேரம் நிர்வாணமாகக் காணப்படுகின்றார்.

இதனால் பெண்வியாபாரிகள் பலர் சந்தைக்கு வருவதைத் தவிர்க்கும் நிலை உருவாகியுள்ளது. இது தொடர்பில் பிரதேசசபைக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அத்துடன் இளவாலை பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி, இது தெரிந்தும் தெரியாததுபோல் இருக்கின்றார்.

இவற்றைக் கருத்திற்கொண்டு இதற்குரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்- என்றார்.

அதன்பின்னர் கருத்துத்தெரிவித்த சபையின் செயலாளர், இது தொடர்பில் உடனடியாக பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரிக்குத் தெரியப்படுத்தி அவரை உளவள சிகிச்சைகளுக்குட்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார். (ஒ-14,125)

## வீட்டுக்கிருத்திய படையல் ஆலய பூசையில் படைப்பு

### பூசகர் துர்செயல்

சாவகச்சேரி, ஒக். 23

வீட்டுக்கிருத்திய நிகழ்வில் படைக்கப்பட்ட பொங்கல்,வடை மற்றும் மோதகம் என்பவற்றை கோயில் பூசைக்குப் பயன்படுத்திய பூசகர் ஒருவர் கோவிலை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை தென்மராட்சி கிழக்குப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

பூசகர் அவசரமாக ஆலயத்துக்கு வருகைதந்து சுவாமிக்கு பொங்கல், வடை, மோதகத்தை படைத்து பூசை செய்துள்ளார். பூசகரில் செயலில் சந்தேகமடைந்த அடியவர்கள் மடப்பள்ளியை திறந்து பார்த்தபோது அடுப்பில் சமையல் எதுவும் மேற்கொள்ளப்படாமை கண்டுபிடிக்கப்பட்டது.

அதனையடுத்து ஆலய நிர்வாகத்தினர் பூசகரை விசாரணை செய்தபோது வீட்டுக்கிருத்திய நிகழ்வில் தானமாக வழங்கப்பட்ட படையலே சுவாமிக்கு படைக்கப்பட்டது என ஒப்புக்கொண்டுள்ளார். இதனையடுத்து குறித்த பூசகர் வெளியேற்றப்பட்டுள்ளார். (ச-9)

## புத்தகக் கண்காட்சி...



தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கொக்குவில் பொதுநூலகத்தில் கண்காட்சி ஒன்று அண்மையில் இடம்பெற்றது. (ஒ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










## Consultancy Services IMS - Manipay
## சத்திர சிகிச்சை மற்றும் ஆலோசனை வழிகாட்டல்

பொதுவான சத்திரசிகிச்சை மற்றும் முறிவு நெரிவு சம்பந்தமான பிரச்சினைகளுக்குத் தீர்வு தேடுபவரா நீங்கள்....?
இலங்கையின் தலைசிறந்த சத்திரசிகிச்சை நிபுணர்களின் வழிகாட்டலை பெறுவதற்கான ஓர் அரிய வாய்ப்பு.... !

| பொதுச் சத்திரசிகிச்சை நிபுணர் | என்பியல் சத்திரசிகிச்சை நிபுணர் |
|---|---|
| **Dr.S. மதிவாணன்** | **DR.K. காண்டீபன்** |
| MBBS, MD Surgery, MRCS (Eng.) Fellowship in vascular Surgery (UK), Consultant Surgeon Board certified in General Surgery with vascular interest | MBBS, MD (Orthopedic) Consultant Orthopaedic Surgeon and senior Lecturer Teaching Hospital Jaffna. |
| புதன்கிழமைகளில் பி.ப 4.30 மணிக்கு | வெள்ளிக்கிழமை பி.ப 4.30 மணிக்கு |

**முன்பதிவுகளுக்கு தொடர் கொள்ளவும்.**
**தொலைபேசி இலக்கங்கள் : 076 047 7106/ 021 225 6990**

**Institute of Medical Sciences**
**Green Memorial Hospital - Manipay.**

(CR 38350) (3/6)

# மரண அறிவித்தல்



தோற்றம் 18 . 08 . 1924 — மறைவு 22 . 10 . 2022

## சின்னக்குட்டி தம்பிஐயா

உடுவில் சோமராந் தோட்டத்தைப் பிறப்பிடமாகவும், சுன்னாகம் மூர்த்தியாங்கூடலை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னக்குட்டி தம்பிஐயா நேற்று (22.10.2022) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னக்குட்டி செல்வம் தம்பதியரின் இரண்டாவது மகனும், காலஞ்சென்ற கதிரிப்பிள்ளை குட்டிப்பிள்ளையின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இராசம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, அம்மா, இரத்தினம், சபாரத்தினம் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி, ஆறுமுகம் மற்றும் நல்லம்மா ஆகியோரின் மைத்துனரும், கிருஷ்ணகுமாரி, காலஞ்சென்ற கிருஷ்ணலீலா மற்றும் கிருஷ்ணபவானி, தயாபரன்,தயாளன், சுபாஜினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், மகாலிங்கம், செல்வநாயகம், விவேகானந்தன், மாட்டினா, சுதாஜினி, சத்தியமூர்த்தி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.10.2022) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**த.தயாளன் (மகன்) : 077 2529 010**
**பவானி (மகள்) : 077 5301 543**

(CS 21340)1-6

# மரண அறிவித்தல்



தோற்றம் 13 . 07 . 1941 — மறைவு 22 . 10 . 2022

## திரு.கந்தையா பரஞ்சோதிநாதன்

**(ஓய்வுபெற்ற பிரதான தட்டெழுத்தாளர்.** Highways Department and RDA -Road Development Authority **மொழிபெயர்ப்பாளர்)**

நுணாவில் மேற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், 16/1, கைலாயபிள்ளையார் கோவில் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.கந்தையா பரஞ்சோதிநாதன் அவர்கள் நேற்று (22.10.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திருமதி புஷ்பமலர் பரஞ்சோதிநாதன் அவர்களின் ஆருயிர் கணவரும், காலஞ்சென்ற கந்தையா சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சண்முகம் செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், நிஷாந்த், நர்மதா, நிஷானி (லண்டன்) ஆகியோரின் ஆருயிர் தந்தையாரும், உதயகுமார் (U.K) அவர்களின் அன்பு மாமனாரும், சன்வி (லண்டன்) அவர்களின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற தனபாலசிங்கம், தங்கராசா, இராசபூபதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.10.2022) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**16/1, கைலாயபிள்ளையார் கோவில் வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**பிள்ளைகள்**

(CS 21339)1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிறுவர் பராமரிப்பு நிலைய பேருந்தில் டீசல் திருட்டு!

மன்னார், ஒக். 23

மன்னார், தாழ்வுபாடு கீரி பகுதியிலுள்ள சிறுவர் பராமரிப்பு நிலையத்துக்குச் சொந்தமான பேருந்திலிருந்து டீசல் திருடப்பட்டுள்ளது என பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மன்னார் புனித சவேரியார் ஆண்கள் பாடசாலைக்கு மாணவர்களை ஏற்றிச் சென்ற பேருந்து கல்லூரி வீதியில் நிறுத்திவைக்கப்பட்டது. இதன்போதே தாங்கி உடைக்கப்பட்டு டீசல் திருடப்பட்டுள்ளது.

திருட்டு தொடர்பில் சிறுவர் பராமரிப்பு நிலைய நிர்வாகத்தி னரால் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட ளிக்கப்பட்டது. மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-213)

# செப்ரெம்பரில் பணவீக்கம் 73.2 வீதமாக அதிகரித்தது

கொழும்பு, ஒக். 23

நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடியால் செப்ரெம்பர் மாதத்துக்கான பணவீக்கம் 73.2 வீதமாக அதிகரித்துள்ளது. இதனை மக்கள் தொகை மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் பதிவு செய்துள்ளது. ஓகஸ்ட் மாதத்தில் 70.2 வீதமாக பண வீக்கம் காணப்பட்டது.

இதேவேளை, உணவுப் பண வீக்கம் ஓகஸ்ட் மாதத்தில் 84.6 வீதமாக பதிவா கிய நிலையில் செப்ரெம்பர் மாதத்தில் 85.8 வீதமாக உயர்வடைந்துள்ளது. (ச-இ)

## விற்பனைக்கு

நல்லூருக்கு அருகாமையில் 1 பரப்பும் 6 குளியுடன் கூடிய காணியில் அமைந்துள்ள வீடு விற்பனைக்குண்டு.

**071 240 0001, 071 996 6666**

## வீடு விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு நந்தாவில் அம்மன் கோவிலுக்கு அருகில் 1 பரப்பு 15 குளியில் அமைந்த வடக்கு வாசல் புதிய வீடு உடன் விற்பனைக்கு உண்டு.

(CS 21214) (3/6)

**தொடர்பு : 076 702 3565**

## வேலையாள் தேவை

வீட்டு வேலைக்கு (சமையல், துவிச்சக்கர வண்டியில் நீர் எடுத்துவரல் & வீடு காணி பராமரித்தல்) ஆள்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் அழைக்கவும்.

**இடம் - மட்டுவில், சாவகச்சேரி.**

**075 281 2559**

# சூழலியல் புத்தகங்கள் அறிமுகமும், உரையும்

யாழ்ப்பாணம், ஒக். 23

கொக்குவில் பொதுநூலகம் மற்றும் சிறகுகள் அமையம் இணைந்து நடத்தும் சூழலியல் புத்தகங்கள் அறிமுகமும், உரையாடல் நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொக்குவில் பொதுநூலகத்தில் இடம்பெறவுள்ளது.

தென்கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் ஏ.எம்.றியாஸ் அகமட் 'ஒருங்கிணைந்த பசுமையாக்க முறைகள்' எனும் தலைப்பில் சிறப்பு கருத்துப் பகிர்வை முன்வைக்கவுள்ளார்.

அத்துடன், இளம் சூழலியல் செயற்பாட்டாளர்களால் 6 சூழலியல் சார்ந்த நூல்களின் அறிமுக உரை நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (ச)

# உள்ளூராட்சி உறுப்பினர் குறைப்பு நாடாளுமன்றில் உடன் சமர்ப்பிப்பு

*இராஜாங்க அமைச்சர் ஜானக தெரிவிப்பு*

கொழும்பு, ஒக். 23

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை குறைப்பதற்கான பிரேரணை நாடாளுமன்றில் உடன் சமர்ப்பிக்கப்படும் என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவால் தற்போதுள்ள 8 ஆயிரத்து 719 உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை 4 ஆயிரமாக குறைப்பதற்குத் தீர்மா னிக்கப்பட்டுள்ளது. உறுப்பினர்கள் குறைப்பால் உள்ளூராட்சித் தேர்தல்கள் பிற்போடப்படமாட்டாது.

உறுப்பினர்களைக் குறைத்து அதன்மூலம் மீதமாகும் நிதியை நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு பயன்படுத்தமுடியும் என அவர் தெரிவித்தார். (ச-இ)

## மரண அறிவித்தல்

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 09 - 09 - 1933 |  | 19 - 10 - 2022 |

### திருமதி அன்னம்மா சதாசிவம்

காரைநகரைப் பிறப்பிடமாகவும் கொலண்டை (Holland) வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா சதாசிவம் கடந்த (19.10.2022) புதன்கிழமை கொலண்டில் (Holland) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சிறாப்பர் நவரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நாகமுத்து சௌந்தரம் தம்பதியரின் அன்பு மருமகளும், சதாசிவம் (இளைப்பாறிய அதிபர், புகையிரத நிலையம்), அவர்களின் அன்பு மனைவியும், சிவராஜா (லண்டன்), சிவாஜினி (கொழும்பு), சிவகுமார் (யாழ்ப்பாணம்), காண்டீபன் (கொலண்ட் - Holland) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.10.2022) திங்கட்கிழமை மாலை 4.00 மணிக்கு கொலண்டில் (Holland) நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :

63/6 கச்சேரி கிழக்கு [illegible]
யாழ்ப்பாணம். (CS 47745) (3/6)

மகன் - 075 454 9248
மகள் - 077 648 2935

## மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 09 . 04 . 1956 |  | 18 . 10 . 2022 |

### திருமதி இராஜசுலோசனா சற்குணராசா

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் 40/7 சீனியர் லேன் கலட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜசுலோசனா சற்குணராசா அவர்கள் கடந்த (18.10.2022) செவ்வாய்க் கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா மற்றும் பரமேஸ்வரி (பிரான்ஸ்) தம்பதியினரின் பாசமிகு மகளும் சுந்தரம், யோகம்மா தம்பதியினரின் பாசமிகு மருமகளும் சற்குணராசா (ஓய்வுபெற்ற பரிசாரகர், யாழ். போதனா வைத்தியசாலை) அவர்களின் அன்பு மனைவியும் பர்ஷிகா (பிரான்ஸ்), பர்ஷிகன், சுஜன்சன் ஆகியோரின் அன்புத் தாயாரும், முகுந்தன் (பிரான்ஸ்), கஜானனி, கீர்த்திகா ஆகியோரின் அன்பு மாமியாரும், சுவஸ்ரிகாவின் அன்பு அம்மம்மாவும், சஸ்விகா, லிஸ்ணிகா அவர்களின் பாசமிகு அப்பம்மாவும் ஜெயகாந்தன் (ரகு - சுவிஸ்), அவர்களின் பாசமிகு தங்கையும், சுசிலாதேவி (பிரான்ஸ்), இராஜேஸ்வரன் (பிரான்ஸ்), ஜெய ரஞ்சிதமலர், ஜெயகௌரி (பிரான்ஸ்), ஈஸ்வரி (பிரான்ஸ்), சசிகலா (பிரான்ஸ்), பரமேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு சகோதரியும் காலஞ்சென்ற இராணி, பரமேஸ்வரி மற்றும் பற்குணராசா, கலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.10.2022) ஞாயிற்றுக்கிழமை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

**076 987 4555** (CS 2331) (3/6) **குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 11 10 1932 |  | 20 10 2022 |

### திருமதி சத்தியவதி நடராஜா

**தெல்லிப்பளை, கொழும்பு, சிட்னி**

யாழ் தெல்லிப்பளையை பிறப்பிடமாகவும், அவுஸ்திரேலியா ஹோம்புஷ்ஜ வதிவிடமாகவும் கொண்ட திருமதி சத்தியவதி நடராஜா அவர்கள் **20-10-2022** காலை இறைவனடி சேர்ந்துள்ளார். அன்னார் அமரர்களான திரு சபாரத்தினம், திருமதி காமாட்சிப்பிள்ளை அவர்களின் அருமைப் புதல்வியும், அமரர்களான திரு சின்னப்பா, திருமதி வள்ளியம்மைப்பிள்ளை அவர்களின் அருமை மருமகளும், அமரர் திரு நடராஜா அவர்களின் ஆருயிர் மனைவியும், கல்யாணி, முரளி, கிரி ஆகியோரின் பேரன்புமிக்க தாயாரும், இளங்கோ, பிரான்சிஸ், ஜெயமலர் ஆகியோரின் அன்பு மாமியாரும், அமரர்கள் திலகவதி, கமலாவதி, நகுலாம்பிகை, சாரதாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், வைதேகி, மத்தியு, மயூரன், துளசி, கிஷாந்த், காயத்திரி ஆகியோரின் பேத்தியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் பார்வைக்காக **25-10-2022** செவ்வாய்க் கிழமை பிற்பகல் **1:00** மணி முதல் **1:30** மணி வரை றூக்வூட் இந்து மயானத்தில் **(South Chapel, Rookwood Garden Crematorium, Memorial Avenue, Rookwood, NSW 2141, Australia)** பார்வைக்காக வைக்கப்பட்டு **1:30** மணி முதல் **3:30** மணி வரை ஈமக்கிரியைகள் நடந்தபின் தகனம் செய்யப்படும்.

**இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கிறோம்.**

தொடர்புகளுக்கு:
கிரி (மகன்)+61 431 460 051 (WhatsApp)
கல்யாணி (மகள்)+61 466 499 388 (WhatsApp)
இளங்கோ (மருமகன்)+61 406 637 013 (WhatsApp)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் துன்புறுத்தல்கள் இலங்கையில் அதிகரிப்பு



**கொழும்பு, ஒக்.23**

**இலங்கையில் இந்த வருடத்தின் கடந்த 8 மாத காலப்பகுதியில், சிறுவர் துன்புறுத்தல்கள் தொடர்பில் 7 ஆயிரத்து 568 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது. அவற்றுள் அதிக மான முறைப்பாடுகள் கொழும்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளன.**

சிறுவர்கள் மீதான தாக்குதல்கள், பாலியல் துன்புறுத்தல்கள், தொழிலாளியாகப் பயன்படுத்தல் மற்றும் யாசகத்தில் ஈடுபடுத்தல் என்பன தொடர்பில் பல முறைப் பாடுகள் கிடைத்துள்ளன என்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதி காரசபையின் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் உதயகுமார அம ரசிங்க ஊடகங்களிடம் தெரிவித் துள்ளார்.

கம்பஹா, குருநாகல், அநுராதபு ரம், கண்டி, இரத்தினபுரி மற்றும் மாத்தறை முதலான மாவட்டங்க ளிலும், சிறுவர்கள் தொடர்பாகக் கிடைக்கும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளன என்றும் அவர் கூறியுள்ளார்.

சிறுவர் துன்புறுத்தல்கள் தொடர் பாக, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின், 1929 என்ற இலக்கத்தை அழைத்து முறைப் பாடளிக்க முடியும். 2021 ஆம் ஆண்டு 11 ஆயிரத்து 187 முறைப் பாடுகள் கிடைத்துள்ளன. சிறுவர் கள் மீதான துன்புறுத்தல்கள் தொடர்பாக அதிகளவில், அவர்க ளின் பெற்றோர், பாதுகாவலர்கள் மற்றும் நெருங்கிய உறவினர்கள் மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட் டுள் ளது.

அதேவேளை, அறிக்கையிடப்பட் டதை விடவும் பெருமளவான சம் பவங்கள் அறிக்கையிடப்படாதுள் ளன என்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் சுட்டிக்காட்டினார். (எ-22)

## உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்த திட்டம்

கொழும்பு, ஒக். 23

உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யவும், மக்களின் போசணை மட்டத்தை மேம்படுத்தவும் மத வழிபாட் டுத் தலங்களை மையமாகக் கொண்ட உணவு வங் கிகள் மற்றும் உணவுப் பரிமாற்ற மையங்களை நிறுவ முடிவு செய்யப்பட்டுள்ளது.

உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தல் மற்றும் மக் களின் போசணை மட்டத்தை மேம்படுத்துதல் திட்டத் தின் முன்னேற்ற மீளாய்வுக் கலந்துரையாடல், நேற்றுமுன்தினம் உணவுப் பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் கலாநிதி சுரேன் படகொட தலைமையில் நடைபெற்றது.

சமய ஸ்தலங்களை மையமாகக் கொண்டு இந்த வேலைத் திட்டத்தை மாவட்ட செயலகம் மற்றும் பிர தேச செயலகங்களுக்கூடாக 14 ஆயிரத்து 22 கிராம சேவகர் பிரிவுகளிலும் புத்தசாசன மற்றும் சமய விவகார அமைச்சு ஊடாக நடைமுறைப்படுத்துவ தற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிரதேசத்தில் ஆரம்பிக்கப்படும் உணவுப் பரிமாற்ற மையமானது, அந்தப் பிரதேசத்தில் கிடைக்கக்கூடிய தேவைக்கு அதிகமான உணவுகளை சேகரித்து உணவு வங்கிக்கு வழங்கும். பின்னர் அந்த உணவு, உணவு வங்கியூடாக உணவு பற்றாக்குறையுடைய குடும்பங்களுக்கு விநியோகிக்கப்படும். இந்தச் செயற்பாட்டின் மூலம் தேவைக்கதிகமாக உள்ள உணவை பிரதேசவாசிகளிடையே மட்டுமன்றி ஏனைய பிரதேசங்களில் உள்ளவர்களிடையேயும் பகிர்ந்தளிக்க முடியும் என்பதால் உணவு வீண் விர யம் செய்யப்படுவதை தடுக்கமுடியும் என்று தெரி விக்கப்படுகின்றது. (எ-இ)

## புதிய வருமான வரி விரைவில் நடைமுறை

கொழும்பு, ஒக். 23

நாடாளுமன்றத்தின் நிதிக் குழுவின் ஒப்புதல் மற்றும் சபாநாயகரின் கையொப்பத்துக்குப் பிறகு, புதிதாக வெளியிடப்பட்ட தனிநபர் வருமான வரி நவம்பர் முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ருவன்வெல்லவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய இந்தத் தகவ லைத் தெரிவித்துள்ளார்.

தனிநபர் வருமானம் தொடர்பில் உள்நாட்டு இறை வரிச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்பட்ட வர்த்த மானி அறிவித்தல் அண்மையில் வெளியிடப்பட்டது.

மொத்த மாத வருமானம் ஒரு லட்சம் ரூபா அல்லது அதற்கு மேல் வருமானம் பெறுவோர் வரி செலுத்த வேண்டியிருக்கும். அந்த வகையில் உயர்ந்த தனி நபர் வருமான வரி விகிதம் 36 வீதமாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## மதில் இடிந்து ஒருவர் சாவு

கொழும்பு, ஒக். 23

கொழும்பு கிராண்ட்பாஸ் பிரதேசத்தில் உள்ள வீட்டின் பாதுகாப்பு கருதி அமைக்கப்பட்டிருந்த மதில் இரவு இடிந்து வீழ்ந்ததில் ஒருவர் உயிரி ழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரி வித்துள்ளது. கிராண்ட்பாஸ் பகுதியைச் சேர்ந்த 53 வயதுடைய நபர் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஜோசப் வீதியில் அமைந்துள்ள வீட்டின் மதிலே நேற்று முன்தினம் இரவு இடிந்து வீழ்ந்துள்ளது.

உயிரிழந்தவர் தனது வீட்டின் அயல் வீட்டில் உள்ள முதியவருக்கு உதவி செய்யும் நோக்கில் சென்றி ருந்தார். அந்த முதியவரை வீட்டின் பின் புறத்தில் உள்ள மலசல கூடத்துக்கு அழைத்து சென்றபோது வீட்டின் பாதுகாப்பு கருதி அமைக்கப்பட்டிருந்த மதில் இடிந்து வீழ்ந்துள்ளது. அதில் அகப்பட்டுப் படுகாயமடைந்தவரை பொலிஸார் மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து மீட்டு கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்ப்பித்த போதும் அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். (எ)

## வெளிநாடு நழுவிய பெரமுன எம்.பிக்கள்

கொழும்பு, ஒக். 23

அரசமைப்பின் 22 ஆவது திருத்தச் சட்டவரைவு மீதான வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாதவர்களில் பெரும்பாலானோர் தனிப்பட்ட ரீதியில் வெளிநாட்டு பயணங்களை மேற்கொண்டுள்ளனர்.

அரசமைப்பின் 22 ஆவது திருத்தச் சட்ட வரைபின் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நேற்றுமுன் தினம் இடம்பெற்றது. 178 மேலதிக வாக்குகளால் சட்டம் நிறைவேற்றப்பட்டது. பொதுஜன பெரமுன வின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர மாத் திரம் சட்ட வரைவுக்கு எதிராக வாக்களித்தார். முன் னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச உட்பட பொதுஜன பெரமுனவின் முன்னிலை நாடாளுமன்ற உறுப்பி னர்களில் பெரும்பாலானோர் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாதவர்களில் பெரும் பாலானோர் தனிப்பட்ட ரீதியில் வெளிநாட்டு பய ணத்தை மேற்கொண்டுள்ளனர் என்று அறிய முடி கிறது. பொதுஜன பெரமுனவின் 12 உறுப்பினர்கள் இவ்வாறு வெளிநாட்டு பயணங்களை மேற்கொண் டுள்ளார்கள். ஒருசிலர் மருத்துவ சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்கள் என் றும் அறிய முடிகிறது. (எ)

# 22 ஆவது அரசமைப்பு திருத்தம் ஜனநாயகத்துக்கான வெற்றி

### கரு ஜயசூரிய தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 23

அரசமைப்பின் 22 ஆவது திருத் தம் நிறைவேற்றப்பட்டமை ஜனநா யகத்தை மதிக்கும் இலங்கையின் அனைத்துப் பிரஜைகளுக்கும் கிடைத்த வெற்றி என்று சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித் தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித் துள்ளதாவது:-

இந்த அரசமைப்புத் திருத்தத்துக் காகத் தொடர்ந்து வாதிட்ட அனைத்து நாடாளுமன்ற உறுப் பினர்களுக்கும், சிவில் மற்றும் அரசியல் சக்திகளுக்கும் நன்றி யைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இலங்கையை எதேச்சதிகார ஆட் சிக்கு மாற்றும் நோக்கில் நிறை வேற்றப்பட்ட அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்தை இரத்துச் செய்து 22 ஆவது திருத்தச் சட் டத்தை இலங்கை நாடாளுமன்றம் நிறைவேற்றியுள்ளது.

நாடாளுமன்றத்தால் ஏற்கப்பட்ட இந்தத் தீர்மானமானது ஒரு மிக முக்கியமான இடைக்கால அரச மைப்பு சீர்திருத்தமாகும். இது புதிய அரசமைப்பு ஏற்றுக்கொள் ளப்படும் வரை நடைமுறைப்படுத் தப்பட வேண்டும்.

இந்தத் தருணத்தில், அனைத்து அரசியல் சக்திகளும் இந்தச் சாத னையால் வலுப்பெற்று, ஜனநாய கத்தை வலுப்படுத்தி, நாட்டினதும் மக்களினதும் நிரந்தர நல்லிணக் கத்துக்காக நிரந்தர தீர்வுக்காக ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் - என்றார். (எ)

## பெரமுன கோட்டையில் கொடியேற்றியது ஐ.ம.ச.

கொழும்பு, ஒக். 23

இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள கொலன்னாவை கூட்டுறவு அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற தேர்தலில் சஜித் பிரேமதாஸ தலைமையி லான ஐக்கிய மக்கள் சக்தி பெரும் வெற்றியைப் பெற்றது. 119 இடங்களில் 115 இடங்களை ஐக்கிய மக்கள் சக்தி வெற்றிகொண்டது.

35 வருடங்களாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் பொதுஜன பெரமுன ஆகியவற்றின் கோட்டையாக அறியப்படும் கொலன்ன தொகுதி கூட்டுறவுத் தேர் தலில் இந்த முடிவு வெளியாகியுள்ளது.

இதேவேளை நாடு தழுவிய கூட்டுறவுத் தேர்தல் களில் 98 வீதத்துக்கும் அதிகமான பெரும்பான் மையை ஐக்கிய மக்கள் சக்தி வென்றுள்ளமை குறி ப்பிடத்தக்கது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணகத்தில் 08 - 01 - 1943



விண்ணகத்தில் 02 - 11 - 2021

## அமரர் சண்முகம் கேதாரலிங்கம்

திதி : தேய்பிறை திரியோதசி (23.10.2022)

பாசமழை பொழிந்து எம் குடும்பத்தை கண்ணின் மணியாய்ப்
பாதுகாத்தீர்கள் நேசக்கரம் நீட்டி உற்றார் உறவினரை
உரிமையுடன் அரவணைத்தீர்கள் பாரிய விருட்சமாய்
நிழலாய் குடையாய் இருந்தீர்கள். சாய்ந்துவிட்டீர்கள்
ஆறொணாத் துயரம் அடைந்தோம். ஆண்டொன்றும்
சென்றதுவே எத்தனை எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
மாறாது மறையாது உங்கள் நினைவுகள் என்றென்றும்.
உங்களின் நல்லாசிகள் எமக்கு வரமாகக் கிட்டும் எனும்
நம்பிக்கையுடன் உங்களை வணங்கி நிற்கும்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இல. 79, 7ஆம் ஒழுங்கை,
வேப்பங்குளம், வவுனியா.
024 2226887

அன்பு மனைவி,
மகள்மார், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(CS 1041) (3/6)



# சிவாச்சாரியார் (குருக்கள்) தேவை

நோர்வே (OSLO) வில் அமைந்துள்ள அருள்மிகு சிவசுப்ரமணியர் ஆலயம். இலங்கையில் இருக்கும் குருமார்களுக்கு நோர்வேயில் சேவையாற்ற ஒரு சந்தர்ப்பம் அளிக்கவேண்டும் என்ற நல் நோக்குடன் செயற்பட்டு வருகின்றது. அந்த வகையில் அடுத்த தடவைக்கான சிவாச்சாரியர்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமையுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

- ❖ சிவாச்சாரியர், குருக்களாக இருத்தல் வேண்டும்.
- ❖ ஆச்சார்ய அபிசேகம் பெற்றவரும், சிவாகமமுறைப்படி சகல அபிசேகங்கள், பூசைகள், மற்றும் அனைத்து ஏனைய கிரிகைகளும் தனித்து செய்யக்கூடிய தகுதியுடையவர்களாகவும்
- ❖ ஆகக்குறைந்தது 5வருடங்கள் பிரதமகுருவாக சேவை செய்து இருத்தல் வேண்டும்.
- ❖ 40 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- ❖ குடும்பத்துடன் அல்லாது தனித்து சேவையாற்றல் வேண்டும்.
- ❖ சமயசொற்பொழிவுகள் பிரசங்கங்கள் செய்யக்கூடியவராக இருத்தலுடன் இந்து சமயம் கற்பிக்ககூடியவராகவும் இருத்தல் வேண்டும்.
- ❖ மேலதிக தகைமைகளாக உயர்கல்வி அல்லது பல்கலைக்கழக பட்டம் பெற்றவர்கள் அல்லது இதற்கு சமமான கல்வித் தகைமையுடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- ❖ ஆங்கிலம் பேசத்தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது.
- ❖ பதவிக்காலம் ஆகக்கூடியது ஒருவருடம்.
- ❖ தகுந்த வேதனமும் தங்குமிடவசதியும் செய்துதரப்படும்.

தகுதியுடையவர்கள் ஆகமம் பயின்ற இடம், குருக்கள் பட்டம் பெற்றதற்கான அத்தாட்சிப்பத்திரம், பட்டம் பெற்றமைக்கான வேறு ஆதாரங்கள் (படங்கள் VDIO) பணிபுரிந்த இடங்கள், மற்றும் ஏனைய நற்சான்றிதழ்கள், முழுப்படம், பாஸ்போட் பிரதிகளையும் இணைத்து கீழ்குறிப்பிடும் அஞ்சல் முகவரிக்கோ அல்லது மின்னஞ்சல் முகவரிக்கோ 15.11.2022ற்கு முன் எமக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்குமாறு வேண்டுகின்றோம்.

மேலதிக தொடர்புகளுக்கு :- + 4799264368
மின்னஞ்சல் - post@hindutemple.no
அஞ்சல் முகவரி - SECRETARY
NORGES HINDU KULTUR SENTER
POST BOKS 85, GRORUD
0905 OSLO, NORWAY.

(CS 21260) (3/6)



# மரண அறிவித்தல்

## வைத்திலிங்கம் இரத்தினம்



சோதி ஓலை உடுவில் தெற்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், மானிப்பாய் மேற்கு எழுமுள்ளி மானிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் இரத்தினம் கடந்த (19.10.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா - சுந்தரம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நாகலிங்கம் - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வைத்திலிங்கத்தின் அன்பு மனைவியும், விக்னேஸ்வரன், யோதீஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், கமலாதேவி, சுசீலாதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், நல்லம்மா, இராமநாதன், அருணாச்சலம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், இராசம்மா, இராசதுரை, யோகேஸ்வரி, தங்கராணி, சுப்பையா, கனகரத்தினம், கந்தையா, நடராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்ற செல்லையா, இரத்தினம், அன்னலட்சுமி, பரமேஸ்வரி, பவளராணி, இராஜேஸ்வரி ஆகியோரின் சகலியும், தனுசன், துஷாந்தி, நிசாகரன், ராதிகா, கரன், சுஜிதா, துஷாந்தன், தேனுகா, ஜங்கரன், சபிதா, யாதவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், மேனுஷன், தரணிஷா, துஷானிகா, தணிகன், ஜீவிஷா, கரிஸ், அனா, சாருஜா, அக்ஷயன், ஆதீஷன், இனியா, சபரீஷன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.10.2022) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

R. சிவானந்தன்
077 983 9429
மானிப்பாய் மேற்கு, மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்

தோற்றம் 20.10.1933

மறைவு 19.10.2022

(cs 21325) (2/6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்சாரம் துண்டித்து விட்டதா?
மின்சார கட்டணங்களும் பில் ஏறிவிட்டதா?
இதோ இதற்கான தீர்வை நாங்கள் பெற்றுத் தருகிறோம்
சகல விதமான மின்சாரப் பொருள்கள் பாவிக்க கூடியவாறு SOLAR INVERTER மிகவும் மலிவான விலையில் பொருத்தி தரப்படும். மின்சார கட்டணமும் சேமிக்கப்படும் மற்றும் CCTV கேமராக்கள் பொருத்தி தரப்படும்
**J.J GROUP** 021 222 8854
(CS 21133)(3/6) No. 603, K.K.S, Road, Jaffna 077 555 5100

**LUXURY APARTMENTS FOR SALE**



**வெள்ளவத்தை காலி**
வீதிக்கு அருகாமையில் IBC Roadல்
**under Construction Apartments**
விற்பனைக்கு உண்டு
2,3,4 படுக்கையறைகள்
1550, 1400, 1210, 1150, 830sq.ft
Senior citizens மற்றும் அங்கவீனர்களுக்கான முற்றிலும் அதற்கு ஏற்ப வடிவமைக்கப்பட்ட தொடர்மாடி வீடுகள், முதல் முறையாக இலங்கையில்
✓ Bank Loan arrange பண்ணித்தரப்படும்.
✓ Completion 2023 December
✓ Interest Free 18 மாத தவணை கட்டணம் ஒழுங்குபடுத்தி தரப்படும்
TP : 077 522 2613
Royal - T Construction ( Pvt ) Ltd

டாக்டர் ஆவது உங்கள் கனவா ?
**M.B.B.S 2023 INTAKE**
உலக சுகாதார நிறுவனம்,பொதுநலவாய நாடுகளினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள். உள்நாட்டு அனுமதிக் கட்டணங்கள் மட்டுமே !!
பகுதியான கொலஷிப் கிடைக்கும்
உடனடி வேலைவாய்ப்பு UK,USA,Australia, Canada Min.Salary 5000 USD
**பங்களாதேஷ் / மலேசியா**
( 5 Years + 1 வருட பணி அனுபவத்துடன்)
max adz
State Universities -
☑ கவர்ச்சிகரமான கல்விக் கட்டணங்கள்
☑ சிறந்த வசதிகளை கொண்ட விடுதிகள்
ஒப்ரிமா சர்வதேச கல்லூரி - மலேசியா
Foundation in Arts & Science | Modern Languages | Hospitality & Tourism | Opportunity to go overseas ( internship or employment )
2018 O/L & 2021 A/L ( Local )
2019 O/L & 2022 A/L ( London )
பரீட்சை பெறுபேறுகளை எதிர்பார்த்து இருப்பவர்களும் விண்ணப்பிக்கலாம்
அழையுங்கள் : 0777348049 / 0757213200
Global Education Training & Services (GETS)
No. 315/A, Negombo Road, Kandana | Web : www.getslanka.com
Email : getslanka@gmail.com

**மணமகள் தேவை**
யாழ். இந்து கௌரவ குடும்பம் 1976 இல் பிறந்த திருமணமாகாத B.Sc பட்டதாரி அரச உத்தியோக மணமகனுக்குத் திருமணமாகாத நற்குணமுள்ள படித்த மணமகள் தேவை.
076 667 8996

**வேலையாள்கள் தேவை**
கொழும்பில் உள்ள Hotel (Guest House) ஒன்றிற்கு Reception வேலைக்கு பெண் பிள்ளை ஒருவரும் Room Boy ஆண் ஒருவரும் தேவை.
077 568 2348

**விற்பனைக்கு**
தென்னங்கன்று, மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஓட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, யம்பு, பசன்புறுட், ரகன் புறுட், செவிளை தென்னை, விலும்பி நெல்லி, முருங்கன், பப்பா, டொமினேசி மா, அல்போன்சா மா, கோப்பி, பட்டர்புறுட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மங்குஸ்த்தான், ஏலக்கா, சிதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலை வேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காலி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், ரெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மஞ்சள், இஞ்சி, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஐந்தூரியம் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: நியூ லங்கா பாம்
பலாலி வீதி, ஊரெழு மேற்கு பிள்ளையார் கோயில் வீதி, கணேசா பாடசாலை அருகில்
077 612 9343
நியூ லங்கா பாம்
கிளை:
K.K.S. வீதி, இணுவில்

**கார் விற்பனைக்கு**
Toyota Corolla 121 - G கார் விற்பனைக்கு
077 362 3072

**திருமண சேவை**
உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் தெரிவுகளுக்கு எமது திருமண சேவையை நாடுங்கள்.
077 078 3832, Viber-077 964 9245

**காணி விற்பனைக்கு உண்டு**
2 பரப்புக் காணி கோப்பாய் கிருஷ்ணன் கோவிலுக்கு அருகாமையில் விற்பனைக்கு உண்டு.
071 8712 725

**JOB WANTED(வேலை தேவை)**
WELL EXPERIENCED IN GULF SALES MARKETING AND RECRUITMENT/HR/ ADMIN MANAGER, LOOKING FOR A SUITABLE JOB, CONTACT
mob. 076 016 5492

**காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணம், இராசபாதையில் காணி விற்பனைக்குண்டு காணிகள் வாங்குபவர்கள் மட்டும் நேரில்வரவும்
தொடர்பு: 077 087 0358
ஞாயிறு, திங்கட் கிழமைகளில் பார்வையிடலாம்.

**நீர்க்கசிவு பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு**
- மழை காலங்களில் உங்கள் கட்டடங்கள், வீடுகள், கோவில்களில் ஏற்படும் நீர்க்கசிவினைத் தடுப்பதற்கு.
- வட மாகாணத்தில் முதன் முதலில் 12 வருடங்களுக்கு முன் அறிமுகம் செய்தவர்கள்.
- சிறிய நீர்கசிவுகள் ஏற்படுமானால் உலகதரமிக்க இரசாயனப் பொருள்களை நீங்களே பெற்று சென்று நிவர்த்தி செய்வதற்கான சகலவித தொழில்நுட்பங்களும் தரப்படும்.
- Syn Roof (சின்றூப்) வெளிப்புற உட்புற சுவர் நீர்க்கசிவை தடுப்பதற்கான இரசாயனம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

1 சதுர அடி 150/= இல் இருந்து
போலி இரசாயனத்துடன் போலி முகவர்கள் உங்கள் இல்லம் தேடி வந்து வேலை கேட்பார்கள். ஏமாற வேண்டாம் உத்தரவாதம் தரும்பொழுது நிறுவனத்தின் நம்பகத்தன்மையை ஆராய்ந்து பார்க்கவும்.
FINEX
வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்
North and East Engineering
55 Stanly Road, Jaffna, Srilanka.
021 222 2363, 077 524 4177, 077 232 3000
http://www.northandeastengineering.com


## மரத்துடன் மோதிய இராணுவ ஜீப்

கப்டன் பலி, 3 பேர் காயம்!

கொழும்பு, ஒக். 23

வெலிக்கந்த பகுதியில் இராணுவ ஜீப் நேற்று விபத்துக்குள்ளானதில் இராணுவ விசேட அதிரடிப்படையின் கப்டன் தர அதிகாரியொருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் 3 பேர் காயமடைந்துள்ளனர்.

கட்டுப்பாட்டை இழந்து மரத்தில் மோதி விபத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலையில் இருந்து மதுருஓயா நோக்கிப் பயணித்தபோதே விபத்து நடைபெற்றுள்ளது.

உயிரிழந்தவர் இராணுவத்தின் சிறப்புப் படையைச் சேர்ந்த கப்டன் தேவிந்த வுட்வார்ட் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

(ஓ-இ)


நவம்பர் 6ம் திகதி,
ஞாயிறு
காலை 8 மணி
முதல்





இலங்கை மக்களுக்கு இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

**கனவு நனவாகும் காலம் கையருகே!**
தாய்மை அடையக் காத்திருக்கும் உங்களுக்கு, பொன்னானதோர் வாய்ப்பு இதோ...!
பிரசாந்த் கருத்தரிப்பு மையத்தின் உலகப் புகழ்பெற்ற IVF நிபுணர்
Dr. கீதா ஹரிப்ரியா இலங்கையில்!
- ஆண் மகப்பேற்றுக் குறைபாடுகள்
- தொடர் கருச்சிதைவுகள்
- 40 வயதிற்கு மேல் பெற்றோராதல்

குறித்து கவனம் செலுத்தப்படும்.
வெள்ளவத்தை ரோயல் மருத்துவமனையில் டொக்டர் கீதா ஹரிப்ரியாவை நேரில் சந்தித்து ஆலோசனை பெறுங்கள்!
முன்பதிவுக்கு அழையுங்கள்:
0754000012, 0777215588
0754927080
**பிரசாந்த்** மருத்துவமனை தகவல் மையம்
62, W.A. சில்வா மாவத்தை, வெள்ளவத்தை, கொழும்பு-06.
infopfrcsl@gmail.com www.prcbrl.lk




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்குத் தேவை

கல்வியங்காட்டிலிருந்து நெல்லியடிக்கு உட்பட்ட இடத்தில் சிறிய குடும்பத்திற்கு வீடு வாடகைக்குத் தேவை.

(CS 21333) (3/6) **T.P 076 624 7387**

## காணி விற்பனைக்குண்டு

வளன்புரம் வடக்கு கடற்கரை வீதியில் இருந்து செல்லும் ஒழுங்கையில் இரண்டாவது காணி நிலப்பரப்பு 1 1/2 விற்பனைக்கு உண்டு. (CS 47247) (3/6)

**077 602 1799, 077 006 7542**

## சேவை

யாழ். அரியாலையில் அமைந்துள்ள Medi help அம்மா முதியோர் காப்பகத்தில் முன்னாள் கைதடி முதியோர் இல்ல அத்தியகட்சரின் மேற்பார்வையில் M.B.B.S வைத்தியரின் வைத்திய ஆலோசனையுடன் முதியோர் நோயாளர்களின் சேவை நடைபெறுகின்றது.

(CR 38345) (3/6) **077 712 6860/59**

## வேலையாள்கள் தேவை

நெல்லியடியில் கணினிசார் வேலையுடன் கூடிய நிறுவனத்திற்கு ஆள்கள் தேவை. கல்வித் தகைமைகள் முக்கியம் இல்லை. ஆனால் கணினி அறிவு அவசியம். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

**077 866 1605**

## கார் விற்பனைக்கு

**ALTO K 10**
**2nd Owner, Metalic Gray,**
**2015 MODEL, Automatic**
**Price 34.50 Lk**

**077 911 8101**

## நாய் விற்பனைக்கு

ஒன்றரை வயது நிரம்பிய நல்ல இன ஜேர்மன் செப்பேர்ட் ஆண் நாய் விற்பனைக்குண்டு. வாங்குபவர் மட்டும் தொடர்பு கொள்ளவும். (CR 38346 ) (3/6)

தொடர்பு: **077 809 6961**

## காணி விற்பனைக்கு

களுபோவில வைத்தியசாலை வீதியினை முகப்புடனான 9.5 Perchase காணி விற்பனைக்கு உண்டு.


(CR 38344) (3/6) **077 427 1404**

## பெயர் எழுத்தில் திருத்தம்

இல. 18, 3 ஆம் கட்டை மன்னார் வீதி நெளுக்குளம் வவுனியா என்ற முகவரியைச் சேர்ந்த திருமதி விஜயலட்சுமி ஆகிய எனது பிறப்பு சான்றிதழில் பெயர் ஆங்கிலத்தில் WIJELADCHUMIE என்று காணப்படுகிறது. இனிவரும் காலங் களில் ஆங்கிலத்தில் VIJAYALUXMY என்று எழுதுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகிறேன்.

(CS 47071) (3/6) **VIJAYALUXMY**

# மரண அறிவித்தல்



தோற்றம் 11 . 05 . 1949

மறைவு 21 . 10 . 2022

## கெங்காதரம்பிள்ளை தனபாலன் (B.A)

(ஓய்வுபெற்ற ஆசிரியர் - அப்பு மாஸ்ரர்)

சரவணை மேற்கு, வேலணையைப் பிறப்பிடமாகவும், நுணாவில் மத்தி சாவகச்சேரி மற்றும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட கெங்காதரம்பிள்ளை தனபாலன் கடந்த (21.10.2022) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கெங்காதரம்பிள்ளை - நல்லம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற நாகேஸ்வரி (தங்கம்) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான தளையசிங்கம், கிருபாகரன் மற்றும் பராசக்தி அம்மா, பாலகுமாரு, உலகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், இராமச்சந்திரன், விக்னேஸ்வரன், விமலா, காலஞ்சென்ற யோகநாதன் மற்றும் அம்பிகை, இரகுநாதன் , சுபாசினி, அனுஷா, பாமா ஆகியோரின் அன்பு மைத்துனரும், திருநாவலன் (UK), பாரதிதாசன் (Australia), சிவதர்சினி (Swiss), சிவநந்தினி (UK), சிவசாந்தினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிரசாந்தி, நிரஞ்சினி, கபிலன், தினேஷ், மகேன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அஸ்சனா, அக்சயா, கிருத்திக், ஹருணிக்கா, அஸ்வினி, ஹருணி, அனுஷ்கா, அஸ்வின், ஆகாஸ், ஆருஷ், அஸ்விகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (25.10.2022) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது சாவகச்சேரி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கத்தாப்பபடி வீதி,**
**நுணாவில் மத்தி,**
**சாவகச்சேரி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 283 0673**
**+ 4178 206 2483**

(cs 47248) (2.6)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 15 08 1941

மறைவு 20 08 2021

## திருமதி கந்தையா இராஜேஸ்வரி

(இனுவில் மேற்கு)

**திதி : 08.09.2022**
**(இந்தியா - காசியில் நடைபெற்றது)**

**ஆண்டு ஒன்று ஆன போதும் அம்மா**
**ஆறவில்லை எம்துயரம்**
**எத்தனை ஆண்டுகள் சென்றிடினும்**
**உங்கள் நினைவுகள் - என்**
**மனதில் நீங்காது நிலைத்திருக்கும் - அம்மா**

அன்னாரின் முதலாம் ஆண்டு திதி (08.09.2022) இந்தியா -காசியில் நடைபெற்றது. அத்தருணம் எம்மைத்தொடர்பு கொண்டு ஆறுதல் தெரிவித்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

**தகவல் : மகள் - பா.சண்முகப்பிரியா**
**No.45, Nelson Place, Wellawatte, Colombo-06**
**T.P : 076 8229331**

## தீபாவளி நிகழ்வுகள்

யாழ், ஒக். 23

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் தீபாவளித் திருநாள் நிகழ்வுகள், சைவ வித்தியா விருத்திச் சங்க ஆராதனை மண்டபத்தில் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ளது. சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் தலைவர் சோ.பத்மநாதன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.பல்கலைக் கழகத்தின் உயர் பட்டப்படிப்புகள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் செ.கண்ணதாசன் கலந்துகொள்ளவுள்ளார். (ம)

# முதலாம் ஆண்டு நினைவலைகள்...



தோற்றம் 15 - 03 - 1950

மறைவு 02 - 11 - 2021

## அமரர் திருமதி
## வேலுப்பிள்ளை சறோஜினிதேவி

**திதி : (23.10.2022)**

ஆண்டொன்று நகர்ந்தாலும்
நம்மை விட்டு அகலாது உங்கள் நினைவுகள்
உங்கள் நினைவுகள் வருகையில்
நிலைகுலைந்து போகின்றோம் அன்னையே
உங்களை நினைக்காத நொடிகளில்லை
அன்பினால், பண்பினால், நட்பினால்
ஆளுமையால், விருந்தோம்பலால் கொடையால்
எங்கள் அனைவரது உள்ளங்களிலும்
குடியிருக்கும் எங்கள் அன்னையை
நாம் என்றென்றும் நினைந்திருப்போம்.

**அன்னையின் ஆத்மா இறைபதம் அடைய பிரார்த்திப்போமாக**

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**34, முருகமூர்த்தி வீதி,**
**வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்**

(CS 47250 (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுத்தேர்தலை உடன் நடத்துங்கள்

## பிரிட்டனில் வலுக்கும் கோரிக்கை



**லண்டன், ஒக். 23**

**பொருளாதார நெருக்கடியை சமாளிக்க முடியாமல் இங்கிலாந்து பிரதமர் லிஸ் ட்ரஸ் கடந்த வியாழக்கிழமை பதவியில் இருந்து விலகினார். இதையடுத்து பொதுத் தேர்தலொன்று நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் இங்கிலாந்தில் வலுத்துள்ளன.**

இங்கிலாந்துப் பிரதமராக பதவிவகித்த போரிஸ் ஜோன்சனுக்கு எதிராக அமைச்சர்கள் போர்க்கொடி உயர்த்தியதால் சில மாதங்களுக்கு முன்பு அவர் பதவியில் இருந்து விலகினார். கடந்த சில மாதங்களாக இங்கிலாந்தில் பணவீக்கம் அதிகரித்து வருவதால் உணவுப் பற்றாக்குறை ஏற்படும் அளவுக்கு நிலைமை மோசமாகியுள்ளது.

மக்களின் வாழ்வாதாரத்தைக் காப்பாற்ற பல்வேறு வரிச்சலுகைகள் அளிக்கப்படும் என்று புதிய பிரதமராகப் பொறுப்பேற்ற லிஸ் ட்ரஸ் வாக்குறுதி அளித்திருந்தார்.

ஆனால் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு வாக்குறுதிகளை அவரால் நிறைவேற்ற முடியவில்லை. அண்மையில் லிஸ் ட்ரஸ் தாக்கல் செய்த இடைக்கால வரவு - செலவுத் திட்டத்தால் நாட்டின் பொருளாதாரம் மேலும் சரிவைச் சந்தித்தது. இந்த விவகாரத்தில் பிரதமருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் நிதியமைச்சர் பதவி விலகினார்.

இதைத் தொடர்ந்து பிரதமர் லிஸ் ட்ரஸும் பதவி விலக, பொதுத்தேர்தலொன்று நடத்தப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் வலியுறுத்தியுள்ளன.

இங்கிலாந்தின் பிரதான எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சியின் மூத்த தலைவர் கேர் ஸ்டார்மர், 'கன்சர்வேடிவ் கட்சியின் ஆட்சியில் இங்கிலாந்தின் பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த சில ஆண்டுகளில் மக்கள் மீது கூடுதல் வரிகள் விதிக்கப்பட்டுள்ளன.

விலைவாசி உயர்வால் மக்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகியுள்ளது. பலர் ஒருவேளை உணவைத்தவிர்க்கும் அவலநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இந்தச் சூழலில் மீண்டும் கன்சர்வேடிவ் கட்சியைச் சேர்ந்த ஒருவர் புதிய பிரதமராகப் பதவியேற்பதால் எந்த மாற்றமும் ஏற்படாது.

மக்களின் முடிவை அறிய உடனடியாகப் பொதுத்தேர்தலை நடத்த வேண்டும். மக்களின் தீர்ப்பின்படி புதிய பிரதமரை தேர்வு செய்வதுதான் ஜனநாயகத்துக்கு அழகு என்று தெரிவித்துள்ளார். (ம)



# இத்தாலியின் முதல் பெண் பிரதமராக மெலானி

ரோம், ஒக். 23

இத்தாலி நாட்டின் முதல் பெண் பிரதமராக ஜியார்ஜியா மெலானி நேற்று பதவியேற்றார்.

இத்தாலியின் பொருளாதார நிலை மோசமடைந்ததையடுத்து அந்நாட்டின் ஆளுங்கட்சிக்கு நெருக்கடி ஏற்பட்ட நிலையில் இத்தாலி பிரதமர் மரியோ டிராகி பதவி விலகினார்.

அதனையடுத்து அங்கு தேர்தல் நடைபெற்றது. அதில் சுமார் 64% வாக்குகள் பதிவாகின.

அவற்றின் முடிவில் ஜியார்ஜியா மெலோனி தலைமையிலான தேசிய சகோதரத்துவக் கட்சி 26 வீதமான வாக்குகளைப் பெற்று தனிப்பெரும் கட்சியாக வெற்றி பெற்றது.

இந்தக் கட்சி தீவிர வலதுசாரிக் கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சியமைக்கவுள்ளது. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் இத்தாலியில் அமையும் தீவிர வலதுசாரி அரசாங்கம் இதுவாகும். (ச-இ)

# ஜெயலலிதா மரணத்தில் மர்மம் சசிகலா உட்பட 4 பேர் மீது விசாரணைக்குப் பரிந்துரை

சென்னை, ஒக். 23

மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா மரணம் தொடர்பில் சசிகலா உட்பட 4 பேரை விசாரணைக்குட்படுத்த ஆறுமுகசாமி விசாரணை ஆணையத்தின் அறிக்கை பரிந்துரைத்துள்ளது.

சசிகலா, மருத்துவர் கே.எஸ்.சிவகுமார், அப்போதைய சுகாதாரத்துறை செயலாளர் ராதாகிருஷ்ணன் மற்றும் அப்போதைய சுகாதாரத்துறை அமைச்சர் சி.விஜயபாஸ்கர் ஆகியோருக்கு எதிராகவே விசாரணை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஜெயலலிதா மரணத்தில் சந்தேகமிருப்பதாகப் பலரும் தெரிவித்த நிலையில் கடந்த 2017 ஆம் ஆண்டு ஓய்வுபெற்ற நீதிபதி ஆறுமுகசாமி தலைமையில் விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டது.

சுமார் 5 ஆண்டுகளுக்குப் பின் 600 பக்கங்கள் கொண்ட இறுதி அறிக்கையை அண்மையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் நீதிபதி ஆறுமுகசாமி அளித்தார்.

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: எய்ம்ஸ் மருத்துவமனையின் ஜெயலலிதாவுக்கு வழங்கப்பட்ட சிகிச்சையில் பல்வேறு முரண்பாடுகள் உள்ளன. ஜெயலலிதா டிசெம்பர் 5ஆம் திகதி இறந்தார் என மருத்துவமனை கூறியிருந்த நிலையில் டிசெம்பர் 4ஆம் திகதியே இறந்தார் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது -என்றுள்ளது. (ச-இ)

# பூமியிலிருந்து நழுவும் நிலா

## விஞ்ஞானிகள் கண்டறிவு

வொஷிங்டன், ஒக். 23

பூமியிலிருந்து நிலவு ஒவ்வொரு ஆண்டும் 3.8 செ.மீற்றர் விலகிச் செல்வதாகக் கண்டறியப்பட்டுள்ளது என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

பூமிக்கும் நிலவுக்குமான தூரம் படிப்படியாக அதிகரித்து வருகிறது.

நிலா தோன்றியபோது மிக அருகில் பூமி காணப்பட்டது. தற்போது பூமிக்கும் நிலவுக்கும் உள்ள தொலைவு 2 லட்சத்து 50 ஆயிரம் மைலாக காணப்படுகிறது.

இதன்காரணமாக பருவநிலையில் மாற்றங்கள் ஏற்படும் வாய்ப்புக்கள் உள்ளன என விஞ்ஞானிகள் எதிர்வுகூறியுள்ளனர். (ச-இ)



லித்துவேனியா நாட்டைச் சேர்ந்த ஒளிப்படக் கலைஞர் ஒருவர், உச்சத் தொழில்நுட்பத்தின் உதவியுடன் எறும்பின் முகத்தை ஒளிப்படம் பிடித்துள்ளார். இந்தப் படம் தற்போது உலகளவில் வைரலாகியுள்ளது. (ம)

## இருமல் மருந்தால் சிறுநீரகம் பாதிப்பு

# 5 வயதுக்குட்பட்ட 100 குழந்தைகள் இந்தோனேஷியாவில் உயிரிழப்பு

ஜகார்த்தா, ஒக். 23

இந்தோனேஷியாவில் திரவ வடிவிலான இருமல் மருந்துகளை உட்கொண்ட சுமார் 100 குழந்தைகள் உயிரிழந்துள்ளன எனத் தகவல் வெளியாகியுள்ளது.

ஆப்பிரிக்க நாடான காம்பியாவில் இருமல் மருந்து உட்கொண்ட 66 குழந்தைகள் உயிரிழந்த சம்பவம் அண்மையில் வெளியாகி அதிர்ச்சி ஏற்படுத்தியது.

இந்த நிலையில் இதுதொடர்பில் விசாரணை நடத்தப்பட்டு ஆய்வறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

அந்த ஆய்வறிக்கையிலேயே குறித்த இருமல் மருந்தை உட்கொண்ட சுமார் 100 வரையிலான குழந்தைகள் இந்த ஆண்டில் சிறுநீரக பாதிப்பு ஏற்பட்டு உயிரிழந்துள்ளன என அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

இந்தநிலையில் இந்தோனேஷிய நாட்டில் அனைத்துவிதமான திரவ மருந்துகளுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

திரவ வடிவிலான சில மருந்துகளில் கடுமையான சிறுநீரக காயத்தை ஏற்படுத்துகிற நச்சுப்பொருள்கள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இதன்காரணமாக இந்த ஆண்டு ... வயதுக்குட்பட்ட 99 குழந்தைகள் உயிரிழந்துள்ளமை தெரியவந்துள்ளது என அந்தநாட்டு அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்த மருந்துகள் இந்தியாவி... நிறுவனம் ஒன்றே தயாரித்துள்... உலக சுகாதார நிறுவனம் தெரி... ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## குப்புச்சாமி முத்துலட்சுமி



தலவாக்கலையைப் பிறப்பிடமாகவும் இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட குப்புச்சாமி முத்துலட்சுமி அவர்கள் கடந்த (21.10.2022) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.10.2022) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கோயில் வாசல்,
இணுவில்.


தகவல் : தவில் வித்துவான்
N.R.S.ரவீந்திரன்
N.R.S. சுதாகரன் குடும்பத்தினர்.

(CS 21344) 1-6

# மரண அறிவித்தல்

## சிவானந்தப்பிள்ளை சிவாநந்தராஜா (சித்தப்பா)

பிறப்பு 01.07.1955 இறப்பு 22.10.2022



வேலணையைப் பிறப்பிடமாகவும் ஆனைப்பந்தியை வதிவிடமாகவும் கொண்ட சிவானந்தப்பிள்ளை சிவாநந்தராஜா (சித்தப்பா) நேற்று (22.10.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சிவானந்தப்பிள்ளை மனோன்மணி தம்பதியரின் இளைய மகனும், ராஜலட்சுமியின் பாசமிகு கணவரும், சுமித்திரா, சுகிந்தன், சுபாசினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுதாகரன், கவிதா, நிக்ஷன் ஆகியோரின் மாமனாரும், சஸ்மிதா, கரிகரன், ரிஷானா, யஸ்விதா, பிரேயன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.10.2022) ஞாயிற்றுக்கிழமை மதியம் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

63A, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி.

தகவல் : குடும்பத்தினர்.
0777895636

(CS 21341)1-6


## காணி விற்பனைக்கு

மிருசுவில் ஆசைப்பிள்ளை ஏற்றம் A9 வீதிக்கு அருகாமையில் 10 ஏக்கர் தென்னங்காணி விற்பனைக்குண்டு.

077 438 4866

## வீட்டுப் பணிப்பெண் தேவை

யாழ். நகரில் உள்ள சிறிய வைத்தியர் குடும்பத்திற்கு வீட்டில் தங்கி நின்று பணிபுரியக் கூடிய பணிப்பெண் தேவை. (40 வயதுக்கு மேல் விரும்பத்தக்கது).

தொடர்புகளுக்கு: 077 724 2362

## வேலையாள் தேவை

194 யாழ் வீதி, மானிப்பாயில் அமைந்துள்ள மிக்ஷர் உற்பத்தி செய்யும் நிறுவனத்திற்கு பொதியிடுவதற்கு பெண் வேலையாட்கள் தேவை.

மேலதிக தொடர்புக்கு: 076 640 3388

## இலவச ஆங்கில, கணினி வகுப்புக்கள்

### புதிய பிரிவு-43

- ★ Diploma in English
- ★ Diploma in Spoken English
- ★ Diploma in ICT
- ★ Diploma in Singalam
- ★ Diploma in Psychology & Counselling
- ★ Diploma in Office Management
- ★ Diploma in Journalism
- ★ Diploma in Care Giver
- ★ Diploma in Nursing

ஆரம்பம்: 29,30/10/2022

★காலம் : 3 மாதங்கள் ★சான்றிதழ் வழங்கப்படும். ★துறைசார் விரிவுரைகள் ★சர்வதேச அங்கீகாரம்

IPS to your future

Thirunelvely, Jaffna.
T.P: 021 4240229
076 685 2529


# எரிபொருள் தேவை பெருமளவு குறைவு

புதுடில்லி, ஒக். 23

இந்தியாவின் மாதாந்த எரிபொருள் தேவை கடந்த ஆண்டு நவம்பர் மாதத்துக்குப் பின்னர் மிகக் குறைந்து, கடந்த செப்ரெம்பரில் அதிகரித்துள்ளன.

அரசாங்கத்தின் தரவுகளின்படி, கடந்த செப்ரெம்பரில் மொத்த மாதாந்த எரிபொருள் தேவை ஓகஸ்ட் மாதத்திலிருந்து 3.6 சதவீதமாகக் குறைந்தது. இருப்பினும் கடந்த ஆண்டு செப்ரெம்பருடன் ஒப்பிடும் போது இது 8.1 சதவீதம் அதிகரித்துள்ளது.

'இந்திய எண்ணெய் தேவையின் வீழ்ச்சியைப் பார்க்கும்போது, அதன் ஒரு பகுதி சுத்திகரிப்பு நிலையங்களின் பருவகால பராமரிப்புடன் தொடர்புடையதாகவுள்ளது' என சிகாகோவில் உள்ள பிரைஸ் பியூச்சர்ஸ் குழுமத்தின் ஆய்வாளர் பில் பிளின் கூறினார்.

எரிபொருள் நுகர்வானது செப்ரெம்பரில் 17.18 மில்லியன் தொன்களாக இருந்தது. இதுவே கடந்த ஆண்டு 15.89 மில்லியன் தொன்களாக இருந்தது.

டீசல் அல்லது பெற்றோலின் விற்பனை ஆண்டுக்கு ஆண்டு 13.4 சதவீதம் உயர்ந்து 6.26 மில்லியன் தொன்களாக இருந்தது. ஆனால், இந்த அளவானது மாதாந்தம் 1.4 சதவீதம் குறைந்துள்ளது.

பெற்றோலிய விற்பனை முந்தைய ஆண்டை விட 8.8 சதவீதம் அதிகரித்து 2.83 மில்லியன் தொன்களாக இருந்தது.

இந்த மாதத் தொடக்கத்தில் இருந்து பெறப்பட்ட ஆரம்ப விற்பனைத் தரவுகள், இந்திய மாநில சுத்திகரிப்பு நிறுவனங்களின் பெற்றோல் விற்பனை ஒரு வருடத்துக்கு முந்தையதை விட செப்ரெம்பரில் கடுமையாக உயர்ந்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம் உட்பட ரஷ்யா மீதான கடுமையான மேற்கத்திய பொருளாதாரத் தடைகள், ஏற்கனவே சந்தைகளில் எதிர்கால விநியோகங்களைக் கட்டுப்படுத்தலாம் என்ற கவலைகள் காணப்படுகின்றன.

இந்திய மாநில எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனங்கள் தங்கள் கச்சா எண்ணெய் விநியோக ஒப்பந்தங்களை முடிவுறுத்துவதற்கு திட்டமிட்டுள்ளன என்று மாநில சுத்திகரிப்பு நிறுவனங்களின் வட்டாரங்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-இ)

# மரண அறிவித்தல்

## செல்லையா திருஞானசுந்தரம்

( ஓய்வுபெற்ற தபால் அதிபர் )



பிறப்பு : 13.02.1946
இறப்பு : 21.10.2022

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் கரணவாய் கிழக்கை வசிப்பிடமாகவும் பெரிய தோட்டம் கரவெட்டி மத்தியை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட செல்லையா திருஞானசுந்தரம் அவர்கள் கடந்த 21.10.2022 (வெள்ளிக்கிழமை) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்புப் புதல்வரும் காலஞ்சென்ற சின்னத்தம்பி - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சாந்தினியின் ஆருயிர்க் கணவரும் கீர்த்திகா (லண்டன்), வினோஜிதா (அபிவிருத்தி உத்தியோகத்தர் - தென்னை பயிர்ச்செய்கைச் சபை, பளை), ஞானரதன் (பொறியியலாளர் - சிங்கப்பூர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் வாசுதேவன் (லண்டன்), சிவமதன் ( சமுர்த்தி முகாமையாளர் - சமுர்த்தி வங்கி, வரணி), கார்த்திகாயினி (ஆசிரியை - யா/வல்வை மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும் வானுஜன் (லண்டன்), கிஷோர் (லண்டன்), டிலக்ஸ்சன் (லண்டன்), அம்சினி, மயூரிக்கா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், சிவஞானசுந்தரம், பாலசுந்தரம் மற்றும் சகுந்தலாதேவி, சிவபாதசுந்தரம், சிவசுந்தரம், சரோஜினிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (24.10.2022) திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் பெரியதோட்டம் கரவெட்டி மத்தியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கரவெட்டி சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(C-5129)

பெரிய தோட்டம்,
கரவெட்டி மத்தி.

021 226 4281

# மரண அறிவித்தல்

மலர்வு 05 . 06 . 2017 உதிர்வு 21 . 10 . 2022



## செல்வி ரஜீவ் ரட்சாயகி

மூளாய் சுழிபுரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி ரஜீவ் ரட்சாயகி நேற்றுமுன்தினம் (21.10.2022) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

இவர் ரஜீவ் (மருந்தாளர், யாழ் போதனா வைத்தியசாலை), கஜேந்தினி (ஆயுர்வேத வைத்தியர், காரைநகர்) தம்பதிகளின் அன்பு புதல்வியும், இராசேந்திரன், சிவகாம சுந்தரி, பத்மநாதன், பாமா ருக்குமணிதேவி (ஓய்வுபெற்ற தாதியர், யா/போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு பேர்த்தியும், வாகீசன் (பல் வைத்தியர், யா/ போதனா வைத்தியசாலை), துர்க்கா (பல் வைத்தியர், ஆதார வைத்தியசாலை, ஊர்காவற்றுறை), ஆகியோரின் மருமகளும், சுரேன் (தொழில் திணைக்களம், வட வலயம்), பிரியங்கா (காப்புறுதி உதவியாளர், இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம்), விஷ்னுபாலன், உமாசந்திரா (கனடா) ஆகியோரின் பெறா மகளுமாவார்.

இவரின் இறுதிச்சடங்கு மூளாயிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (23.10.2022) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்று இறுதி நல்லடக்கத்திற்காக பொன்னாலை இந்து மயானத்திற்கு எடுத்துசெல்லப்படும்.

இந்த அறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

மூளாய், சுழிபுரம்.
(... வைத்தியசாலை முன்பாக)

தகவல்:
குடும்பத்தினர்.
0766688287

(CS 21347)1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொள்ளை,...

காங்கேசன்துறை பொலிஸ் பிராந்தியத்துக்குட்பட்ட காங்கேசன்துறை, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, இளவாலை, நெல்லியடி, தெல்லிப்பழை, அச்சுவேலி, பலாலி ஆகிய பொலிஸ் நிலையங்களில் கடந்த ஆண்டு 23 கொள்ளைச் சம்பவங்களும், 74 திருட்டுச் சம்பவங்களும் பதிவாகியுள்ளன. இந்த ஆண்டு கடந்த மாதம் வரையில் 34 கொள்ளைச் சம்பவங்களும், 87 திருட்டுச் சம்பவங்களும் பதிவாகியுள்ளன. கடந்த ஆண்டு இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் அதிகளவான முறைப்பாடுகளும் இந்த ஆண்டு தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் அதிகளவான முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன. இதில் கடந்த ஆண்டு 72 சம்பவங்களும், இந்த ஆண்டு 90 சம்பவங்களும் முடிவுறுத்தப்பட்டதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாணம் பொலிஸ் பிராந்தியத்துக்குட்பட்ட யாழ்ப்பாணம், சாவகச்சேரி, ஊர்காவற்றுறை, சுன்னாகம், மானிப்பாய், கொடிகாமம், கோப்பாய், வட்டுக்கோட்டை, நெடுந்தீவு ஆகிய பொலிஸ் நிலையங்களில் கடந்த ஆண்டு 64 கொள்ளைச் சம்பவங்களும், 234 திருட்டுச் சம்பவங்களும் பதிவாகியுள்ளன. இந்த ஆண்டு கடந்த மாதம் வரையில் 53 கொள்ளைச் சம்பவங்களும், 418 திருட்டுச் சம்பவங்களும் பதிவாகியுள்ளன. இரண்டு ஆண்டுகளிலும் யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவிலேயே அதிகளவான முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. இதில் கடந்த ஆண்டு 206 சம்பவங்களும், இந்த ஆண்டு 240 சம்பவங்களும் முடிவுறுத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பொருளாதார நெருக்கடி மற்றும் உயிர்கொல்லி போதைப் பொருள் பாவனைக்கு அடிமையானவர்களின் பணத் தேவை காரணமாகவே இந்தச் சம்பவங்கள் அதிகரித்துச் செல்வதாக பொலிஸார் கூறுகின்றனர். (அ-ஒ-5-125)

## போதைக்கு...

பாவனைக்கு அடிமையானவர் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சங்கானைமேற்குப் பகுதியில் கடந்த ஆண்டு பொறியியலாளரின் வீட்டில் திருட்டு இடம்பெற்றது. வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் கதவுடைத்து உள்நுழைந்து 10 இலட்சத்து 43 ஆயிரம் ரூபா பெறுமதியான நகை மற்றும் பெறுமதியான அலைபேசி என்பன திருடப்பட்டிருந்தன. இளவாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில் காங்கேசன்துறை குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் கடந்த 20 ஆம் திகதி சங்கானையைச் சேர்ந்த 29 வயது இளைஞனை சந்தேகத்தில் கைது செய்தனர். அவனிடமிருந்து திருடப்பட்ட அலைபேசி மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். நகைகளை மீட்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மற்றொரு சந்தேகநபர் தேடப்பட்டு வருகின்றார். (அ-ஒ-125)

## சிறுமியின்...

தனியார் கல்வி நிலையத்துக்குச் சென்று வீடு திரும்பிக்கொண்டிருந்த 15 வயதுச் சிறுமியை மோட்டார் சைக்கிளில் சிப்பாய் ஒருவர் பின்தொடர்ந்துள்ளார். திடீரென சிறுமியின் சங்கிலியை அறுத்துக் கொண்டு அவரையும் தள்ளி விழுத்திவிட்டு சிப்பாய் தப்பியோடியுள்ளார். சிறுமி உடனடியாக கூக்குரல் எழுப்பவே ஊரவர்கள் திரண்டுள்ளனர். தப்பியோடிய சிப்பாயை அவர்கள் மடக்கிப் பிடித்துள்ளனர்.

அவரிடமிருந்து சங்கிலியையும் மீட்டனர். சிப்பாயை முறையாகக் கவனித்த பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். இதன்போது அங்கு வந்த இராணுவத்தினர், பொலிஸாரிடம் ஒப்படைக்கும்போது இடையூறு விளைவித்துள்ளனர். மக்கள் எதிர்ப்பையடுத்து இராணுவத்தினர் அங்கிருந்து விலகிச் சென்றுள்ளனர். காயங்களுக்கு உள்ளான சிறுமி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

கைதான சிப்பாய் 2014 ஆம் ஆண்டு இராணுவத்தில் இணைந்துள்ளார். தற்போது மயிலிட்டியிலுள்ள இராணுவச் சிற்றுண்டிச்சாலையில் பணிபுரிகிறார். மடத்தடி - கொல்லன்கலட்டியைச் சொந்த இடமாகக் கொண்ட அவர், விடுமுறையில் வந்துள்ள நிலையிலேயே இந்த வழிப்பறியில் ஈடுபட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (அ-ஒ-26-125)

## தீபாவளியன்று...

முறைப்படுத்தப்படாது என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (அ-ஒ-இ)

## போதைப்பாவனை...

குழந்தைப் பாக்கியம் இருக்காது. இப்போது அது 7 இல் ஒரு குடும்பமாக மாறியிருக்கின்றது - இவ்வாறு மூத்த விரிவுரையாளரும், சிறுநீரக சனனத் தொகுதி சத்திர சிகிச்சை நிபுணரும், மருத்துவக் கலாநிதி பா.பாலகோபி தெரிவித்தார்.

உயிர்கொல்லி ஹெரோய்ன் உள்ளிட்ட போதைப் பொருள்களை பாடசாலை மாணவர்கள் மற்றும் இளவயதினரிடையே விநியோகிப்பவர்கள், இதனைப் பயன்படுத்துவதன் ஊடாக ஆண்மை அதிகரிக்கும் என்று உண்மைக்குமாறான பரப்புரையை முன்னெடுத்து வருகின்றனர். உடலுறவு கொள்வதற்கு இது உற்சாகமளிக்கும் என்றும் அவர்களால் முன்னெடுக்கப்படும் போலிப் பரப்புரை தொடர்பில் கேட்டபோதே, அவர் மேற்கண்டவாறு விளக்கமளித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மூன்று தசாப்தகால போரிலே சிதைக்கப்பட்ட எமது இளம் சமுதாயம் இன்று உயிர்கொல்லி போதைப்பொருள்களுக்கு அடிமையாகி அவர்களது இளமைக்காலத்தையும் எதிர்காலத்தையும் இழந்துகொண்டிருப்பது மிகவும் கவலையளிக்கின்றது.

உயிர்கொல்லி போதைப்பொருள்கள் ஆண்களினுடைய ஆண்மைத்தன்மையை காலப்போக்கிலே குறைக்கின்றது. அவர்களுடைய விதைகளிலே ஏற்படுத்துகின்ற பாதிப்பு காரணமாக நாளடைவில் விந்துருவாக்கத்தை பாதிக்கின்றது.

அதுமட்டுமல்லாமல் ஆண்குறியில் விறைப்புத்தன்மை ஏற்படுவதையும் குறைக்கின்றது. இதனால் இவர்கள் திருமணம் செய்துகொள்கின்றபோது குழந்தைப் பாக்கியத்தை பெறுவதிலே சிக்கல் ஏற்படுகிறது.

முன்பு 10 இல் ஒரு குடும்பத்தில்தான் குழந்தையின்மை இருக்கும். ஆனால் இன்று அது 7 இல் ஒரு குடும்பமாக அதிகரித்திருக்கிறது.

இது மட்டுமல்லாமல் பெண்கள் தெரிந்தோ தெரியாமலோ உயிர்கொல்லி போதைப்பொருளுக்கு அடிமையாகின்றபோது தேவையற்ற குழந்தை உருவாக்கங்களை ஏற்படுத்துவதோடு சமூகப் பிரச்சினைகளையும் ஏற்படுத்துகின்றது. அத்துடன் பிறக்கின்ற குழந்தைகளிலும் அது பாதிப்பை ஏற்படுத்துகிறது. குழந்தை நிறை குறைந்ததாகவோ அல்லது அங்கங்களிலே ஊனமுற்றவர்களாகவோ அல்லது இறந்து பிறக்கின்ற நிலைமைகள் ஏற்படலாம்.

எனவே எமது இளம் சமுதாயத்தை தேக ஆரோக்கியமுள்ளவர்களாக உருவாக்குவதற்கு உயிர்கொல்லி போதைப்பொருள் பாவனையை முற்றாக அகற்றுவது எம் ஒவ்வொருவருடைய கடமையாகும் - என்றார். (அ-ஒ-5)


### ஐம்பதாம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 02 . 02 . 1941



மறைவு 04 . 09 . 2022

**திருமதி சொர்ணலட்சுமி தர்மச்சந்திரன்**

வசந்தம் வீசும் வாழ்வுப் பாதையால்
சுகந்தம் வீசும் உறவுகள் சூழ்ந்து
சிறிய தாயாய் வாழ்ந்தாய் சித்தி
மாறாத சோகத்துடன் மனமுருகிப் புலம்புகின்றோம்
ஐம்பது நாட்கள் கழிந்தாலும்
ஆறாது எம் மனம்.

அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும், பலாங்கொடை, கிளிநொச்சி, ஊரெழு மற்றும் நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட 04.09.2022 அன்று இறைவனடி சேர்ந்த திருமதி சொர்ணலட்சுமி தர்மச்சந்திரன் அவர்களின் மரணச்சடங்கில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் தோளோடு தோள் நின்று உதவியவர்களுக்கும், தொலைவில் இருந்து துயர் பகிர்ந்தவர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

'அருளகம்'
நீர்வேலி வடக்கு, நீர்வேலி. குடும்பத்தினர்.



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 05 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- 18 அடிப் பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.
- பார்வையிடும் நேரம்
  காலை 6 மணிமுதல் மாலை 6 மணி வரை

**தரகர் தேவையில்லை.**

தொடர்பு:- ஜெயம்

**077 8147 389**
**077 9865 457**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் திருமதி
# இராஜேஸ்வரி கணேசமூர்த்தி

அன்னை மடியில்
26.06.1947

ஆண்டவன் அடியில்
03.11.2021



குடும்பத்தின் ஜீவனாகி
குலவிளக்காய் நீரிருந்தீர்
கொடுங்காலம் வந்ததுவோ
கொண்டும்மைச் சென்றதுவோ
ஆண்டொன்று போனாலும்
ஆறாது உம் பிரிவு
மீண்டுந்தான் காண்பதற்கு
மீளாதோ உம் வாழ்வு
கண்ணீரால் தான் நனைந்து
கரைக்கின்றோம் எம் வாழ்வை
மண் மீது உமை எண்ணும்
மனதோடு வாழ்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

என்றும் உங்கள் நினைவுகளுடன்
**குடும்பத்தினர்**

(CS 21070)(3/6)

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.10.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரிப்பவன் கவலையை மறக்கின்றான்
தீமைகள் செய்பவன் அழுகின்றான்
இருப்போம் என்றே நினைப்பவர் கண்களை
இறந்தவன் அன்றோ திறக்கின்றான்


-கவிஞர் சுப்புரத்தினதாசன்

Registered as a Newspaper

சஞ்சீவி

மலை 33: வள்ளுவர் ஆண்டு : 2053 ஐப்பசி 6 ஞாயிற்றுக்கிழமை (23.10.2022) சிகரம் : 121

**மருத்துவர் த.சத்தியமூர்த்தி**
பணிப்பாளர்
போதனா மருத்துவமனை
யாழ்ப்பாணம்.





# சிறுநீரகத் தானம்;

## சாவுக்குப் பின்னரும் பிறருக்கு வாழ்வளித்தல்!


இலங்கையில் சிறுநீரகமாற்று சத்திர சிகிச்சையானது முதன்முதலில் 1985 ஆம் ஆண்டு பேராசிரியர் ரிஸ்வி ஷெரீவ்தீன், பேராசிரியர் ரிஸ்வி ஷெரீவ் முதலான விசேட மருத்துவ நிபுணர்களடங்கிய குழுவால் மேற்கொள்ளப்பட்டது.

இதனைத் தொடர்ந்து கொழும்பு தேசிய மருத்துவமனை, கண்டி தேசிய மருத்துவமனை, மாளிகாவத்தையிலுள்ள தேசிய இரத்தச் சுத்திகரிப்பு சிறுநீரக மாற்று நிறுவனம் (The National Institute of Nephrology Dialysis Transplantation), கராப்பிட்டிய மற்றும் அநுராதபுரம் ஆகிய போதனா மருத்துவமனைகளில் சிறுநீரக மாற்று சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன; தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்த வகையில் யாழ். போதனா மருத்துவமனையில் முதற்றடவையாக 2021 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 11ஆம் திகதி சிறுநீரகம் செயலிழந்த இருவருக்கு, சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சைகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டன. யாழ். போதனா மருத்துவமனையில் தற்போது வரை 7 பேருக்கு வெற்றிகரமாக சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யாழ். போதனா மருத்துவமனையில் குருதிக் குழாய் சத்திரசிகிச்சைத் துறையில் விசேட பயிற்சி பெற்ற சத்திரசிகிச்சை நிபுணர் சிவலிங்கம் மதிவாணன் (Consultant Surgeon, Special Interest in Vascular Surgery), கண்டி தேசிய மருத்துவமனையில் கடமையாற்றும் குருதிக் குழாய் மற்றும் அங்கமாற்று சத்திரசிகிச்சை நிபுணர் பிரசாத் சுப்பிரமணியம் (Consultant Vascular & Transplant Surgeon), யாழ். பல்கலைக்கழக மருத்துவப் பீட சிரேஷ்ட விரிவுரையாளரும் குருதிக் குழாய் மற்றும் அங்கமாற்று சத்திரசிகிச்சை நிபுணருமான சச்சிதானந்தன் விஜோஜன்(Consultant Vascular & Transplant Surgeon), கண்டி தேசிய மருத்துவமனையின் குருதிக் குழாய் மற்றும் அங்கமாற்று சத்திர சிகிச்சை நிபுணர் சரித்த பெர்னாண்டோ (Consultant Vascular & Transplant Surgeon), யாழ். போதனா மருத்துவமனையின் சிறுநீரகவியல் சிகிச்சை நிபுணரும் மருத்துவப்பீட சிரேஷ்ட விரிவுரையாளருமான மருத்துவர் பிரம்மா தங்கராஜா (Consultant Nephrologist) மற்றும் யாழ். போதனா மருத்துவமனையின் சிறுநீரகவியல் சிகிச்சை நிபுணர் வேதநாதன் பவந்தன்(Consultant Nephrologist), முதலான சிறப்பு மருத்துவ நிபுணர்கள் அடங்கிய குழுவினர் சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சைகளை மேற்கொண்டுள்ளனர்.

மேற்குறிப்பிட்ட விசேட மருத்துவ நிபுணர்களுடன் யாழ். போதனா மருத்துவமனை இரத்தமாற்று விசேட மருத்துவ நிபுணர்கள் (Consultant Transfusionists), உணர்வழியியல் சிகிச்சை நிபுணர்கள் (Consultant Anesthesiologists), மருத்துவர்கள், தாதியர்கள், மருத்துவமனை நிர்வாகத்தினர் முதலான அணியினர் சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சையை வெற்றிகரமாக மேற்கொள்ள வழங்கிய பங்களிப்பு என்பது ஈடிணையற்றது.



மருத்துவர் பிரசாத் | மருத்துவர் மதிவாணன் | மருத்துவர் (ச்)சரித்த | மருத்துவர் விஜோஜன் | மருத்துவர் பிரம்மா | மருத்துவர் பவந்தன்

சிறுநீரகமாற்று சத்திரசிகிச்சையானது தேசிய மருத்துவமனையுடன் இணைந்து மேற்கொள்ள வேண்டிய செயற்பாடாகும். இலங்கையின் 2 ஆவது தேசிய மருத்துவமனையாக விளங்கும் கண்டி தேசிய மருத்துவமனையுடன் இணைந்தே நாம் யாழ்ப்பாணத்தில் சிறுநீரக மாற்று சிகிச்சையை மேற்கொள்கின்றோம்.

எமது சமூகத்தில் சிறுநீரக செயலிழப்புக் காரணமாக இளம் சமூகத்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக 5 வயதுச் சிறுவர்கள் முதல் 75 வயது முதியவர்கள் வரை ஹீமோடயலிசிஸ் எனப்படும் இரத்தச்சுத்திகரிப்புச் செய்வதற்காக மருத்துவமனைக்கு வருகிறார்கள். யாழ். போதனா மருத்துவமனையில் 2022ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் மாத்திரம் 145 நபர்களுக்கு 962 தடவைகள் இரத்தச்சுத்திகரிப்பு (Haemodialysis) செய்யப்பட்டுள்ளது. இவர்களில் சில சிறுவர்களுக்கு வாரத்தில் 3 அல்லது 4 தடவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

○ நிலாந்தன்

# வரியைக் கட்டு அல்லது வரிசையில் நில்


கொழும்பில் உள்ள முன்னணி ஆங்கில வாரப்பத்திரிகை ஒன்றின் ஊடகவியலாளர் என்னிடம் கேட்டார்..."யாழ்ப்பாணத்தில் ஓட்டோ மாபியாக்களை யார் கட்டுப்படுத்துவது?"என்று. அண்மையில் அவர் யாழ்ப்பாணத்துக்கு வந்த பொழுது சிறிய தூரத்துக்கு அதிக தொகை பணத்தை அவர்கள் கேட்டதாகவும் அவர் முறையிட்டார். ஆனால் கொழும்பில் குறுந்தூரங்களுக்கு ஆகக் குறைந்தது 120 ரூபாவும், அதற்கு மேற்பட்ட தூரங்களுக்கு மீற்றர் கணக்கின்படி காசு அறவிடப்படுவதாகவும் அவர் சொன்னார்."யாழ்ப்பாணத்தில் முச்சக்கர வண்டிகளில் ஏன் மீற்றரைப் பொருத்தக் கூடாது?" என்றும் கேட்டார். அதுமட்டுமல்ல "பிக்மி" போன்ற நிறுவனங்கள் யாழ்ப்பாணத்துக்கு வர முயற்சித்த போதும் அதனை முச்சக்கர வண்டி ஓட்டுநர் சங்கம் போன்றன வரவேற்கவில்லை என்ற ஒரு தகவல் தனக்குக் கிடைத்ததாகவும் அவர் சொன்னார்."பிக்மி போன்ற நிறுவனங்களை யாழ்ப்பாணத்துக்குள் அனுமதித்தால் அது மக்களின் பயணச்சுமையை குறைக்கும் அல்லவா?" என்றும் கேட்டார்.




அவர் கூறுவதில் உண்மை உண்டு. திருநெல்வேலியில் இருந்து யாழ். நகரப் பகுதிக்கு செல்வதற்கு முன்பு முகம் தெரிந்த ஓட்டோக்காரர்கள் 200 ரூபாவும் முகம் தெரியாதவர்கள் 250 ரூபாவும் எடுத்தார்கள். ஆனால் இப்பொழுது 600 ரூபாவுக்குமேல் கேட்கிறார்கள்."பெற்றோல் விலை இறங்கிவிட்டது, ஏன் கட்டணத்தைக் குறைக்க கூடாது?"என்று கேட்டால்," பெற்றோல் விலை மட்டும்தானே இறங்கியிருக்கிறது? ஏனைய பொருட்களின் விலை இறங்கவில்லையே ?"என்று கூறுகிறார்கள்.

சிறிய, ஆனால் கவர்ச்சியான "செமி கொஸ்மோபொலிற்றன்" நகரமாகிய யாழ்ப்பாணம், புலப்பெயர்ச்சி காரணமாகவும் இடப்பெயர்ச்சி காரணமாகவும் அதன் சனப்பொலிவை இழந்துவிட்டாலும்கூட, இப்பொழுதும் அதன் தெருக்களில் ஜனங்கள் நிறைந்து வழிந்து கொண்டே இருக்கிறார்கள். இதனால் முச்சக்கர வண்டிகளுக்கான தேவை அதிகம் உண்டு. ஆனால் முச்சக்கரவண்டிக்காரர்கள் பெற்றோல் விலை உயரும்பொழுது உயர்த்திய கட்டணத்தை இறக்கத் தயாரில்லை. யாழ்ப்பாணத்து ஊடகவியலாளர் ஒருவரும் சொன்னார், அண்மையில் தான் கொழும்புக்குச் சென்ற பொழுது அங்கே ஒரு குறுந்தூர ஓட்டோப் பயணத்தின் பின் எவ்வளவு கட்டணம் என்று கேட்டபொழுது அந்த ஓட்டோச் சாரதி தன்னிடம் 100 ரூபா கேட்டார் என்றும், தனக்கு மிகவும் அதிர்ச்சியாக இருந்தது என்றும். தலைநகரில் ஓட்டோக் கட்டணங்கள் குறையத் தொடங்கிவிட்டன. ஆனால் யாழ்ப்பாணத்தில் ஏன் குறையவில்லை? யார் அதைக் குறையவிடாமல் தடுப்பது?பிக்மி போன்ற சேவைகளை யாழ்ப்பாணத்துக்கு வரவிடாமல் தடுப்பது யார்? ஓட்டோ உரிமையாளர்கள் மீற்றர் பூட்ட மறுப்பது ஏன்? அதைத் தட்டிக் கேட்பது யார்?

ரணில் விக்கிரமசிங்க ஆட்சிப் பொறுப்பை ஏற்றபின் பொருளாதார நெருக்கடியின் விளைவுகளை ஒப்பிட்டளவில் கட்டுப்படுத்தி வருகிறார். குறிப்பாக எரிபொருள், எரிவாயு விநியோகம் ஒப்பிட்டளவில் கட்டுப்பாட்டுக்குள் வந்து விட்டது. மண்ணெண்ணெய் விநியோகமும் ஒப்பிட்டளவில் சீராகி வருகிறது. அதனால் கடல் படு திரவியங்களின் விலை படிப்படியாக இறங்கி வருகிறது. கோழி இறைச்சியின் விலை அண்மையில் சடுதியாக குறைந்தது. ஆனால் செய்திகளில் பொருட்களின் விலைகள் குறைக்கப்படுமளவுக்கு நடைமுறையில் விலைகளைக் குறைப்பதற்கு வியாபாரிகள் தயாரில்லை. இலங்கை போன்ற நாடுகளில் ஏறிய விலைகள் பொதுவாக இறங்குவது குறைவு என்று பொருளியல் நிபுணர்கள் கூறுகிறார்கள். அதை அவர்கள் "கீழ்நோக்கிய இறுக்கம்" என்று வர்ணிக்கிறார்கள்.



ரணில் விக்கிரமசிங்க ஒருபுறம் விலைகளைப் படிப்படியாகக் குறைக்கிறார். இன்னொருபுறம் வரிகளை கூட்டத் தொடங்கியிருக்கிறார். அது மட்டுமல்ல, புதிதாக வரிகளையும் விதிக்கத் தொடங்கியிருக்கிறார். வரிசைகளில் நிற்பதை தடுப்பதென்றால் வரிகளைக் கட்டுங்கள் என்று அவர் அண்மையில் நாட்டு மக்களுக்கு உரையாற்றும்போது கூறினார். மேலும் பொருளாதார நெருக்கடிகளுக்கு அடிப்படைக் காரணம் 2019 இல் ராஜபக்சக்கள் செய்த வரிக்குறைப்பே என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். வரியைக் குறைத்தபடியால் நாட்டின் வருமானம் வீழ்ச்சியுற்றமையே பொருளாதார நெருக்கடிக்கு காரணம் என்று கூறும் அவர் அதனால் புதிய வரிகளை விதிக்க வேண்டியிருக்கிறது என்றும் கூறுகிறார். 2019இல் கோத்தாபய ஆட்சி பொறுப்பை ஏற்றதும் வரிகளை குறைத்தமைதான் பொருளாதார நெருக்கடிக்கு காரணம் என்று ரணில் விக்கிரமசிங்க மட்டும் கூறவில்லை. ஏற்கனவே பொருளியல் நிபுணர்கள் அதைக் கூறிவருகிறார்கள். மிகக்குறிப்பாக கொழும்பை மையமாகக் கொண்டியங்கும் "வெரிற்றே ரிசேர்ச் இன்ஸ்ரிரியூட்" எனப்படும் நிறுவனம் இதுதொடர்பில் தொடர்ச்சியாகக் கருத்து தெரிவித்து வருகிறது.

வெரிற்றே ரிசேர்ச் இன்ஸ்ரிரியூட் கூறுவது உண்மைதான். ஆனால் அது ஒரு பகுதி உண்மை மட்டுமே. வரிக்குறைப்பை ராஜபக்சக்கள் ஏழைகளுக்காக செய்யவில்லை. அதையவர்கள் பணக்காரர்களைத் திருப்திப்படுத்தவே செய்தார்கள் என்பது முதலாவது விடயம். இரண்டாவது விடயம், வரிக்குறைப்பு மட்டும்தான் பொருளாதார நெருக்கடியை தோற்றுவித்தது என்பது முழுமையான விளக்கம் அல்ல. வரிக்குறைப்பு, பல காரணங்களில் ஒன்று என்பதே சரி.

பொருளாதார நெருக்கடிக்கு மூலகாரணம் இனப்பிரச்சினைதான். இனப்பிரச்சினை காரணமாக நாடு அதன் முதலீட்டுத் தகுதியை இழந்து விட்டது. 2009 க்கு பின்னரும் அந்தத் தகுதியை மீளப் பெற முடியவில்லை. ஏனென்றால் அந்த யுத்த வெற்றி நியாயமான வழிகளில் பெறப்படவில்லை. அது நாட்டின் ஒரு பகுதி மக்களை பூச்சி, புழுக்களைப் போல கொன்றொழித்துப் பெறப்பட்ட ஒரு வெற்றி. தமிழ்மக்கள் குற்றம் சாட்டுவதுபோல இனப்படுகொலை மூலம் பெறப்பட்ட ஒரு வெற்றி. எனவே இனப்படுகொலையை அரசியல் வெற்றியாக மாற்ற முடியவில்லை. அதன் விளைவாகத் தான் தமிழர்கள் நீதி கேட்டு உலக சமூகத்தின் கதவுகளைத் தட்டத்தொடங்கினார்கள். அதுவும் நாட்டின் முதலீட்டுக் கவர்ச்சியை குறைத்துவிட்டது. 2009 க்கு பின்னரும் முதலீட்டாளர்கள் நாட்டை நோக்கி வரத் தயங்குகிறார்கள். எனவே இனப்பிரச்சினைதான் பொருளாதார நெருக்கடிக்கு மூலகாரணம். வரிக் குறைப்பு, ஈஸ்டர் குண்டு வெடிப்பு, பெருந்தொற்று நோய், உக்ரைன் யுத்தம் போன்றன உப காரணங்கள்தான்.

**ரணில் விக்கிரமசிங்கவுக்கு இது ஏறக்குறைய கடைசி ஓவர். மிஞ்சிப் போனால் இன்னுமொரு ஓவர் இருக்கலாம். அவருக்கு வயதாகிவிட்டது. தன்னுடைய கடைசிக் காலத்தில் முழு நாட்டையும் பலப்படுத்துவதா? அல்லது தனது சொந்தக் கட்சியான யு.என்.பியை பலப்படுத்துவதா என்று அவர் முடிவெடுக்க வேண்டும்.**

நாட்டின் பொதுத்துறை ஊதியத்தில் சுமார் 50% படைத்தரப்புக்கு வழங்கப்படுகிறது என்றும், உலகில் 100 போர்களுக்கு எத்தனை படைவீரர்கள் என்ற விகிதத்தில் இலங்கை பத்தாவது இடத்தில் உள்ளது என்றும் நிஷான் டி மெல் (வெரிற்றே ரிசேர்ச் இன்ஸ்ரிரியூட்டின் பணிப்பாளர்) கூறுகிறார். இலங்கைத் தீவின் பாதுகாப்பு செலவினம் நாட்டின் கல்வி மற்றும் சுகாதாரச் செலவினங்கள் இரண்டையும் கூட்டிவரும் தொகையைவிட அதிகமாக இருப்பதும் பொருளாதார சீரழிவுக்கு ஒரு காரணம் என்று நிஷான் கூறுகிறார். எனினும், ரணில் விக்கிரமசிங்கவின் வரவு - செலவுத் திட்டத்திலும் பாதுகாப்புச் செலவினம் குறைக்கப்படவில்லை. மாறாக ராஜபக்சவின் வரிக்குறைப்பை ஒரு பிரதான காரணமாகக் காட்டி அதன்மூலம் அவர் புதிதாக வரிகளை நியாயப்படுத்த முயல்கிறார். அதை இன்னும் கூர்மையான வார்த்தைகளில் சொன்னால் நடுத்தரவர்க்கம், கீழ் நடுத்தர வர்க்கத்தின் மடியில் அவர் கைவைக்கப் போகின்றார். ஏனென்றால் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு அவர் இயங்க வேண்டியுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை 22ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்ட தும் ஐ.எம்.எப்.ஐத் திருப்திப்படுத்தும். 2019 இல் நடந்த வரிக் குறைப்பு தொடர்பாக நிசான் டி மெல் ஒரு விடயத்தை கடந்த ஓகஸ்ட் மாதம் சுட்டிக் காட்டியிருந்தார். அந்த வரிக் குறைப்பு உரிய ஆய்வுகளின் பின் முன்னெடுக்கப்படவில்லை. இனிமேலும் வரியை கூட்டும்பொழுது அதற்குரிய ஆய்வுகள் செய்யப்படாவிட்டால் ஏற்கனவே விட்ட தவறை திரும்பவும் விடுவதாக அது அமையும் என்று அவர் எச்சரித்திருந்தார்.

புதிய வரிகளின்மூலம் ரணில் பொருளாதார நெருக்கடியின் விளைவுகளை மேலோட்டமாகத் தணிக்கக்கூடும். நெருக்கடியின் மூலகாரணத்தை நீக்க அவரால் முடியாது. ஏனென்றால் அவர் தாமரை மொட்டின் கைதியாக காணப்படும் ஒரு ஜனாதிபதி.


அடுத்த மார்ச் மாதமளவில் நாடாளுமன்றத்தை கலைக்கும் அதிகாரம் அவருக்கு கிடைத்துவிடும். அப்பொழுது அவர் தாமரை மொட்டுக்கட்சியில் தங்கியிருப்பதில் இருந்து ஒப்பீட்டளவில் விடுபடலாம். ஆனாலும் தனது சொந்தக் கட்சியை அவர் கட்டியெழுப்ப வேண்டியிருக்கிறது. அவர் ஒற்றை யானையாக நாடாளுமன்றத்தில் நிற்கிறார். சஜித்தை உடைத்து யானைகளை தன்வசப்படுத்த வேண்டும். அதற்கு கிடைத்திருக்கும் அரை ஆட்சிக்காலம் போதுமா? எனவே இனப்பிரச்சினையை தீர்ப்பது என்றெல்லாம் அவர் 'ரிஸ்க்' எடுப்பாரா என்பது சந்தேகம்தான்.

முன்னாள் சமாதானத் தூதுவரான எரிச் சொல் ஹெய்ம்மை அவர் நாட்டுக்குள் கொண்டு வந்திருக்கிறார். சொல் ஹெய்ம் ஜனாதிபதிக்குரிய காலநிலை ஆலோசகர் என்று கூறப்பட்டாலும், ஐ.எம்.எப்ஐ திருப்திப்படுத்த அரசாங்கம் இனப்பிரச்சினையை தீர்க்கமுயற்சிப்பது போன்ற ஒரு தோற்றத்தைக் கட்டியெழுப்ப திட்டமிடுகிறதா என்ற சந்தேகங்களும் உண்டு. சொல் ஹெய்ம் கொழும்புக்கு வந்த காலகட்டத்தில் தனது ருவிற்றர் பக்கத்தில் பின்வருமாறு பதிவிட்டிருந்தார்...."மிக.விரைவான வழி எப்பொழுதும் நேரான கோடாக இருப்பதில்லை". அதில் அவர் பிரசுரித்துள்ள சிறு காணொலியின்படி வளைந்த கோடே விரைவானது என்று காட்டப்படுகிறது. அந்த வளைந்த பாதை எது?

ரணில் விக்கிரமசிங்கவுக்கு இது ஏறக்குறைய கடைசி ஓவர். மிஞ்சிப் போனால் இன்னுமொரு ஓவர் இருக்கலாம். அவருக்கு வயதாகிவிட்டது. தன்னுடைய கடைசிக் காலத்தில் முழு நாட்டையும் பலப்படுத்துவதா?அல்லது தனது சொந்தக் கட்சியான யு.என்.பியை பலப்படுத்துவதா ? என்று அவர் முடிவெடுக்க வேண்டும். அவர் பதவியேற்ற அறையின் பின்னணிச் சுவரில் மூன்று ஒளிப்படங்களைத் தொங்கவிட்டிருந்தார். டி.எஸ்.சேனநாயக, டட்லி சேனநாயக, ஜெயவர்த்தன ஆகிய மூவரின் ஒளிப்படங்களுமே அவை. இதன்மூலம் அவர் என்ன கூற வருகிறார்? அவருடைய அண்மைக்கால நடவடிக்கைகளில் அவர் பெருமளவுக்கு ஜெயவர்த்தனாவை பின்பற்றுவது போல தோன்றுகிறார்.

எனவே அவருக்கு முன்னால் இரண்டு தெரிவுகள்தான் உண்டு. முதலாவது தெரிவு அன்ரன் பாலசிங்கத்தை தீர்க்கதரிசி என்று நிரூபிப்பது. இரண்டாவது தெரிவு தான் ஒரு தீர்க்கதரிசி என்று நிரூபிப்பது. அன்ரன் பாலசிங்கத்தை தீர்க்கதரிசியாக நிரூபிப்பது என்றால் ஜெயவர்த்தனவின் வழியில் தொடர்ந்து போக வேண்டும். யூ.என்.பியைப் பலப்படுத்த வேண்டும். அல்லது, தன்னுடைய கடைசி ஓவரை நாட்டு மக்களுக்கு அர்ப்பணித்து, நாட்டின் சமாதானத்துக்கு அர்ப்பணித்து உழைப்பாராக இருந்தால், அதற்காக சிங்கள பௌத்த பெருந்தேசியவாதக் கட்டமைப்பை எதிர்த்து 'ரிஸ்க்' எடுப்பாராக இருந்தால் நாடு அவரை ஒரு தீர்க்கதரிசி என்று போற்றும். இல்லையென்றால் நரி என்று தூற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சீன நகர்வுக்குள் முடங்கும் இந்தியா

> சீனா இந்தியாவை அரசியல் எதிரியாகவே கருதும் சூழலில், இந்தியா சீனாவுடன் இணைந்து செயற்படுகின்றது. இதுதான் இந்திய இராஜதந்திர இரட்டைத்தன்மை.

அ.நிக்ஸன்

உலக அரசியல் ஒழுங்கில் பிராந்திய நாடுகளிடையே ஏற்படுகின்ற போட்டிகள் மற்றும் முரண்பாடுகளை தீர்த்துத் தமது புவிசார் அரசியல் புவிசார் பொருளாதார நலன்களை மையமாகக் கொண்டு அமெரிக்க போன்ற மேற்குலகமும் ஐரோப்பிய நாடுகளும் மேற்கொண்டு வந்த காய் நகர்த்தல்களைத் தற்போது சீனா தனதாக்கி வருகின்றது. உஸ்பெகிஸ்தான் தலைநகர் சமர்கண்ட் நகரில் செப்ரெம்பர் மாதம் நடைபெற்ற சங்காய் ஒத்துழைப்பு உச்சி மாநாட்டில் சீனாவின் அணுகுமுறை வெளிப்பட்டுள்ளது. இதனை ரஷ்ய - உக்ரைன் போர்ச் சூழலில் உலக அரசியல் ஒழுங்கை மாற்றும் சீனா இராஜதந்திரம் எனலாம். எதிரும் புதிருமாக இருக்கின்ற இந்தியா – பாகிஸ்தான் நாடுகளும் இந்தச் சங்காய் ஒத்துழைப்புக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்றன. ரஷ்ய உக்ரைன் போர் சூழலில் இந்தியாவையும் பாகிஸ்தானையும் ஒருமைப்படுத்தும் திட்டங்களைக்கூடச் சீனா நகர்த்துகின்றது. எஸ்.சி.ஓ. எனப்படும் சங்கய் ஒத்துழைப்பு அமையம் 2001 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. அரசியல், பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு விகாரங்களை மையமாகக் கொண்டு எட்டு உறுப்பு நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

சீனா, இந்தியா, ரஷ்யா, கஜகஸ்தான், கிர்கிஸ்தான், தஜிகிஸ்தான், பாகிஸ்தான், உஸ்பெகிஸ்தான் ஆகியவை உறுப்பு நாடுகளாகவும், ஆப்கானிஸ்தான், பெலாரஸ் மற்றும் மங்கோலியா ஆகியவை பார்வையாளர் நாடுகளாகவும், ஆர்மீனியா, அஜர்பைஜான், கம்போடியா, நேபாளம், இலங்கை மற்றும் துருக்கி ஆகியவை உரையாடல் பங்காளிகளாகவும் உள்ளன. ஈரன் விரைவில் உறுப்பு நாடாக இணையவுள்ளது. 2020 2021ஆம் ஆண்டுகளில்; சீனா இந்தியா இடையே கடும் எல்லை பிரச்சனை இருந்தது. அப்போது இந்த எஸ்.சி.ஓ மாநாடு பிரச்சனையின் சூட்டைத் தணிக்க முக்கிய காரணமாக இருந்தது. இந்த உச்சிமாநாட்டில் எஸ்.சி.ஓ தலைவர்கள் முதன் முறையாக ஒரு மெய்நிகர் சந்திப்புகளுக்குப் பின்னர் நேரில் ஒன்று சேர்ந்தனர். சீன, ரஷ்ய ஜனாதிபதிகளும் பார்க்கப்படுகின்றது. அதாவது எண்ணெய் வளம் உள்ள நாடுகளான சீனா, ரசிய அங்கம் வகிக்கும் நாடுகளின் அமைப்பொன்றில் ஈரான் இணைவது உலக ஒழுங்கில் முக்கியமானதாகும்.

சவூதி அரேபியாவும் சங்காய் ஒத்துழைப்பு அமையத்தில் இணையவுள்ளது. ஆனால் ஈரான், சவூதி அரேபியா ஆகிய இரண்டு நாடுகளும் கடுமையான முரண்பாட்டைக் கொண்டவை. அதேபோன்று இந்தியா - பாகிஸ்தான் கடும் பகைமை கொண்ட நாடுகள். ஆனால் இந்த நாடுகளின் முரண்பாடுகளைக் களைந்து அல்லது அதனைச் சமாளித்துத் தனது சங்கய் ஒத்துழைப்பு அமையத்துக்குள் இணைத்துள்ளமை சீனா இராஜதந்திரத்துக்குக் கிடைத்த பெரு வெற்றியாகும்.

ஒருகாலத்தில் சவூதி அரேபியா அமெரிக்காவின் நுனி விரலாக

## கையாளப்படும் சக்திகளாகத் தமிழ்த் தலைமைகள்

இந்தியப் பிரதமரும் மண்டபத்தில் பொதுவாகச் சந்தித்துக் கொண்டனர். ஆனால் தனித்தனிச் சந்திப்புகள் தவிர்க்கப்பட்டன. இந்த இடத்தில் சீனாவோடும் அமெரிக்காவோடும் உறவைப் பேணிக் கொண்டு தமது நலனைப் பெற்றுக்கொள்வதே இந்தியாவின் இரட்டைத் தன்மை என்பது பட்டவர்த்தனமாகிறது.

சீனாவின் நம்பிக்கைக்குரிய நாடுகள் சங்காய் ஒத்துழைப்பு அமையத்தில் உறுப்பு நாடுகளாக இணைத்து மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளின் வியூகத்துக்கு எதிராக திட்டம் வகுக்கும் சீன இராஜதந்திரத்துக்குள் இந்தியாவும் பங்களிப்புச் செய்கின்றது.

சீனா இந்தியாவை அரசியல் எதிரியாகவே கருதும் சூழலில், இந்தியா சீனாவுடன் இணைந்து செயற்படுகின்றது. இதுதான் இந்திய இராஜதந்திர இரட்டைத்தன்மை. அதாவது மேற்கு நாடுகளுக்கு ஈடாகத் தன்னை வளத்துக் கொண்டு வரும் சீனாவுக்குப் போட்டியாக அமெரிக்காவுடன் சேர்ந்தும். அதே நேரம் சீனாவுக்கு ஈடாகவும் தன்னைக் காண்பிக்க முற்படுகின்றது இந்தியா. இந்த மநாட்டில் பேசிய பிரதமர் நாரேந்திர மோடி. போரினால் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண முடியாதென்றார். அதாவது மறைமகமாக ரஷ்யாவுக்கு இடித்துரைக்கிறார். ஆனால் சீனா ஜனாதிபதி அவ்வாறு கூறவில்லை. மாறாகச் சீன - ரஷ்ய உறவு எல்லையற்றது என்று மாத்திரமே கூறினார். இருந்தாலும் உக்ரைய்ன் போருக்குச் சீனா இதுவரை ரஷ்யாவுக்கு எந்த ஒரு ஆயுதங்களையும் வழங்கவில்லை. ஈரான், ரோன் போன்ற ஆயுதங்களைக் கொடுத்திருக்கிறது. ஆனால் ஈரான் மறுக்கிறது. இருந்தாலும் அமெரிக்கப் புலனாய்வு ஈரான் ஆயுதம் வழங்கியதைக் கண்டுபிடித்திருக்கிறது.

இந்த நிலையில் ரஷ்யாவுடன் நெருங்கிய உறவைப் பேணிவரும் சீனா எந்த ஒரு ஆயுதங்களையும் வழங்காமல் மிக அவதானமாக ரஷ்ய - உக்ரைன் போர் விவகாரத்தைக் கையாண்டு வருகின்றது. ஆனால் இந்தியா இரட்தன்மைக் கொள்கையோடு எல்லா இடங்களிலும் மூக்கை நுழைத்தும் ஏட்டிக் போட்டியான வல்லரசுகளுடன் இணைந்து செயற்படுவதாகக் கண்பித்துக் கொண்டும், தனது புவிசார் அரசியல் பலவீனங்களையே வெளிப்படுத்தி வருகின்றது.

### பலப்பட்டுவருகின்ற சீன இராஜதந்திரம்

சங்காய் ஒத்துழைப்பு அமையத்தில் ஈரன் உறுப்பு நாடாகச் சேர்த்துக் கொள்ளப்படவுள்ள நிலையில், உலக அரசியல் ஒழுங்கில் பாரிய மாற்றங்களை உருவாக்கும் என்று எதிர்ப் இருந்தது. ஆனால் தற்போது எஸ்.சி.ஓவில் இணைய விரும்பம் தெரிவித்துள்ளமை உலக அரசியல் ஒழங்கின் மற்றுமோர் மாற்றத்தையே காண்பிக்கின்றது. தனது புவிசார் அரசியலுக்குள் முரண்பாடான நாடுகளைக் கட்டுப்பாட்டில் கொண்டுவர அமெரிக்கா இரண்டு ஆயுதங்களைப் பயன்படுத்தும். ஒன்று மனித உரிமை மீறல். இரண்டாவது, பொருளாதாரத் தடை.

ஆனால் இந்தத் தடைகளில் இருந்து ஈரான்-தப்பிவிட்டது. ரஷ்யாவை மேற்கும் ஐரோப்பிய நாடுகளும் தனிமைப்படுத்தி வரும் நிலையில், அமெரிக்க எதிர்ப்பு நாடுகளை ஒன்றுதிரட்டிச் சீனா தனது எஸ்.சி.ஓவில் இணைத்துக் கொண்டுள்ளது. இதன் மூலம் மேற்படி இரண்டு ஆயுதங்களையும் பயன்படுத்தித் தனது புவிசார் அரசியல் நலன்களுக்குள் கொண்டுவரும் அமெரிக்க இராஜதந்திரம் எதிர்வரும் காலங்களில் சாதகமான விளைவைத் தோற்றுவிக்குமெனக் கூறமுடியாது. அமெரிக்க நட்பு நாடுகளும் எஸ்.சி.ஓ.வில் இணைய வாய்ப்புகள் உள்ளன.

### தனித்து நிற்க முடியாத நிலையில் இந்தியா

ரஷ்ய - உக்ரைன் போர்ச் சூழலில் சீன வியூகத்துக்கு அமைவான உலக அரசியல் ஒழுங்கு மாற்றத்தில் இந்தியாவும் தன்னைத் தனிப் பெரும் நாடாகக் காண்பிக்கவே எஸ்.சி.ஓ.வின் பிரதான பங்காளியாக்கிச் சீனாவின் காய்நகர்த்தல்களில் தனக்கும் பங்கிருப்பதாகக் காட்ட முனைகிறது. இதன் மூலம் இந்தியாவின் இரட்டைத் தனமை உறுதியாகியுள்ளது. முன்னொரு காலத்தில் அணிசேராக் கொள்கை என்று கூறிக் கொண்டு, சோவித் யூனியன் நாட்டுடன் இணைந்து செயற்பட்டது இந்தியா. தற்போதும் அணிசேராக் கொள்கை ஒன்று சொல்லிக் கொண்டு அமெரிக்கா சீனா போன்ற அனைத்து நாடுகளுடனும் இணைந்து ஒவ்வொரு வேலைத் திட்டங்களுக்காகச் செயற்பட்டு வருகின்றது. இந்தியா. இந்தப் பின்னணியில் அமெரிக்க - சீனா போன்ற வல்லாதிக்க நாடுகளைக் கடந்து இந்தோ - பசபிக் பிராந்தியத்தில்கூட மாற்றுத் தளம் ஒன்றைச் தனித்துச் சுயமாக அமைக்க இந்தியா இராஜதந்திரத்தால் முடியவில்லை என்பது பட்டவர்த்தனமாகிறது.

உலக அரசியல் ஒழுங்கு மாறிவரும் சூழலில் சீனாவின் எஸ்.சி.ஓ அமைப்பில் மாலைதீவும் இணைய விரும்பம் தெரிவித்துள்ளது. ஆகவே இந்திய அயல் நாடுகளான பாகிஸ்தான் மாலைதீவு, இலங்கை போன்ற நாடுகள் சீனா அணிக்குள் இணையும் நிலையில், சீனாவுடனான இந்திய அரசின் மோதல் போக்கு நிலைக்கக்கூடியதல்ல. சீனாவுக்கு இந்தியா ஒரு போட்டி நாடல்ல என்ற கருத்து மேலோங்கி வருகின்றது.

ஆகவே இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் சீனாவை எதிர்க்க அமெரிக்காவை வலிந்து இழுந்து, வடஇந்திய நிலப்புகளைப் பாதுகாக்க ரஷ்யாவுடன் உறவைப் பேணி, வர்த்தக நலன் சார்ந்து சீனாவுடன் பொருளாதார ஒப்பந்தங்களைச் செய்து இந்தியா, தனது சுய மரியாதையை இழந்து வருகின்றது. இந்த நகர்வை தமது மூலோபாயம் என்று புதுடில்லி கற்பிதம் செய்யலாம். ஆனால் பேரரசாக இந்தியாவைக் கருத முடியாத பின்னணியே இது.

குறிப்பாக இந்தியாவைவிடச் சீனா தென்னாசியாவில் பெரும் சக்தியாக மாறி வருகின்றது. இதில் இந்தியா அந்தரித்துக்குக் கொண்டு தன்னைப் பெரிய சக்தியாகக் காட்ட முற்படுவதும் ஏல்லா நாடுகளுடனும் சேர்ந்து செயற்படுகின்ற முறைகளும் டில்லியின் பலவீனங்கள் என்பது கண்கூடு. தற்போது அமெரிக்காவும் சீனாவுமே பெரிய சக்திகள். ஆகவே புவிசார் அரசியல்தான் புவிசார் பொருளாதாரத்தைத் தீர்மானிக்கின்றது என்பதை உக்ரைன் போர்ச் சூழலும், சீன அணுகுமுறைகளும் காண்பிக்கின்றன.

### தமிழ் தலைமைகளிடத்தில் மாற்றுச் சிந்தனை தேவை

இத்தகையதொரு பின்புலத்தில் ஈழத்தமிழர்கள் தங்கள் அரசியல் விடுதலையை உறுதிப்படுத்தத் தற்போதைய உலக அரசியல் ஒழுங்கு மாற்றத்தைப் புரிந்து கொள்வது அவசியம். இந்தியாவை மாத்திரம் நம்புவதில் பயனில்லை.

மியன்மார் அரசினால் இன அழிப்புக்கு உள்ளாகும் முஸ்லீம் மக்களுக்காகப் பேச பல நாடுகள் உண்டு. இந்திய அரசால் ஒடுக்கப்படுகின்ற காஸ்மீர் மக்களுக்காகப் பேசவும் பல நாடுகள் உண்டு. சீனாவில் இன அழிப்புக்கு உள்ளாகி வரும் உய்ர்குர் முஸ்லீம்களுக்காகப் பேச வல்லரசு நாடுகளும் உண்டு. பாலஸ்தீன மக்கள் இன்று வரை தங்கள் கோரிக்கையில் பலமாகவும் ஒருமித்த குரலோடும் நிற்கின்றனர். அவர்களுக்காக வல்லரசு நாடுகளும் உண்டு. ஆனால் இவர்களுக்காகக் குரல் கொடுக்கின்ற அத்தனை நாடுகளும் ஈழத்தமிழர் விகாரத்தில் இலங்கை அரசாங்கத்தோடு மாத்திரமே பேசுகின்றன. ஈழத்தமிழர்கள் பக்கம் நின்று இந்த நாடுகள் ஒருபோதும் பேசியதே கிடையாது. இதற்கு இந்தியாவே பிரதான காரணி. ஆகவே சர்வதேசப் புவிசார் அரசியலைப் புரிந்து கொண்டும் அதன் போக்குகளை அறிந்தும் பேரம் பேசுல் அல்லது இணக்க அரசியலைக்கூட முன்னெடுக்க ஈழத்தமிழர்கள் மத்தியில் எவருமே இல்லை. 2009ஆம் ஆண்டுக்குப் பின்னரான சூழலில் காற்றுள்ளபோதே தூற்றுக் கொள்ளல் என்ற அணுகுமுறை தவறவிடப்பட்டுள்ளது. தமிழ் நாடு ஈழத்தமிழர் பிரச்சினையை வெறும் அனுதாபமாகப் பார்க்கிறதே தவிர, அறிவுசார்ந்தும் புவிசார் அரசியல் மாற்றங்களோடும் இணைத்து அவதானிக்கவில்லை.

இதனால் ஈழத்தமிழர்கள் கையாளப்படும் சக்திகளாகவே பயன்படுத்தப்பட்டு வருகின்றனர். 2009 இற்குப் பின்னரான சூழலில் ஈழத்தமிழர்களுக்காகப் பேசுவது போல அமெரிக்க போன்ற மேற்குலகமும் ஐரோப்பிய நாடுகளும் மற்றும் இந்தியாவும் காண்பித்தாலும், தங்கள் நலன்சார்ந்து, தமிழ்த்தேசியக் கட்சிகளைப் பயன்படுத்தியுள்ளன என்பதே உண்மை.

சில தமிழ்ப் புலம்பெயர் அமைப்புகளும் இந்த நாடுகளினால் கையாளப்பட்டு வருகின்றன. இந்த இடத்திலேதான் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணிக்கு மாத்திரமே புவிசார் அரசியல் சூழல் பற்றிய நல்ல புரிதல் உண்டு. ஆனால் அவர்களும் அந்த இடைவெளியை நிரப்பத் தவறுகின்றனர். இலங்கை ஒற்றையாட்சி அரசின் நாடாளுமன்றத்தில் அதிக ஆசனங்கள் இருந்தால் மாத்திரமே சர்வதேச நகர்வுகளை முன்னெடுக்க முடியுமென முன்னணி கூறுவதை ஏற்கமுடியாது. ஆக சர்வதேச அரசியல் பார்வையை மக்களிடம் திறந்துவிடும் இடங்களில், தியாகி தீலிபன் நினைவேந்தல் விவகாரங்களில் உள்ளக முரண்பாடுகள் பற்றி விமர்சிக்கும் ஆள்களாக மாத்திரமே முன்னணி மாறிவிட்டது. அதேநேரம் புலம்பெயர் தமிழர்களும்; இப்படியான அணி வகுப்பில் நிற்கிறார்கள். அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளுக்காக உக்ரைன் ஆதரவாளர்கள் என்றும் ஒரு குழு புலம்பெயர் நாடுகளில் புறப்பட்டுள்ளது. சீனச் சார்புத் தமிழ்க் குழு உருவாகினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் கைவண்ணம்

**பி.கேஷாகினி,**
தரம்: 2C
யா/ சுண்டுக்குளி
மகளிர் கல்லூரி.



**க.திஷான்,**
தரம்: 11
யாழ்ப்பாணம்
மத்திய கல்லூரி.



**பி.சஞ்ஜேய்,**
தரம்: 3
யா/கொக்குவில் இந்து
ஆரம்பப் பாடசாலை.





**சு.மாதுளன்,**
தரம்: 1
யா/ கல்வயல் ஸ்ரீ
சண்முகானந்தமா வித்தி..

## அறிந்துகொள்வோம்

'பிரமிடு கோவில் நாடு' என்று அழைக்கப்படுவது,

**பர்மா**

இத்தாலி நாட்டின் சர்வாதிகாரியாக இருந்தவர்,

**முசோலினி.**

சூரியக்குடும்பத்தைக் கண்டறிந்தவர்,

**கோபர் நிக்கஸ்.**

சிங்கப்பூரின் முந்தைய பெயர் -

**டெமாஸெக்**

உலகின் வெண்தங்கம் **பருத்தி.**

பறவைகளிலேயே மிகவும் நீளமான நாக்கு உடையது,

**மரங்கொத்தி.**


உலக வானிலை மையம் அமைந்துள்ள இடம்,


**ஜெனீவா.**

புத்தர் பிறந்த இடம் - **லும்பினி.**



## எண்களை இணைத்து படத்தை முழுமை செய்வோம்






மாணவர்களே...

உங்கள் ஆக்கங்களும் சஞ்சீவியில் பிரசுரமாக வேண்டுமா?

077 316 5555

என்ற எண்ணுக்கோ அல்லது
sanjeeviuthayan@gmail.com
361, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கோ அனுப்பலாம்


# சொற்சிலம்பம் போட்டி

106

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | ■ | 5 | 6 |
| 7 | | | | ■ | 8 | | |
| 9 | | ■ | 10 | 11 | | | ■ |
| | ■ | 12 | | | ■ | 13 | 14 |
| ■ | 15 | | | ■ | 16 | | |
| 17 | | | ■ | 18 | | ■ | |
| 19 | | ■ | 20 | | | 21 | |
| 22 | | | | ■ | 23 | | ■ |

அனுப்புபவர் பெயர்:..............................................

முழுமையான தபால் விலாசம்: ...................................

..............................................................................

கையொப்பம்:.......................................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

## இடமிருந்து வலம்

1. நித்தியம் 5. வேகம் 7. வெட்டு 8. சுபாவகுணம் ஒன்பதில் ஒன்று 9. தீயசெயல் 10. மனதில் ஏற்படும் குழப்பம் 12. நெருப்பு 13. சாப்பிடு 15. ஏழு நாள்கள் 16. ஒதுக்கப்பட்டவர்களை இந்தியாவில் இப்படி அழைப்பர் 17. புகழ்/ மரியாதை/ பெருமை 18. சரஸ்வதி இதற்குரியவள் 19.புள்ளடிஎ20. பலரகம் 22. நிழல் 23. திக்கு

## மேலிருந்து கீழ்

1. திறனோடும், வீரத்தோடும் புரியப்படும் செயல் 2. மரவேலை, சிற்பி, போன்றோரின் ஆயுதம் 3. வாழ் 4. காட்சிக்கு வருதல் 5. ஒரு பயிர்வகை 6. தமிழில் இது இரண்டு ஒன்று உயர்ந்தது- உயர்வு குறைந்தது 8. சேர் 11. அரைக்கும் உடல் உறுப்பு 12. கை 14. மனஎண்ணம் 15. குரங்கு 16. விதிக்கப்பட்டது. 17. கோவலனின் காதல் பரத்தை 18. தூக்கத்தில் காணுவது 20. நாங்கள் 21. உடல் இயக்கத்துக்கு அவசியமானது.

### சொற்சிலம்பம் போட்டி 105 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1.பதிபக்தி 5. சாவி 7.திட்டி 8. சைகை 10. கடுப்பு 12. யமன் 13. பதினாறு 14. அறிய 15. நிதி 17. உறவு 18. தலைப்பு 20. தவி 21. விடை 22. பின் 23. விடுதலை 24. வலிமை

**மேலிருந்து கீழ்**

1. பதிகம் 2. திட்டு 3. படிப்பறிவு 4. திசை 6. வியன்னா 9. கையறுநிலை 11. புதிய 14. அறவிடு 16. திப்பிலி 17. உதவி 18. தடை 19. புன்மை 21. விலை

### சொற்சிலம்பம் போட்டி இல.106

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்

**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
என்னும் முகவரிக்கு
**28.10.2022** இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக
தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான [illegible] காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

### போட்டி இலக்கம் 105 இல் வெற்றி பெற்றோர் விவரம்

**1 ஆம் பரிசு**
அ.சத்தியரூபன்,
ஏழாலை மேற்கு,
ஏழாலை

**2 ஆம் பரிசு**
திருமதி ஸ்ரீ கிருஷாந்தி
வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

**3 ஆம் பரிசு**
ந.பானுமதி,
சோறாம்புலம்,
வல்வெட்டித்துறை.

**4 ஆம் பரிசு**
தி.செல்வராணி
பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

**5 ஆம் பரிசு**
எஸ். சுருதி
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாணே! உயராதே...!!






○ கோகுலராகவன்

பாண், பணிஸ், கேக், அடைகேக், ரஸ்க், கல்பணிஸ், எமடத்தல் என்று பேக்கரி உற்பத்திகள் பலவும் இன்று எட்டாக்கனியாகவிட்டன. சில்லறைக்காசுக்கு வாங்கிய இந்த உணவு வகைகளை, இன்று பெரிய தாள் காசுக்கு வாங்க வேண்டிய நிலை. எல்லாம் பணவீக்கத்தால் வந்த வினை. இவற்றின் விலை குறைவதற்கான வாய்ப்பு குறைவாகவே உள்ளது. பாணின் பிரதான மூலப்பொருளாகிய கோதுமை , வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாவதே இந்த விலையுயர்வுக்கு பிரதான காரணம். முக்கியமான காரணிகள் டொலர் பெறுமதி குறைவடைந்து போனமையும், ரஷ்ய - உக்ரைன் போரும் தான். பாண் சாமானிய மக்களின் (விலை குறைவான) உணவாக இருந்தது.

கிட்டத்தட்ட இரு நூற்றாண்டாக பாண் இலங்கை மக்களால் நுகரப்பட்ட ஒன்று. இன்றைய திகதியில் கைவிடப்பட்ட உணவாக மாற விட்டது .

20

முன்னாள் ஜனாபதிகளில் ஒருவரான சந்திரிகா 1995 இல் பாணை 5 ரூபா ஆக்கி ஜனாதிபதி பதவியைப் பிடித்துகொண்டார். கொஞ்ச நாளில் அது அதிகரிக்கத் தொடங்கியது வேறு விடயம். மக்களுக்காக விலை குறைவான ஏதோ ஒரு உணவைக் கொடுக்க வேண்டியது அரசின் கடமை. அது இவ்வளவு காலமும் பாணாகவே இருந்தது. இப்போது அதுவும் இல்லை.

வெதுப்பி என்கிற பாண் உணவாகப் பயன்படுத்தப்படத் தொடங்கி, கிட்டத்தட்ட 30 ஆயிரம் ஆண்டுகள் ஆகிவிட்டன. பண்டைய எகிப்தில் கி.மு. 2500 காலப்பகுதியில் பிரமிட்டுக்களுக்குள் மம்மிகளுடன் பாண் படையலாக வைக்கப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது.

பொதுவாக கோதுமை உற்பத்தி செய்யப்பட்ட இடங்களில் றொட்டி என்ற பெயரில் உற்பத்தி செய்யப்பட்டு பாண் உண்ணப்பட்டது. றொட்டி என்பது றொட்டிகா என்ற சமஸ்கிருத சொல்லில் இருந்து உருவானது. சிந்துவெளி நாகரிகத்தில் றொட்டி உணவாக உண்ணப்பட்டது. பாணுக்கும் இதற்கும் உள்ளீடு ஒன்றுதான். ஆனால் தயாரிப்பு முறைதான் வேறு வேறு.

ஆரம்பகாலத்தில் கல்லை நெருப்புக்குள் போட்டு சூடாக்கிவிட்டு, கல்லை வெளியே எடுத்து, அதன் மேல் குழைத்த மாவை வைத்து றொட்டி சுடப்பட்டது. கல் ஆறினால் மீண்டும் நெருப்புக்கு போட வேண்டும். பிறகுதான் றொட்டி சுடும் தட்டுக்கள் உருவாகி இருக்கின்றன. நாங்கள் பாண் எனக் கூறுவதை உண்மையில் 'பிரெட் ' என்று அழைப்பதே சரி. பன் (bun) என்பதேயே நாங்கள் பாண் என்று சொல்லத்தொடங்கி விட்டோம்.

'பன்' என்பது பணிஸ் வகைகளையே குறிப்பதாகும்.

போர்த்துக்கேயர் வருகையுடன்தான் இலங்கையில் பாண் அறிமுகம் ஆகியது. போர்த்துக்கேயர் தரையிறங்கியபோது கோட்டை அரசன் ஒற்றர்களை வேவு பார்க்க அனுப்பியபோது அவர்கள் திரும்பி வந்து

"கல்லை சாப்பிட்டு, இரத்தத்தை குடிக்கிறார்கள் "

அதாவது போர்த்துக்கேயர் பாணைச் சாப்பிட்டு, சிவப்பு நிறமான வைனைக் குடித்ததைக் கண்டே அவற்றை அதுவரை கண்டிராத ஒற்றர்கள் இப்படிச் சொன்னார்களாம். இதன் பின்தான் கோதுமைப் பாண் இலங்கையில் அறிமுகம் ஆகியது. அமெரிக்க, ஆபிரிக்க நாடுகளில் பாண் பிரதான உணவாக இருக்கிறது. இலங்கையில் நகரப்பகுதி மக்களுக்கும் நடுத்தர மக்களுக்கும் அத்தியாவசிய உணவாக பாண் இருப்பதை அவதானிக்க முடியும். பாணின் விலையுயர்வு இத்தகைய மக்களின் உணவுத் தேவையைப் பாதித்திருக்கிறது. இலங்கையில் இந்த வருட முடிவில் பாணின் விலை 1500 ரூபாவுக்கு வந்தாலும் ஆச்சரியப்பட முடியாது. அந்தளவுக்கு உயர்ந்தபடியிருக்கிறது நாட்டின் பணவீக்கம்.

பாணின் விலையைக் குறைப்பது அரசின் பிரதான கடமை. பாண் விலை 50 ரூபாவாக இருப்பதே பொருத்தம்.

இல்லாவிட்டால் பிரான்ஸ் நாட்டு மன்னனான 16 ஆம் லூயியின் மனைவி மேரி அன்ரனிற்றி சொன்னமாதிரி "பாண் இல்லாவிட்டால் கேக் சாப்பிடுங்கள்" (let them eat cake)என்று சொல்ல வேண்டி வரும்.

*(இன்னும் கதைப்பம்)*

# யாழ்ப்பாண வரலாறு

1505–1948 வரை

○ ந.பரமேஸ்வரன்

பட்டமளிப்பு விழா முடிந்த மறுநாள் மாணவிகளை சுற்றுலா அழைத்துச்சென்றேன். நாங்கள் யாழ்ப்பாணத்தின் தென்மேற்கு பக்கமாகவுள்ள தீவுகளை நோக்கி எமது கொட்டகை, ஓர்கன், வயலின், தாளம், ஐந்து பாடும் சிறுவர்கள், உள்ளூர் போதகர் ஒருவர், இரண்டு பைபிள் வாசிக்கும் பெண்கள், இரு இளைஞர்கள், இறையியல் மாணவன் ஒருவன், பைபிள் படங்கள் என்பவற்றுடன் புறப்பட்டோம். இங்குள்ள மூன்று தீவுகளில் நாங்கள் கூட்டங்களை நடத்தினோம்.

கூடுதலான நேரத்தை நெடுந்தீவில் செலவிட்டோம். இங்கு இதுவரையும் மிஷனறிகளைச் சேர்ந்தவர்கள் எவரும் வந்ததாகத் தெரியவில்லை. அதிலும் வெள்ளைக்காரப் பெண்கள் எவரும் வந்ததாகத் தெரியவில்லை. மாலையில் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என 150 பேர் கூடினர்.

நாங்கள் முதலில் பாலன் பிறப்பு பின்னர் இயேசுவின் அற்புதங்கள் என்பவற்றைப் போட்டுக் காட்டினோம். அனைவரும் அமைதியாக அமர்ந்திருந்து பார்த்தனர். அதன் பின்னர் காலை, மாலை வேளைகளில் வீடுகளுக்குந் சென்று கூட்டங்களை நடத்தினோம். பகல் நேரத்தில் கடும் வெப்பம் காரணமாக வீட்டை விட்டு வெளியேற முடியவில்லை. இங்கு 2000 பேர் வசிக்கின்றனர். குறைந்த சாதியினர் பெரும்பாலும் கத்தோலிக்கர்கள். ஏனையோர் சைவர்கள். இங்கு மிஷனறிப் பாடசாலை ஒன்று உள்ளது. 150 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இங்கு கணபதிப்பிள்ளை என்ற உயர் சாதிக்காரர் ஒருவரைத் தவிர வேறு எவரும் மதம் மாற்றப்படவில்லை.

இவர் தற்போது மானிப்பாயிலுள்ள ஆங்கிலப் பாடசாலையில் கல்வி பயின்று வருகிறார்.

இவர் தனது கல்வியை முடித்துக்கொண்டு ஒரு மதப் பிரசாரகராக மாறத் திட்டமிட்டுள்ளார். இவர் எமக்குப் பெரிதும் உதவியாக இருந்தார். தனது நண்பர்களை எமது கூட்டங்களுக்கு அழைத்து வருவார். இவருடைய பேரன் இந்தத் தீவில் மிகுந்த செல்வாக்குள்ள ஒருவர். இப்போது சைவக் கோயில் ஒன்றைக்கட்டும் பணியில் ஈடுபட்டுள்ளார். 'எனது பேரனை கிறிஸ்தவராக மாற்ற வேண்டும். நான் அவரை மிகவும் நேசிக்கிறேன்' என கணபதிப்பிள்ளை எம்மிடம் சொன்னார்.

> நாங்கள் முதலில் பாலன் பிறப்பு பின்னர் இயேசுவின் அற்புதங்கள் என்பவற்றை போட்டுக் காட்டினோம். அனைவரும் அமைதியாக அமர்ந்திருந்து பார்த்தனர். அதன் பின்னர் காலை, மாலை வேளைகளில் வீடுகளுக்குச் சென்று கூட்டங்களை நடத்தினோம்.

இங்குள்ள மக்கள் கிறிஸ்தவத்தை தழுவ விரும்புகின்றனர். கணபதிப்பிள்ளையின் நான்கு சகோதரிகளும் என்னிடம் வந்து 'கணபதிப்பிள்ளை உங்களைத்தான், தனது தாய் என்று சொல்கிறான். நீங்கள் அவனை அழைத்துச் செல்லுங்கள்' எனக் கூறினர். சகோதரிகள் அனைவரும் திருமணமானவர்கள். நிறைய நகை அணிந்திருந்தனர். எனது தோளில் கைகளை போட்டு உள்ளூர்ப் பாணியில் என்னை முத்தமிட்டனர். அவர்களிடமிருந்து ரோஜா வாசனை வீசியது.

கணபதிப்பிள்ளையின் மைத்துனர் ஒருவர் எம்முடன் இணைந்து கொள்ள விரும்பினார். நாங்கள் அவரை தெல்லிப்பழை பயிற்சிக் கல்லூரிக்கு அனுப்பினோம்.

எமது கூட்டங்கள் நன்றாக வேலை செய்திருக்கின்றன. நாங்கள் வரும் போது 11 பேர் எம்முடன் இணைந்து கொள்ள விரும்பினர். நாங்கள் அவர்களை ஞானஸ்நானம் பெறுவதற்காக அறநெறிப் பாடசாலைக்கு அனுப்பினோம்.

அவர்களிடம் "நீங்கள் எதற்காக மதம் மாறுகிறீர்கள்?" என்று கேட்டதற்கு "எமது கடவுள்கள் போர் புரிந்ததாக நான் படித்திருக்கிறேன். ஆனால் அன்பு செலுத்தி இறந்ததாக நான் படிக்கவில்லை"- என்றார் ஒருவர். இந்த உயர் சாதியினர் அனைவரும் உறவினர்கள்.

ஒன்றாக இணைந்து தான் வந்துள்ளனர். இவர்கள் விருந்தோம்பலில் சிறந்து விளங்குகின்றனர். நாங்கள் அவர்களின் வீடுகளுக்குச் சென்றால் "நாங்கள் உங்களுக்கு என்ன தருவது?" என்று கேட்பார்கள். வீட்டில் நிற்கும் மாட்டையோ, ஆட்டையோ, எருமையையோ வாசலுக்குக் கொண்டு வந்து பால் கறந்து மூங்கிலுக்குள் விட்டு வாழையிலையால் மூடி தருவார்கள்.

எமது பிரயாணம் மிக இனிமையாக அமைந்தது. நாங்கள் புறப்பட்டபோது அங்குள்ள மக்கள் கவலைப்பட்டார்கள். சில பெண்கள் தங்களுடன் எம்மைத் தங்கியிருக்குமாறு கேட்டனர். நாங்கள் மீண்டும் வருவோம் எனக் கூறி விடை பெற்றோம்.


பாடசாலையிலிருந்து விலகிச் செல்லும் பெண்கள் திரும்ப வருவதில்லை. அவர்களது பெற்றோர் அவர்களுக்கு சைவ ஆண்களை திருமணம் செய்து வைக்கின்றனர். விடுதியில் தங்கிப் படித்துக் கொண்டிருந்த மாணவி ஒருவர் இறந்துவிட்டார்.

நாங்கள் அவரது இறுதிச்சடங்கில் கலந்துகொண்டோம். அயலில் உள்ள பெண்கள் அனைவரும் வந்து மாரடித்தனர். இப்படி காலையும் மாலையும் ஏழு நாள் ஒப்பாரி வைத்து அழுவது இந் நாட்டு மரபு.

*(வரலாறு தொடரு...)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**21.10.2022 இல் காலமான ஈழத்தின் மூத்த எழுத்தாளர் சாகித்யரத்னா தெளிவத்தை ஜோசப்புக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் அவரது 'அம்மா' என்ற சிறுகதை இங்கு மீள்பிரசுரமாகின்றது.**

# அம்மா



சஞ்சீவி சிறுகதை

○ தெளிவத்தை ஜோசப்

இன்னும் இரண்டொரு சூரியன் இருந்தால்தான் கட்டுப்படியாகும் என்று பட்டது அவனுக்கு.

எலும்பைக் குடையும் நுவரெலியா குளிருக்கு. இந்த ஒரு சூரியன் போதாதுதான். டார்வினின் நண்பரும் விஞ்ஞானியும் தத்துவஞானியுமான ஏர்னஸ்ட் ஹெகல் என்பார், உள சோர்வோ உடற்சோர்வோ உள்ளவர்களுக்கு இது ஒரு மெக்கா என்று வர்ணித்த அதே நுவரெலியாதான்.

இவனுக்கு இரண்டு சோர்வுமே சேர்ந்தாற்போல் வந்திருக்கின்றன. நிற்க முடியவில்லை. வெடவெடக்கிறது. நடக்க முடியவில்லை. நடுங்குகிறது. உட்கார முடியவில்லை, ஊசியாய் குத்துகிறது!...... இப்படியும் ஒரு குளிரா! இப்படியும் ஒரு ஊரா!

காற்றின் குளிர், மயிர்கால்கள் ஊடாகத் தோலுக்குள் நுழைத்து, தசைகளுக்குள் வியாபித்து, ஒவ்வொன்று ஒவ்வொன்றாய் எலும்புகளைத் தேடித் தேடி எண்ணிச் சுற்றிச் சுற்றி..... உடல் ஜில்லிட்டு விரைத்துப் போகிறது.

இதே மாதத்தில் மூன்றாவது தடவை இது.

அம்மாவைப் பார்க்கப் போக வேண்டும் என்னும் பேச்செழுந்த போதே லயத்துக்கு வரமாட்டோம் என்று மக்கார் பண்ணினார்கள் மனைவியும் மகளும். அவனுக்கும் நியாயமாகவேதான் பட்டது.

நுவரெலியாவிலிருந்து பதினெட்டு - இருபது மைல் தொலைவிலுள்ள அந்தத் தேயிலைத் தோட்டத்துக்கு வாடகைக்கு ஒரு கார் பிடித்துக் கொண்டுதான் போக வேண்டும். பஸ்ஸிலும் போகலாம்தான். ஆனால் நுவரெலியா பஸ் ஸ்டாண்டில் பஸ் ஏறுவதென்பது ஒரு சர்க்கஸ் விளையாட்டு மாதிரி. ஸ்டாண்டை நோக்கி ஓடிவரும்போதே பஸ்ஸில் ஏறும் சாகஸம் தெரிந்திருக்க வேண்டும். அடித்துப் பிடித்து முட்டி மோதிக் கொண்டு ஏறத் தைர்யம் வேண்டும். விழாமல், கால் செருப்பை அறுத்துக் கொள்ளாமல் பாய்ந்து தொற்றிக் கொள்ளும் லாவகம் தெரிய வேண்டும். குடையைக் கண்டதும் மிரளும் பசுமாடுபோல் கூட்டத்தைக் கண்டாலே மிரளும் இதுகளுடன் எப்படி பஸ் ஏறுவான்?

ஆகவே அம்மாவைப் பார்க்கத்தானே என்று மனதைத் திடப்படுத்திக் கொண்டு வாடகைக் கார்தான். இங்கிருந்து ஐம்பது ரூபாயில் முடியும் பயணம் இன்னொரு சைபரைச் சேர்த்துக் கொள்ளும்.

நுவரெலியா டவுனில் அவன் நண்பர் தாயுமானவர் லாயராக இருக்கிறார். அவருடைய வீட்டில் மனைவியையும் மகளையும் நிறுத்திவிட்டு தான் மட்டும் தோட்டத்துக்குச் சென்று வருவதாக ஏற்பாடு.

இந்தமுறை அம்மா ஏமாற்ற மாட்டார்கள் என்றே எண்ணிக் கொண்டான்.

"அங்கே இருந்து நீங்கள் மட்டும் தனியாக அம்மாவைப் பார்க்க போவதென்றால் இங்கிருந்தே தனியாகப் போய் வாருங்களேன்.! நாங்கள் வீட்டில் இருக்கிறோம் என்றாள் மனைவி அவன்தான் சம்மதிக்கவில்லை. ஒரு வேளை அம்மா செத்துப்போய்விட்டால் மறுபடி கொழும்பு வந்தல்லவா கூட்டிப் போகவேண்டும் என்று மனைவியைச் சமாதானம் செய்தான். அவள்தான் பிடிவாதமாகத் தோட்டத்துக்கே வருவதென்றாள் - இவ்வளவு தூரம் வந்துவிட்டு இங்கே என்ன தங்குவது என்று.

கார் பிடித்துக் கொண்டெ போனாலும் மேலே கோவிலடியில் நிறுத்திவிட வேண்டும். கோவிலை ஒட்டிக் காடாய் மண்டிக் கிடக்கும் மல்லிகைப் புதர். கரும்பச்சை வானத்தில் நட்சத்திரங்களை வாரி இறைத்தாற்போல் புதர் நிறைய வெள்ளை வெள்ளையாய் வெடித்துச் சிரிக்கும் மலர்கள். கண் மட்டுமல்ல மனமும் கொள்ளாக் காட்சிதான், இல்லை என்று கூறவில்லை!.... மல்லிகைப் புதரை ஒட்டினாற்போல் கொழுந்து நிறுக்கும் மடுவம். மடுவத்தின் ஓரமாக வந்து நின்று கிணற்றுக்குள் எட்டிப் பார்ப்பதுபோல் கீழே பார்த்தால் மலையடிவாரத்தின் பள்ளத்துக்குள் தெரியும் ஏழெட்டுப் பத்து லயத்துக்கூரைகள் சிவப்புச் சிவப்பாய் கோடாகப் புகை விட்டுக் கொண்டு.

அதில் ஒன்றின் ஓரத்துக் காம்பிராதான் அம்மாவின் வாசஸ்தலம். அம்மாவும் தம்பியின் குடும்பமும் அதற்குள்தான்.

வெள்ளைக்காரன் தேயிலை பயிரிடத் தோடங்கிய காலத்தில் கட்டப்பட்டவை இந்த லயங்கள். நூற்றைம்பது - அறுபது ஆண்டு பழைமை வாய்தவை. மாற்றமே இல்லாமல் அப்படியே தொடர்கின்றன. அரசுக்கு அரசு தலைவர்கள் மாறுகிறார்கள் ஆனாலும் இவை மாதுவதில்லை!

கொழுந்து மடுவத்துக்கு இந்தப் பக்கமாக இரண்டு தேயிலைச் செடிகளின் இடைவெளிக்குள் ஒரு குறுக்குபாதை இறங்குகிறது. படிகள் கட்டப்பட்டுக் கல் பெயர்ந்து, பல் விழுந்த எகிறுபோல்.....

அதன் வழியாகக் கீழே இறங்க வேண்டும். நின்று நெளிந்து ஒடிந்து திரும்பி இருநூற்றிறுபது படிகள் இறங்கிவிட்டால் அம்மா இருக்கும் லயம் வந்துவிடும்.

அது எப்படி அவ்வளவு கரைக்டாக இறுநூற்றறுபது படி என்று கேட்கத் தோன்றுகிறதா? பள்ளி நாட்களில் தினசரி இரண்டு தடவை ஏறி இறங்கிய படிக்கட்டாயிற்றே! இறங்கி ஓடும்போது முதல் நாலைந்து படிகளை விட்டு விட்டு எண்ணத் தொடங்கினாலோ அல்லது கடைசி நாலைந்து படிகள் வரும் போது எண்ணுவதை எதேட்சையாக விட்டுவிட்டாலோ, கல்லுக்கு கல் கால் வைத்து ஓடும்போது எண்ணி எண்ணி ஓடிய படிகள்தான். பழக்கம்தான். இருநூற்றறுபதுக்குக் கூடுமே தவிர குறையாது.

சப்பாத்தின் உயர்குதி கல்லிடையில் சிக்கிக் கால்புரண்டு சுளுக்கிக் கொண்ட அனுபவங்களால் கழற்றிக் கையில் தூக்கிக் கொண்டு மனைவியும் மகளும் அவன் பின்னால் இறங்குவார்கள்.

அவர்களின் முகத்தைப் பார்த்துக் கண்களைச் சந்திக்கும் தைரியம் அப்போது அவனிக்கிருப்பதில்லை.

கோவிலடியில் கார் நிற்கும்போதே கீழே லயத்தில் பக்கத்துக் காம்பிராக் காமாட்சி, "பெரியத்தம்பி வாறாப்பல இருக்கேம்மா?....." என்று விசாரிக்கத் தொடங்கியிருக்கும்.

வாசல்வரை வந்து பூவரச மரத்தடியில் அம்மா நிற்பார்கள். தம்பியின் பிள்ளைகள் பின்னால் நிற்கும். தம்பி பட்டியில் இருப்பான். ஏதாவது மண்ணை நோண்டிக் கொண்டு. "பாத்து. பாத்துப்பா!.... பாத மாதிரியா இருக்கு?.... அட மழயில மண்மணல்லாம் அரிச்சுக்கிட்டுப் போயிறுச்சி!....... பொந்துக்குள்ளாற ஏதுங் கால விட்டுக்குறாம!....." என்று குரல் கொடுத்தபடி இரு கைகளையும் நீட்டிக் கொண்டு அவர்களை வரவேற்கும் அம்மா.....

வயதால் பாதியும் குளிரால் மீதியுமாகச் சுருங்கித் தொங்கும் தொல்களுடன் அந்த முகம், அந்தக் கைகள்!......

அள்ளி அணைத்துக் கொள்ளும் அந்தக் கைகளின் சிலிர்ப்பு இவனுடலுடன் இழைய, அப்படியே அலாக்காக அம்மாவைத் தூக்கி ஒரு சுற்றுச் சுற்றி உள்ளே நுழைந்து விடுவான்.

பின்னால் நிற்கும் சின்னதுகள் பேந்த பேந்த முழிக்கும்.

"விடுப்பா விடு!... நான் புள்ளையக் கொஞ்சணும்!" என்று தன்னை விடுவிடுத்துக்கொண்டு வெளியே திரும்புகையில் மருமகளும் கொழும்புப் பேத்தியும் லயத்துக்குள் நுழைவார்கள்.

மருமகளின் நெற்றியில் கையை வைத்துக் கன்னம் வழிதாவாய் வரை உருவி நெற்றிப் பொட்டில் விரல்களை நெரித்துப் படபட வென்று முறித்துக்கொண்டு, "பாத்தியா எவ்வளவு திருஸ்டி என் செல்லத்துக்கு!" என்றபடி துணிகளை இழுத்துக் கொடியில் பொட்டுவிட்டு நாற்காலியை இழுத்துப் போட்டு "இரும்மா!" என்பார்கள். கொழும்புப் பேத்தியின் ஆப்பிள் கன்னங்களைத் தனது கைக்குள் அடக்கி அப்படியே இழுத்து நெஞ்சோடு அணைத்துக் கொள்வார்கள்.... பேத்தி, 'ஹய்ய்' என்று கத்துவாள். "பாட்டி கை குளிருதாம்மா?" என்பார்கள் சிரித்தபடி... "குத்துது!" என்பாள் பேத்தி.

அவனும் மகளும் கட்டிலில் அமர்ந்து கொள்வார்கள். அம்மா இருவருக்கும் நடுவில் படத்துக்கு அமர்வதுபோல் அமர்ந்து கொள்வார்கள்.

தம்பியின் மனைவி ஆவி பறக்கப் பறக்கத் தேனீர் கிளாஸ்களுடன் வந்து நிற்பாள்.

"தேத்தண்ணி குடிப்பியாம்மமா?" என்று தேனீர் கிளாஸை எடுத்து நீட்டுவார் அம்மா பேத்தியிடம்.

"ம்!" என்றபடி கிளாஸை வாங்கிக் கொள்வாள் பேத்தி. 'காலையில் தேத்தண்ணி குடிக்க மாட்டோம். கோப்பிதான்' என்பது போன்ற பாட்டிக்கு அசௌகரியம் ஏற்படுத்தும் பேச்சுக்கள் கூடாது என்று சின்னவளுக்குச் சொல்லிக் கொடுத்து வைத்திருக்கிறான். எது எது என்பதெல்லாம் அந்தச் சிறிசுக்கு எப்படித் தெரியும்? ஆகவே எல்லாவற்றிற்கும் 'ம்' தான்!

"அம்மா, டீ!" என்றவாறு அம்மாவிடம் மகள் எழுந்து செல்வதன் அர்த்தம், 'எனக்கு டீ வேணாம்! என்பதுதான்! "ட்றிங் லிட்டில், வெரி கோல்ட், நோ?" என்றபடி கிளாஸை வாங்கி மகளுக்குப் பருக்கத் தொடங்குவாள் தாய்.

"நீ குடிம்மா,நான் குடுக்கிறேன் பாப்பாவுக்கு!" என்றவாறு அம்மா கட்டிலை விட்டிறங்குவார்கள்.

"எல்லாம் ஆயும் மகளும் பாத்துக்கிறுங்க, நீங்க இருங்க!" என்று, தான் பாதி குடித்த கிளாஸை அம்மாவின் வாயில் வைத்து மெது மெதுவாகச் சாய்ப்பான் அவன்.

"நீ குடிப்பா!" என்றாலும் அம்மாவின் தொண்டைக்குள் அது ஜீவாம்ருதமாய் இறங்கும். கண்கள் படபடத்துக் கசியும் புருவத்துக்கும் தெரியாமல்.

வேரும் மண்ணுமாய்; நாலைந்து நோக்கல் கிழங்குடன் வந்து நிற்பான் தம்பி.

[illegible] திருக்கின் [illegible] கால் சட்டை, சப்பாத்து, மேஸ் போட்டு. அதுவரை கையில் கத்தியும் தோளில் மண்வெட்டியும்தான். அவன் மனைவி தோட்டத்தில் வேலை. பழைய மலையோ மட்டக் கொழுந்தோ கொழுந்துதான்.

கட்டைவிரல் நுனியும் ஆள்காட்டி விரலோரங்களும் வரியாய்த் தேயிலைக் காட்டையுடன் கறுப்புக் கறுப்பாய்க் கோடு பாய்ந்து கிடப்பதெல்லாம் கொழுந்தாய்வின் முத்திரைகள். பெரியண்ணன் சம்சாரம் வந்தால் அந்தப் பளிங்கு விரல்கள் தான் இவளை முதலில் கவர்வது. அக்காவின் மோதிரம்கூட அந்த விரலால்தான் பெருமை அடைவதாக எண்ணிக்கொள்வாள்!

நோக்கல் கிழங்கை வேருடன் பார்த்தே இராத மகளுக்கு ஒரே வியப்பு! கண் விரிய நிற்பாள்!

"வேர வெட்டி வீசுங்க! இல்லாட்டி மண்ண அலசிக்கிட்டு வாங்க!" என்று மனைவியும் "கோழியத் தொறந்து உட்றாதப்பா! கோணக் கொண்ட சேவல சுத்தம் பண்ணிக் குடுத்துறு! "என்று அம்மாவும் அவனுக்கு உத்தவிடுவார்கள்.

இருவருக்குமே தலையை ஆட்டிவிட்டு அண்ணனைப் பார்ப்பான் தம்பி.

"ராத் தங்கிட்டு நாளைக்குப் போங்களேன்? ஆள் நெருங்கி என்னா ஆயிறப் போவுது?..... மனசிருந்தா எடமாஇருக்காது!..... கார்க்காரன நாளைக்கு வான்னு அனுப்பிட்டு வரவா?....." அண்ணன் குடும்பத்தை ஒரு இரவு தங்களுடன் தங்கவைத்துக் கொள்ளும் ஆசை அவன் முகத்தில் நர்த்தனம் ஆடும். அம்மாவுடன் தங்கி இரவைக் கழிக்க அவனுக்கும் ஆசைதான். ஆனாலும் இருக்கும் அந்த ஒரே காம்பிராவில் படுக்க, எழுந்திருக்க, காலையில் வெளியே தெருவே போக எங்கே வசதி இருக்கிறது?

லயத்தின் முன் லைசன் கல்லில் நின்றுதான் பல் துலக்கி முகம் கழுவ வேண்டும். முழு லயமுமே நின்று வேடிக்கை பார்க்கும். இல்லாவிட்டால் பட்டிப் பக்கம் போய்விட வேண்டும்.....

முழு லயத்துக்குமே இருப்பது இரண்டே மலசல கூடங்கள் .அதுவும் தேயிலைக்குள்ளே போக வேண்டும் கையில் செம்புடனோ கைவாளியுடனோ!

கொழும்பிலேயே பழகிவிட்ட மனைவி மக்களுடன் இதெல்லாம் பெரும் சிரமம். ஆகவேதான் மனதைக் கடித்துக்கொண்டு வந்த அன்றே கிளம்பிவிடுவான்!

தனியாக வந்தால் தங்கிவிட்டே செல்வான். அவன் புரண்டெழுந்த மண் அது! ஏக்கத்துடன் பார்த்துக்கொண்டிருக்கும் தம்பியைப் பார்த்து ஒருவகை ஏமாற்றத்துடன் கூறுவான், "இல்ல ராசு கார்க்காரன நாலு மணிபோல வான்னு சொல்லி அனுப்பீட்டுத்தான் வந்தேன்...." என்று.

"அம்மி அரைக்கிற சத்தங்கேக்குது என்னா அரைபடுது?" என்பான்.

"நீ சும்மா இரேன்; கொச்சிக்கா அரைக்கிறா உன் கொழுந்தியா" என்று கூறியபடி அம்மா தேனீர் கிளாஸ்களை எடுத்துக்கொண்டு அடுப்படியை நோக்கி நடப்பார்கள். அந்த வயதிலும் அந்தக் குளிரிலும் அம்மா சிட்டைப்போல் பறப்பதாகத் தெரியும் அவனுக்கு. உழைத்து உரமேறிய உடல் சீக்கிற்கோ தளர்வுக்கோ அது இடமளிக்காது. அவனுடைய வருகையும் அவளுக்கு ஒரு புதுத் தென்பைக் கொடுக்கிறது. உடலிலே ஒரு இளமை,நடையிலே ஒரு துள்ளல்! தம்பி மனைவியைக் கொழுந்தியாள் என்றழைக்கும் உறவு முறையின் உரிமை, குழம்பாக்கக் கொச்சிக்காய் அரைபடும் அம்மிச் சத்தம் - இத்தியாதிகளைக் கேட்க இங்கு வரவேண்டும்!

கொழும்பில் யார் அம்மியில் அரைக்கிறார்கள்? பொலித்தீன் பொட்டலங்கள் தானே!

" என்னாப்பா, அப்படியே உக்காந்துட்டா எப்படி?......." என்று மனைவியைக் கிளப்புவான். அவன் மகள் இன்னும் அம்மாவின் மடியிலிருந்து எழவில்லை! கூரையில் செருகியிருக்கும் தீட்டுக் கட்டையும் கத்தியுமாகத் தம்பி தோட்டத்துக்குள் சென்று விடு வான். கோழி கறேபுறே என்று கூக்குரலிடும்.

*(அடுத்தவாரம் தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது 09 ஊரிலும்தான்...

சி.கதிர்காமநாதன்

வெங்கிட்டுவைப் பற்றியும் சொல்ல வேண்டும். எங்கள் பஸ்ஸில் அட்டெண்டர் வேலை செய்து கொண்டிருந்தான். துணிச்சல்காரன். நாமக்கல்லிலே குஞ்சிமப்பாளையம் சொந்தஊர். பஸ்ஸில் வேலை முடிந்து ஓய்விலிருக்கும்போது ஊருக்குப் போய் விடுவான். ஒருமுறை என்னையும் அழைத்துக் கொண்டுபோய் ஊர்க்கோழி சமைத்துப் போட்டான். நன்றாக இருந்தது. என்னுடைய நிலையைக் கொஞ்சம் புரிந்தவன். நான் சில விடயங்களிலே தயக்கம் காட்டும்போது,

"ஏன் சார் பயந்து சாகிறீங்க?" என்பான்.

பஸ் போய்க் கொண்டிருந்தது. பயணிகள் படம் பார்த்துக் கொண்டிருந்தனர். கடும் குளிர்காற்று ஜன்னலூடாக உள்ளே அடித்தது. சாரிசாரியாக வாகனங்கள் போய்க் கொண்டிருந்தன.

"எப்பசார் ஊருக்குப் போறீங்க? இங்க வந்ததுக்கப்பறம் நீங்க ஊருக்குப் போகல்லதானே?"

"போகத்தான் வேணும். இன்னும் சரியான நேரம் வரேல்லை"

விழுப்புரத்தில் பஸ் ஓய்ந்து நின்றது.


"சார் சாப்பிடலாமா?"

"நான் சாப்பிட்டுத்தான் வந்தேன். நீர் சாப்பிட்டு விட்டு வாரும்" என வெங்கிட்டுவிடம் செல்லியபடி பணத்தைக் கொடுத்து அனுப்பினேன், கொஞ்சநேரத்தில் பஸ் புறப்பட்டது.

சில நிமிடங்களில் நித்திரை வந்துவிட்டது.

விடியத் தொடங்கியபோது பஸ் மதுரையை நெருங்கிக் கொண்டிருந்தது. ஏற்கனவே சில தடவைகள் மதுரைக்கு வந்து ,மதுரை மீனாட்சி அம்மன் கோவில், அழகர் கோவில், நாயக்கர் அரண்மனை பார்த்துப் பார்த்து இன்னமும் திருப்தி அடையாமல் இருந்தேன். மறுபடியும் இங்கு வரும் சந்தர்ப்பம் வந்துவிட்டது.

மதுரைக்குப் பக்கத்தில் 'விநாயகர் லொட்ஜில்' ரூம் எடுத்துத் தங்கினோம்.



ஒன்பது மணிக்குப் பின்தான் இங்கு கடைகள் திறக்கும். எனவே அதுவரை உடம்பைக் கட்டிலில் ஓய்வாகக் கிடத்தினோம்.

எட்டு மணிக்குக் குளித்து வசந்தபவனில் காலைச் சாடு முடித்து குறித்த அந்தக் கண்ணாடி விற்கும் கடையை அடைந்தோம். வெங்கிட்டுவுக்கு ஏற்கனவே தெரிந்த கடைதான். விலைபேசிமுடித்து நாளை மறுநாள் தருவதாகக் கூறினார். கண்ணாடிகளைக் கவனமாகச் சிறிய 'வானில்' அனுப்பிவிடலாம் என்றும் சொன்னார்.

வெங்கிட்டு தான் வானில் வருவதாகவும் என்னை பஸ்ஸிலே போகும்படியும் சொன்னான். நானும் உடன் வருவதாகச் சொன்னேன்.

"வேணாம் சார். கண்ணாடியோட வண்டி நல்ல வெயிட்டா இருக்கும். முன்னால இருந்துவர முடியாது. நீங்க பஸ்ல போயிடுங்க"

சரி. இனி அடுத்த வேலை என்ன?

மதியம் சாப்பிட்டுவிட்டு நன்றாகத் தூங்கினோம். பின்னேரம் மெல்ல ரவுணைச் சுற்றினோம். கொஞ்சம் டிபன் சாப்பிட்டுவிட்டு ரிக்சோவில் ஏறி மதுரை மீனாட்சி அம்மன் கோவிலை அடைந்தோம். ஒவ்வொன்றையும் பார்க்கப் பார்க்க எப்படி முடிந்தது? என்ற கேள்வியே எழுந்து நின்றது. பார்க்க அலுக்கவில்லை.

படம்பார்த்துவிட்டு இரவைக் கழித்தோம். காலை வெங்கிட்டுவை பேப்பர் வாங்கிவரும்படி சொன்னேனன். சற்றுநேரத்தில் வேகமாக வந்த வெங்கிட்டு, "சார் பேப்பரைப் பாருங்க" என்றபடி பேப்பரை எனக்கு முன் போட்டார். தலைப்புச் செய்தியைப் பார்க்க மனம் திடுக்குற்றது.

"சென்னையில் பொலிஸ் தேடுதல் வேட்டை தீவிரம்!

இலங்கைத் தமிழர்கள் தங்கும் பகுதிகள், விடுதிகள், வீதியிலே செல்லும் வாகனங்கள் தீவிர சோதனை, குற்றவாளிகள் தப்பமுடியாதவாறு தீவிர பாதுகாப்பு" இதனைச் செய்தவர்கள் இலங்கைத் தமிழர்களா? தொடர்ந்து படிக்க முடிய வில்லை. தேடுதல் வேட்டை தீவிரம் என்றால் எல்லா இடங்களிலும் சோதனை செய்வார்கள். சந்தேகத்தின் பேரில் உள்ளே தள்ளுவார்கள். இனி என்ன செய்வது? படுக்கையில் விழுந்துவிட்டேன்.

"என்னசார் பயந்திட்டீங்களா? இப்படித்தான் முன்னமும் நடந்தது. ஒரு நாளைக்கு இப்படிப் பெரிசா நியூஸ்வரும். பிறகு சரியாயிடும்"

வெங்கிட்டு சாதாரணமாகச் சொல்லிவிட்டார். காலையில் எந்தவேலையும் செய்யவில்லை. வெங்கிட்டுவும் என்னை விட்டபாடில்லை. வெங்கிட்டுவுக்குச் சிரிப்பு வந்தது.

"எந்திரிங்க சார். குளிச்சுச் சாப்பிடலாம். பசில உயிர்போகுது. இத இப்படியே விட்டிருங்க"

றோட்டில் நடக்கக் கூச்சமாக இருந்தது. உரத்துக் கதைக்க முடியவில்லை. என் பேச்சுக் காட்டிக் கொடுத்துவிடுமோ?

▣ ▣ ▣ ▣

பின்னேரம் பேப்பர் படித்ததும் பயம் இன்னும் அதிகமானது.

'திருச்சி, மதுரை நகரங்களிலும் தீவிர சோதனை. இரவிரவாகப் பயணிகள் தங்கும் விடுதிகள் வாகனங்கள் சோதனை'

ஒரே குழப்பமாக இருந்தது.

"என்ன சார்? நீங்க இங்க இருக்கிறதாலதான் நியூஸ் போடறாங்க"

வெங்கிட்டு வேறு என்னைக் கிண்டல் செய்தார்.

நாளை வரை காத்திருக்க வேண்டும். இங்கே சோதனை செய்ய வருவார்களா?

வந்தால் என்ன கேட்பார்கள்?

"என்ன செய்கிறாய்? எப்போ வந்தாய்? படகிலா? அகதியாகவா? எந்த அகதி முகாம்? பாஸ்போட் இருக்கா? வந்து எவ்வளவு காலம்? ஏன் விசா முடிஞ்சதும் போகல? இந்தப் படத்தில உள்ளவர்களைத் தெரியுமா? நீங்கள்ளாம் கேடிங்க ஆச்சே! ஏன் இங்க வந்தே?"

கேள்விகள் தொடரும். சந்தேகம் அதிகமாகும்.

(தொடரும்)

# உடல் எடையை குறைத்து வலுப்பெற...

உடல் எடையை குறைக்க எத்தனை முயற்சிகள் மேற்கொண்டாலும் சிலருக்கு அந்த கனவு கைகூடுவதே இல்லை. உடல் எடை குறைய உடற்பயிற்சி செய்தால் போதும் என்று இருந்துவிடுவது எந்த பயனையும் தராது. வாழ்க்கை முறையிலும், உணவிலும் உரிய மாறுதல்களை ஏற்படுத்தாமல் உடல் எடையை குறைப்பது சாத்தியமற்றது.

**தண்ணீர்:** தண்ணீர் உடலுக்கு நீரூட்டும். போதியளவு தண்ணீர் அருந்துவதன் மூலம் உடலிலிருந்து கழிவுகள் அகற்றப்பட்டு புத்துணர்ச்சி உண்டாகும்.

**யோகட், தேன்:** புரதச்சத்து அதிகமுள்ள யோகட் வளர்சிதை மாற்றம் அதிகரிக்க உதவும்.

**கரட் ஜூஸ்:** ஊட்டச் சத்துக்கள் அதிகம் உள்ள கரட் ஜூஸில் கலோரிகள் குறைவாக இருப்பதுடன், நார்ச்சத்து, வைற்றமின் ஆகியவை அதிகமுள்ளது. உடல் எடையை குறைக்கும் பித்தநீர் சுரக்க கரட் ஜூஸ் உதவுகிறது.

**ஒரேஞ்சு, திராட்சை, எலுமிச்சை ஜூஸ்:** இவற்றில் கலோரிகள் குறைவாக விற்றமின் சி மற்றும் பி அதிகமுள்ளது.

**புரதச்சத்து மிகுந்த உணவு:** உணவில் புரதச்சத்து அதிகம் சேர்த்துக் கொண்டால் வளர்சிதை மாற்றம் அதிகரிப்பதோடு, தசைகள் வலுவாகி, உடல் எடை குறைய உதவும்.

அத்துடன் உடல் எடையை சீராக பராமரிக்க போதியளவு தூக்கம் அவசியம்.

காலை உணவை தவிர்க்காதீர். தவறாது உடற்பயிற்சி செய்யுங்கள்.



# நண்டு மசாலா



| | |
|---|---|
| பெரிய நண்டு | 6 |
| சிகப்பு மிளகாய் | 6 |
| தனியாத்தூள் | 2 தேக்கரண்டி |
| இஞ்சி,பூண்டு அரைத்தது | 2 தேக்கரண்டி |
| தேங்காய்த்துறுவல் | 3 மேசைக்கரண்டி |
| பச்சை மிளகாய் | 2 |
| தக்காளி | 1 |
| கறிவேப்பிலை | 1 ஆர்க்கு |
| மஞ்சள்தூள் | 3 சிட்டிகை |
| சின்ன வெங்காயம் | 10 |
| உப்பு | தேவையான அளவு |
| எண்ணெய் | 4 மேசைக்கரண்டி |



நண்டை சுத்தம் செய்து கொள்ளவும்.

தேங்காய்த்துறுவல், தனியாத்தூள், வெங்காயம், சிகப்பு மிளகாய் இவற்றை அரைத்துக் கொள்ளவும்

தக்காளியை நறுக்கிக் கொள்ளவும்.

வாணலியில் இதயம் எண்ணெய் ஊற்றி, காய்ந்ததும் இஞ்சி,பூண்டு அரைத்தது போட்டு வதக்கி, பச்சை மிளகாய், தக்காளி, கறிவேப்பிலை போட்டு வதக்கவும்.

வதக்கியபின் அரைத்த மஸாலா, மஞ்சள்தூள் போட்டு வதக்கவும் >சிறிதளவு தண்ணீர் ஊற்றி, உப்பு, மஞ்சள்தூள் போடவும்.


அதன்பின் நண்டைப் போட்டுக் கிளறி விடவும்.

நண்டு வெந்து, மஸாலா கெட்டியானதும் இறக்கி பரிமாறவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23 ஒக்ரோபர் 2022

# சிறுநீரகத் தானம்...



*(முதலாம் பக்கத் தொடர்ச்சி)*

கள் குருதிச் சுத்திகரிப்புச் செய்யப்படுகிறது. மேலும் பலர் ஒவ்வொரு வாரமும் இரத்தச் சுத்திகரிப்புச் செய்து வருகின்றனர். இவ்வாறனவர்களது வாழ்வு மருத்துவமனையுடனேயே இணைந்துள்ளது.

யாழ். போதனா மருத்துவமனையில் இயங்கிவரும் இரத்தச்சுத்திகரிப்பு அலகானது (Dialysis Unit) 2003 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இவ் அலகானது சிறிய ஓர் இடத்தில் மிகக்குறைந்த ஆளணியினருடன் சிறந்த முறையிலே 24 மணிநேரமும் இயங்கிவரும் ஒரு விசேட மருத்துவ அலகாகும். சர்வதேச மருத்துவக் குழுவின்(IMHOUSA) நிதியுதவியுடன் இதனைத் தற்காலிகமாக விரிவுபடுத்தும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேலும் அரச உதவியுடன் 6 தளங்களைக் கொண்ட நிரந்தரக் கட்டடத் தொகுதி அமைக்கும் பணியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ். போதனா மருத்துவமனைக்கு கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் முதலான மாவட்டங்களில் இருந்தும் "டயலிசிஸ்" செய்வதற்காக பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு பலர் வருகிறார்கள். ஒருவர் "டயலிசிஸ்" செய்வதற்காக வரும்போது அவருக்கு உதவியாக இன்னொருவர் வருகின்றார். இதனால் குடும்பம் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகிறது. ஒருவர் சிறுநீரக செயலிழப்புக் காரணமாக "டயலிசிஸ்" செய்யும் மருத்துவப் பொறிமுறைக்கு வருகின்றபோது அவரைச் சார்ந்த குடும்பத்தின் சுதந்திரம் அல்லது சமூகச் செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்படுகிறது. "டயலிசிஸ்" செய்யும் பெரும்பாலானவர்களது வாழ்க்கை இவ்வாறு பல சவால்களை எதிர்நோக்கியிருக்கும்.

"டயலிசிஸ்" செய்யும் நிலைக்கு வந்த பெரும்பாலானோர் சிறுநீரக தானத்தை எதிர்பார்த்திருப்பார். சிறுநீரகம் செயலிழந்த ஒருவர் அவரது உடற்தகுதி, அவருக்கு உள்ள ஏனைய பாதிப்புக்கள், வயது என்பவற்றைக் கருத்திற்கொண்டு சிறுநீரகவியல் விசேட மருத்துவ நிபுணர்களால் சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சைக்கு பரிந்துரை செய்யப்படுவர். யாழ்ப்பாணத்தில் நூற்றுக்கும் அதிகமானவர்கள் சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சைக்காகக் காத்திருக்கின்றார்கள். ஆனாலும் மூளைச்சாவடைந்த ஒருவரிடமிருந்து சிறுநீரகத்தைத் தானமாகப் பெறுவதென்பது இலகுவானதல்ல.

இறப்புக்குப் பின்னர் சிறுநீரக தானம் செய்யும் நன்கொடையாளர்கள் கௌரவத்துக்கு உரியவர்கள்.

சிறுநீரகத்தை தானமாகப் பெற்ற ஒருவருக்கு புதிய ஒரு வாழ்வு கிடைக்கிறது. ஒருவருக்கு சிறுநீரகத்தை வழங்குவது என்பது பெறுபவருக்கு மட்டுமன்றி அவரைச் சார்ந்த சமூகத்துக்கும் புதியதொரு வாழ்வை, எதிர்காலத்தைக் கொடுக்கிறது; சுதந்திரத்தை வழங்குகிறது; நம்பிக்கையைக் கொடுக்கிறது.

தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட ஒருவர் சுவாசிப்பதில் இடர்பாடுகளை எதிர்நோக்கும்போது அவருக்குச் செயற்கைச் சுவாசம் வழங்கி உயிர்வாழ்வதற்கான உதவி வழங்கப்படுகிறது.

இந்நிலையில் ஒருவரது மூளையின் செயற்பாடு அற்றுப்போகின்றபோது அதனை மூளைச்சாவு என்பார்கள். இவ்வாறு மூளைச் சாவடைந்த ஒருவரது சிறுநீரகத்தைத் தானமாகப் பெறும் நடைமுறையே தற்சமயம் வடபகுதியில் காணப்படுகிறது. ஒருவருக்கு மூளைச்சாவு ஏற்பட்டு 12 மணிநேரத்துக்குள் சத்திரசிகிச்சை செய்து சிறுநீரகத்தைப் பெற்றுக் கொள்ளல்வேண்டும்.

தீவிர சிகிச்சைப் பிரிவில் மருத்துவ உபகரணங்களது உதவியின் மூலம் சுவாசிக்கும் ஒருவருடைய (Intubated patient) மூளையின் இறப்பை, பல்வேறு வழிகளால் மருத்துவர்கள் உறுதிப்படுத்துவர். மூளைச் சாவு என்பது 100 சதவீதம் மரணமடைந்த நிலையேயாகும். ஆனாலும் மூளைச் சாவடைந்த பின்னரும் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் செயற்கைச் சுவாசம், மற்றும் மருந்துகள் வழங்குவதன் மூலம் ஒருவரது இருதயம் செயற்பட்டபடி இருக்கும். மூளைச்சாவடைந்தவருக்கு மருந்துகள் வழங்குவது படிப்படியாகக் குறைக்கப்படும். மூளைச் சாவடைந்தவர் உயிர் பிழைப்பார் என்ற தவறான நம்பிக்கை பொதுமக்களிடையே காணப்படுகிறது.

தீவிர சிகிச்சைப் பிரிவில் மூளைச் சாவடைந்த ஒருவரது குடும்ப உறுப்பினர்களை அல்லது அந்தக் குடும்பத்தில் பொறுப்பு வாய்ந்த ஒரு நபரை அணுகி இறந்தவரது சிறுநீரகங்களைத் தானமாக வழங்குமாறு கேட்பது மருத்துவ நிபுணர்களுக்கு மிகவும் இக்கட்டான ஒரு நிலையாகும். இத்தகைய குடும்பத்தைச் சேர்ந்த நபர் ஒருவரிடம் துறைசார் மருத்துவ வல்லுநர்கள் நீண்ட உரையாடல் மேற்கொண்டு இறந்தவரது சிறுநீரகத்தைத் தானமாகப் பெறல் வேண்டும். மூளைச் சாவடைந்தவர்களது சிறுநீரகங்களைத் தானமாக வழங்கி இருவருக்கு வாழ்வு கொடுக்க முன்வருவோர் கௌரவத்துக்குரியவர்கள்; போற்றப்பட வேண்டியவர்கள்.

இலங்கையில் சிறுநீரகத்தை விற்பதோ அல்லது மறைமுகமாக சிறுநீரக விற்பனையைத் தூண்டுவதோ சட்ட விரோதமானதாகும். மூளைச் சாவடைந்தவர்களது சிறுநீரகத்தைத் தானமாகப் பெற்று

**இறப்புக்குப் பின்னர் சிறுநீரகங்களை வழங்கி பிறருக்கு வாழ்வுகொடுக்கும் நன்கொடையாளர்களைச் சமூகம் எதிர்பார்க்கிறது. சிறுநீரக தானம் என்பது உயிர்காக்கும் அறமாகும்.**

சிறுநீரகமாற்று சத்திர சிகிச்சை செய்யும் நடைமுறையானது அரச மருத்துமனைகளில் மட்டுமே மேற்கொள்ளப்படுகின்றது. தென்பகுதியிலிருந்து வடபகுதி மக்களுக்குத் தானமாகக் கிடைத்த சிறுநீரகங்கள்!

பிறரது உயிரைக் காக்கும் சிறுநீரக தானத்தை நாம் இறந்த பின்னர் செய்வதற்கு எமது சமூகம் முன்வரல் வேண்டும். ஒருவரது இறப்புக்குப் பின்னரும் அவர் வழங்கும் சிறுநீரகத் தானம் இருவருக்கு உயிர் வழங்குவது போன்றதாகும். இறந்த பின்னர் சிறுநீரக தானத்தைச் செய்வதற்கு சமூக மட்டத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் வேண்டும். ஒருவர் தனது இறப்புக்குப் பின்னர் சிறுநீரக தானத்தைச் செய்யுமாறு தனது குடும்ப உறுப்பினர்களுக்குக் கூறிவைக்கும்போது அச்சமூகத்தில் சிறுநீரக தானம் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படும்.

தென்னிலங்கையைச் சேர்ந்த சகோதர இனத்தவர்கள் நன்கொடையாக வழங்கிய சிறுநீரகங்களே வடபகுதியில் சிறுநீரகம் செயலிழந்தவர்களுக்குச் சிறுநீரகமாற்று சிகிச்சை மூலம் பொருத்தப்பட்டுள்ளமையை இங்கு நாம் நன்றியுடன் குறிப்பிடல் வேண்டும். அதேவேளை இங்கிருந்தும் சிறுநீரகங்கள் தென்பகுதிக்கு வழங்கப்பட்டுள்ளன.

இறப்புக்குப் பின்னர் சிறுநீரகங்களை வழங்கி பிறருக்கு வாழ்வுகொடுக்கும் நன்கொடையாளர்களைச் சமூகம் எதிர்பார்க்கிறது. சிறுநீரக தானம் என்பது உயிர்காக்கும் அறமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உரிய நெறி காண்க...

விதைத்ததை அறுத்து வினைப்பயன் எடுக்கும்
படிப்பினை தானோ சொல்கநாட்டு
நடப்பிதைப் பார்த்தால் நயப்பதுவா இல்லை
முறைப்பதுவா எது எங்ஙனமோ துயரே!

வலிக்கிறது நன்று வதைக்கிறது எரி
பொருளதுவின் நிலையிதுவைக்காண
துடிக்கிறது நெஞ்சு துவழ்கிறது மோச
எரிவாயு சமைப்பதற்கு இன்றி..

குடிப்பதற்கு இதமாய் சுவைத் தேநீருமில்லை
வருத்தமிது ஒன்றே போதும் நாட்டில்
இருந்த வளம்எங்கேஇருப்பு நிலை இன்றும்
வறண்டிடுமா நாம் மறைந்திடமுன் சொல்க..

இருப்பதனை விட்டு பறப்பதற்குச் சென்ற
எங்கள் குணவியல்புகளின் மாற்றம்
வளர்ச்சிகளைக் கண்டு மனஉணர்ச்சிகளை விட்டு
மனித குணம் நாம் மறக்கலானோம்.

படைத்தவனும் அதர்மங்களைப் பார்த்தான் இனி
திருத்த வழி எதுவெனவே குழம்பியவன் நின்றான்..
வருத்தமுறச் செய்வதனால் விழித்திடட்டும் நன்மை
விதைத்ததனை அறுக்க இப்படிப்பினையைக்
கொடுத்தான் உண்மை.

அன்பு நெறி காட்டி அழுக்குகளை நீக்கி
மனிதருக்குரிய நல்ல மாண்புகளை வளர்த்து
நனி நல்ல வாழ்க்கை தனை வாழ்வாங்கு வாழ
உரிய நெறி உலகத்திலே இறையடியைத் தொழுக.....

கலைஞானச்சுடர் ஸ்ரீமதி சுபாஷினி, கொழும்பு



## ஒழிப்போம் போதை அரக்கனை

**போதை எனும் கொடிய
அரக்கனின் பிடியில்சிக்கி
எம் இளம் பிஞ்சுகளின்
வாழ்வு சிதைகின்றது
எம் இளம் பிஞ்சுகளான
இளம் சந்ததியினரைக் காக்க
கட்சி பேதம்
மத பேதம்
மொழி பேதம் கடந்து
ஓரணியில் திரள்வோம்!
ஒழிப்போம் போதை அரக்கனை
வாழவைப்போம்
எம் இளம் பிஞ்சுகளை...**

சாய்செல்வம், பருத்தித்துறை.